உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 ஆவணி 14 திங்கட்கிழமை (30.08.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 277

# ஐ.நா. சபை விஜயத்தின் போது ஜனாதிபதிக்குப் பலத்த பாதுகாப்பு

## சரத் ஆதரவாளர்கள் ஆர்ப்பாட்டத்துக்குத் திட்டம்

கொழும்பு, ஓகஸ்ட் 30

ஐக்கிய நாடுகள் சபையின் பொதுக் கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக அடுத்த மாதம் நியூயோர்க் செல்லும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிர்ப்புத் தெரிவித்து நியூயோர்க்கில் உள்ள சரத் பொன்சேகாவின் ஆதரவாளர்கள் ஐ.நா.அலுவலகத்துக்கு முன்பாக ஆர்ப்பாட்டம் நடத்தத் திட்டமிட்டுள்ளனர் என்று அரச தரப்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதன் காரணமாக ஜனாதிபதிக்கான பாதுகாப்பு அங்கு பலப்படுத்தப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது. இந்தப் பாதுகாப்பு தொடர்பில் கூடிய கவனம் செலுத்துமாறு ஐ.நாவுக்கான இலங்கைக் குழுவுக்கு இலங்கை அரசு உத்தரவிட்டுள்ளது.

அடுத்த மாதம் நியூயோர்க்கில் இடம்பெறும் ஐ.நாவின் பொதுக் கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக (24ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நா. செயலாளரின் ஆலோசனைக்குழு இவ்வாரம் கூடுகிறது

நியூயோர்க், ஓக. 30

இலங்கையில் இடம்பெற்றவை எனக் கூறப்படும் மனித உரிமை மீறல் சம்பவங்கள் தொடர்பில் தமக்கு ஆலோசனை வழங்குவதற்காக ஐக்கிய நாடுகளின் பொதுச் செயலாளர் (24ஆம் பக்கம் பார்க்க)

## முஸ்லிம் காங்கிரஸுடன் கூட்டமைப்பும் பேசும்

கொழும்பு, ஓக. 30

அரசமைப்புத் திருத்தத்துக்கு அரசுக்கு ஆதரவு வழங்கினாலும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பேச்சு நடத்தும்.

ஸ்ரீல.மு.காங்கிரஸ் அரசில் இணைந்தாலும்கூட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதனுடன்பேச்சுநடத்தும். மு.காதலைவர்ரவூப் ஹக்கீம் முன்னர் அரச அமைச்சராக இருந்த போது நாங்கள் பேச்சு (24ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.பல்கலைக்கழகத்தைச் சர்வதேச தரத்துக்கு உயர்த்தும் நோக்குடன் செயற்படுகிறார் மஹிந்த

### யாழ்.வந்துள்ள அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்க ஊடகங்களுக்குத் தகவல்



யாழ்ப்பாணம், ஓக. 30

இந்திய அரசின் உதவியுடன் இலங்கையின் முன்னணிப் பல்கலைக்கழகங்களில் ஒன்றாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தை விருத்தி செய்து சர்வதேச, தரம் வாய்ந்த பல்கலைக்கழகமாக மாற்றும் நடவடிக்கையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ செயற்பட்டு வருகிறார் என்று தெரிவித்தார் உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்க.

மூன்று நாள் விஜயத்தைமேற்கொண்டு யாழ்ப்பாணம் வருகை தந்துள்ள அமைச்சர் நேற்று யாழ்.பல் கலைக்கழகத்துக்கு விஜயம் செய்தார். அமைச்சர் பல்கலைக்கழகத்தின் பல்வேறு தரப்பினரையும் சந்தித்துக் கலந்துரையாடிய பின்னர் ஊடகவியலாளர்களைச் சந்தித்தபோதே மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு :- (24ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.தே.க. - முஸ்லிம் காங்கிரஸுடன் அடுத்த வாரம் பேச்சு நடத்தும்

கொழும்பு, ஓக. 30

அரசமைப்புத் திருத்த யோசனைகளுக்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவு வழங்கத் தீர்மானம் எடுத்துள்ளமை தொடர்பாக அக்கட்சியுடன் ஐ.தே.க. அடுத்த வாரம் பேச்சு நடத்தும் என்று ஐ.தே.கவின் பொதுச் செயலாளரும் எம்.பியுமான திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியவை வருமாறு:-

அரசமைப்புத் திருத்தத்துக்கு ஆதரவு வழங்க முஸ்லிம் காங்கிரஸ் தீர்மானம் எடுத்தமை குறித்து எமக்கு அறிவிக்கப்படவில்லை. ஊடகங்கள் வாயிலாகவே நாம் அதை அறிந்தோம்.

முஸ்லிம் காங்கிரஸ் ஐக்கிய தேசிய முன்னணியுடன் இணைந்திருக்கும் கட்சிகளுள் ஒன்று. அந்த வகையில் முஸ்லிம் காங்கிரஸ் தனது (24ஆம் பக்கம் பார்க்க)

## அரசமைப்புத் திருத்த யோசனைகள் மூன்று கட்டங்களாக நாடாளுமன்றில்

### முதற்கட்டத் திருத்தம் ஜனாதிபதியின் பதவிக்காலம் பற்றியது

கொழும்பு, ஓக. 30

அரசமைப்புத் திருத்தங்களை மூன்று கட்டங்களாக நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளது ஏனவும் முதற்கட்ட அரசமைப்புத் திருத்தங்கள் செப்டெம்பர் மாதம் முற்பகுதியில் முன்வைக்கப்படும் எனவும் அரச வட்டாரங்களில் இருந்து தெரியவருகிறது.

அரசமைப்புத் திருத்தங்கள் இவ்வாறு படிப்படியாக முன்னெடுக்கப்பட்டு பூர்த்தியானவுடன் இலங்கை மக்களுக்கு ஏற்றதொரு அரசமைப்புக் கிடைக்கும் எனவும் சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் தெரிவித்தார்.

முதற்கட்ட அரசமைப்புத் திருத்தம் ஜனாதிபதி இரு தடவைகளுக்கு மேல் பதவி வகிக்கக்கூடிய வகையிலும் 17ஆவது அரசமைப்புத் திருத்தத்திலுள்ள சில ஷரத்துகளை மாற்றுவதற்கும் வழி செய் கின்றது.

அரசு மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தை நாடாளுமன்றத்தில் பெற்றுள்ளமையால் அரசமைப்புத் திருத்தங்களை மிக எளிதாக நிறைவேற்றக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது எனவும் அரச வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (ஓ-சி)



## கிளிநொச்சியில் 48 ஆயிரம் ஏக்கரில் காலபோக நெற்செய்கைக்கு அனுமதி

### நேற்று அங்கு வருகைதந்த அமைச்சர் பஸில் அறிவிப்பு

கிளிநொச்சி, ஓக. 30

கிளிநொச்சி மாவட்டத்தில் இம்முறை 48 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் காலபோக நெற்செய்கையை மேற்கொள்ள மக்களுக்கு அனுமதி வழங்கப்பட்டிருப்பதுடன் அவர்களுக்கான மானிய உதவிகளும் வழங்கப்படவுள்ளன. இத் தீர்மானம் கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற மீள்குடியேற்றம் மற்றும் விவசாய, உட்கட்டுமானப் பணிகள் தொடர்பான மீளாய்வுக் கூட்டத்தில் எடுக்கப்பட்டுள்ளது என்று கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி றூபாவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

(23ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்புக்கு இன்று வரும் நிருபமாராவ் வியாழனன்று மஹிந்தவுடன் பேச்சுவார்த்தை

### மீள்குடியமர்ந்த மக்களை நாளை சந்திக்கிறார்

கொழும்பு, ஓக. 30

இந்திய வெளிவிவகாரச் செயலாளர் நிருபமாராவ் நாளை வவுனியா, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் மீள்குடியமர்த்தப்பட்டவர்களை நேரில் சென்று பார்வையிடுவார் என இந்தியத் தூதரக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

நிருபமாராவ் நான்கு நாள் விஜயம் மேற்கொண்டு இன்று இலங்கைவருகின்றார்.

யுத்தத் தால் இடம் பெயர்ந்து இதுவரை மீள்குடிய மர்த்தப்படா மல் முகாம்களில் உள்ள மக்களையும் இவர் பார்வையிடுவார். வவுனியா விஜயத் தின் போது அவர்களைச் சந்தித்து அவர்களது பிரச்சினைகளையும் கேட்டறிவார்.

எதிர்வரும் வியாழக்கிழமை

(24ஆம் பக்கம் பார்க்க)





உள்ளூர் நிகழ்வுகளை உலகறியச்செய்வோம்!

நல்லைக் கந்தனின்

உற்சவக் காலத் திருக்காட்சிகள்

தினமும் உங்கள் உதயனின்

வலைத் தளத்திலும்....

www.uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிதியியல் சார் கம்பனியில் நிலவும் வெற்றிடத்துக்கான விண்ணப்பம் கோரல்

உலக அங்கீகாரத்துடனும் உலகின் பல பாகங்களிலும் எமது கிளையினை விஸ்தரிக்கும் எமது நிறுவனம் இன்று இலங்கையிலும் 22இற்கு மேற்பட்ட கிளைகளினூடாக சேவையினை வழங்கிவரும் வேளையில் கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய பிரதேசங்களில் சேவையினை வழங்கும்முகமாக O/L OR A/L சித்தியடைந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. (இளைஞர்கள், யுவதிகள், ஒய்வுபெற்ற ஊழியர்கள் உள்ளடங்கலாக)

குறிப்பு : உங்கள் சுயவிவரக் கோவையடங்கலாக கீழ்க்காணும் முகவரிக்கு 15.09.2010இற்கு முன்னர் அனுப்பி வைக்கவும்.

மே/பா : விளம்பர இல. 4065,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (98247)


## கண்ணீர் அஞ்சலி

யாழ்.மயிலணி சைவ மகாவித்தியாலய
ஆசிரியை
செல்வி ம. தனேஸ்வரியின்
அன்புத் தந்தை

### கந்தையா மனுவல்



அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் ஆசிரியைக்கும் அவரது குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யா/ மயிலணி சைவ ம.வி
., சுன்னாகம். பாடசாலைச் சமூகம்.

## ஆத்ம சாந்திப் பிரார்த்தனை தசாக கிருஹயக்ஞ அழைப்பு

நிகழும் விகிர்தி வருடம் ஆவணித்திங்கள் 5 ஆம் நாள் (21.08.2010) சனிக்கிழமை காலை பூர்வபக்க திரயோதசி திதியில் சிவபதம் அடைந்த எமது குடும்பத்தலைவி

### ஸ்ரீமதி ஜெகதீஸ்வரி (ஜெயா) கிருஷ்ணமூர்த்திக்குருக்கள்



அவர்களின் ஆத்ம சாந்திக் கிரியைகள் பின்வரும் தினங்களில் நடைபெறும்.
30.08.2010 திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு தசாகம்
31.08.2010 செவ்வாய்க்கிழமை காலை ஏகோதிஸ்டம், மாசிகம்
01.09.2010 புதன்கிழமை காலை சபிண்டீகரணம்
02.09.2010 வியாழக்கிழமை காலை கிருஹயக்ஞம்

மேற்படி கிரியைகளில் பங்குபற்றி அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் சமாராதனையிலும் (போசனத்திலும்) கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

கிரியாகுரு:- பிரம்மஸ்ரீ ஐ.ஞானக்குருக்கள் (வைதீக கிரியா வித்தகர்) மட்டுவில்
சிவஸ்ரீ தி. கிருஸ்ணமூர்த்திக்குருக்கள் (ஆசிரியர்).

முதலாம் கட்டைபாடி,
கல்வயல், சாவகச்சேரி,
தொ.பே.: 0213734430

தகவல்:
கணவர், மகன், மாமி

## மரண அறிவித்தல்கள்

### செபஸ்ரியாம்பிள்ளை தொம்மைப்பிள்ளை



சில்லாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செபஸ்ரியாம்பிள்ளை தொம்மைப்பிள்ளை 28.08.2010 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆரோக்கியத்தின் அன்புக் கணவரும் யோசப் இரத்தினம், நீக்கிலஸ், காலஞ்சென்ற விக்ரர் மற்றும் சேவியர், யோகராஜா, யோகராணி ஆகியோரின் அன்புத் தந்தையும் அனற், அஷம்ரா, ஜோகம்மா, விக்ரர் ஆகியோரின் மாமனாரும் சஜந்தன், அஜந்தன், அஜந்தா, சர்மிலி, டெனிஸ்ரன், சுகிர்தா, கிருஷாந்தன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.08.2010) திங்கட்கிழமை பி.ப. 3 மணிக்கு புனித கதிரைமாதா ஆலயத்தில் இரங்கற் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு சில்லாலை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சில்லாலை,
பண்டத்தரிப்பு. (102666)

தகவல் :
யோசப் இரத்தினம் (மகன்).

### திருமதி பொன்னுத்துரை ஐயர் நாகரத்தினம்மா

துன்னாலை ஞானவைரவர் கோயிலடியைப் பிறப்பிடமாகக் கொண்ட காலஞ்சென்ற பொன்னுத்துரைஐயரின் மனைவி நாகரத்தினம்மா (கனகம்மா) நேற்று (29.08.2010) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் காலமாகிவிட்டார்.

அன்னார் ஸ்ரீதரக்குருக்கள், அமரர் பேரானந்தசர்மா (ஆனந்தி ஐயா), ஐயாத்துரைஐயர் ஆகியோரின் தாயும் அமரர் பட்டம்மா, சதாதேவியம்மா, சந்தானலட்சுமி (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியும் துளசிஸ்வரக்குருக்கள் (சுவிஸ்), கஜமுகசர்மா (லண்டன்), கோகுலசர்மா( கொழும்பு), ஜீவநாதசர்மா, ரகுராமசர்மா, மதுசன் ( சுவிஸ்) விதுசன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(30.08.2010) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் ஒரு மணியளவில் பூதவுடல் தியான்காடு இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

இந்திரம்மன் கோவிலடி,
துன்னாலை. (சி/570453)

தகவல்:
பே. ரகுராமசர்மா
(பேரன்).

# பல்கலைக்கழக விரிவுரையாளர் போராட்டம் ஒத்திவைக்கப்பட்டது

கொழும்பு, ஒக. 30

சம்பள அதிகரிப்பை வலியுறுத்தி பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் இன்று நடத்தவிருந்த வேலைநிறுத்தப் போராட்டம் அடுத்தமாதம் ஏழாம் திகதிவரை ஒத்திப்போடப்பட்டுள்ளது.

அகில இலங்கை பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சம்மேளனத்தின் உத விச் செயலாளர் டாக்டர் நிர்மல் ரஞ்சித் தேவசிறி இது தொடர்பாகக் கூறியவை வருமாறு:-

எமது சம்பளப் பிரச்சினை தொடர்பாக நாம் ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்கவுடன் அண்மையில் பேச்சு நடத்திய போது ஓகஸ்ட் மாதம் 25ஆம் திகதியளவில் எமது பிரச்சினை தீர்க்கப்படும் என்று உறுதியளித்தார்.

இதுபோல் நாம் ஜனாதிபதி மற்றும் பஸில் ராஜபக்ஷ ஆகியோருடன் பேச்சுகளை நடத்தியிருக்கின்றோம். எமது சம்பளப் பிரச்சினை தீர்க்கப்படும் என்று வாக்குறுதிகள் வழங்கப்பட்டனவே தவிர தீர்க்கப்படவில்லை.

எமது இந்த நீண்ட கால சம்பளப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் நோக்கில் இந்த மாதம் 30ஆம் திகதி வேலைநிறுத்தத்தில் ஈடுபட நாம் தீர்மானித்தோம்.

எமது பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இன்னும் ஏழு நாள்கள் அவகாசம் வழங்குமாறு ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க எம் மிடம் எழுத்துமூலம் கேட்டிருந்தார். இதனால் அடுத்த மாதம் ஏழாம் திகதி வரை எமது வேலைநிறுத்தப் போராட்டத்தை ஒத்திப் போடத் தீர்மானித்துள்ளோம்.

இதேவேளை, அடுத்த மாதம் 2ஆம் திகதி எமது விரிவுரையாளர்கள் நாடளாவிய ரீதியில் எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு எமது பிரச்சினையை அரசின் கவனத்துக்குக் கொண்டுவருவர். - என்றார்.


**ஒத்துமாறல்**

வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த ஆரம்பக்கல்வி பயிற்றப்பட்ட ஆசிரியர் ஒருவர் அதே பாடப் பகுதியில் உள்ள கிளிநொச்சி [illegible] ஆசிரியர் ஒருவருடன் ஒத்துமாற விரும்புகிறார். ஒத்துமாற விரும்புபவர்கள் தொடர்புகொள்க
0774650911, 0113050906

**The Royal College of Jaffna**

3 மாதங்களில் சரளமாக ஆங்கிலத்தில் கதைக்கப்பயில
By: ந.விக்னேஸ்வரன்
ஆச்சாரி, 426, K.K.S. வீதி, யாழ்ப்பாணம்.
பிளாக் வீதி, சங்கானை.


## பேருவளை விபத்தில் இருவர் உயிரிழப்பு

கொழும்பு, ஒக. 30

பேருவளையில் நேற்றுமுற்பகல் இடம்பெற்ற வாகன விபத்தில் இரண்டுபேர் சம்பவ இடத்திலேயே பரிதாபகரமாக உயிரிழந்தனர்.

அத்துடன், மேலும் மூவர் பலத்த காயங்களுக்குள்ளான நிலையில் களுத்துறை நாகொட வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

ஓட்டோவில் பயணித்த சிறுமியும் அதன் சாரதியுமே இவ்விபத்தில் உயிரிழந்தவர்கள் எனப் பொலிஸார் தெரிவித்தனர். இந்த விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை பேருவளைப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

(ஒ-சி)


**LAVA HOSPITAL**

75, கோயில் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே. 222 4333
www.lavahospitals.com/blog

ஸ்கான் (Scan), ECG கணனி மயப்படுத்தப்பட்ட ஆய்வுகூட வசதிகள் மூலம் மேற்கொள்ளப்படுகிறது.

Basic Body Checkup
அடிப்படை உடற் பரிசோதனைகள்

★ உடல் பருமனானவர்களைப் பரிசோதிப்பதற்கான
Obesity package - 1200/=


## கண்ணீர்க் காணிக்கை

(அருளகம் பெண்கள் இல்ல பாதுகாவலர்)
இணுவில் கிழக்கில் வசித்த

### முத்தன் இலட்சுமணன்



அவர்களின் திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரது ஆத்மசாந்திக்காக இறைவனை வேண்டுகின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்: வில்லியம் மேதர் மெமோறியல் அருளகம் பெண்கள் இல்லம், பிள்ளைகள், நிர்வாகத்தினர்.

## கண்ணீர்க் காணிக்கை



(அருளகம் பெண்கள் இல்லப் பாதுகாவலர்)
இணுவில் கிழக்கில் வசித்தவரான

### முத்தன் இலட்சுமணன்

அவர்களின் திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரது ஆத்ம சாந்திக்காக இறைவனை வேண்டுகிறோம்.

உங்கள் பிரிவால் துயருறும்: வில்லியம் மேதர் மெமோறியல் அருளகம் பெண்கள் இல்லம், பழைய மாணவர்கள். (102661)

## மரண அறிவித்தல்

### முத்து இலட்சுமணன்



தாவடியைச் சேர்ந்தவரும் தியேட்டர் ஒழுங்கை, இணுவிலை வசிப்பிடமாகக்கொண்டவருமான முத்து இலட்சுமணன் 27.08.2010 வெள்ளிக் கிழமை அகாலமரணமானார்.

அன்னார் தாவடியைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான முத்து - சின்னக்குட்டி தம்பதியினரின் மகனும் இணுவிலைச் சேர்ந்த காலஞ்சென்ற கதிரவேலு - செல் லம்மா தம்பதியினரின் மருமகனும் காலஞ்சென்ற தவமணியின் அன்புக் கணவரும், சர்வானந்தன் (லண்டன்), நித்தியானந்தன் (இத்தாலி), ஜெயானந்தன், ஜெயக்குமாரி, சிவகுமாரி (பூண்டுலோயா) ஆகியோரின் தந்தையும் தர்சா, வரதராணி, பிரேமச்சந்திரன், தமிழ்ச்செல்வம் ஆகியோரின் மாமனாரும் மேனன், நிலுஜன், யசிந்தன், யதுசன், ஜானுஜா, கஜீவன், சுவேதா ஆகியோரின் அன்புப் பேரனும் கந்தையா, காலஞ்சென்றவர்களான சின்னத்துரை, அப்புத்துரை மற்றும் இராமு, காலஞ்சென்ற இரத்தினம் மற்றும் வடிவேலு, முருகையா, காலஞ்சென்ற கணேசு ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.08.2010) திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நல்லடக் கத்துக்காக இணுவில் காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உற வினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தியேட்டர் ஒழுங்கை,
இணுவில்.
T.P.: 0778691009 (யா/570451)

தகவல் :
சந்திரன்
(படையப்பா).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## காலம் கடத்தி வருவதன் உள்நோக்கம்...

இந்திய வெளிவிவகார அமைச்சின் செயலாளர் நிருபமா ராவ் மூன்றுநாள்விஜயமாக இன்று திங்கட்கிழமை இலங்கை வருகிறார். அமைச்சர் பஸில் ராஜபக்ஷ குழுவினரின் புதுடில்லி விஜயம் முடிந்த கையோடு இந்த விஜயம் இடம்பெறுவதற்கான ராஜதந்திர ரீதியான காரணங்கள் பலவாக இருக்கும்.

நிருபமா ராவ்வின் விஜயத்தின் பிரதான நோக்கம், வன்னிப் போரினால் பாதிக்கப்பட்ட மக்களை மீளக் குடியேற்றுவதில் இதுவரை ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தை நேரில் கண்டறிவதே என்று சொல்லப்படுகின்றது.

ஆனால் அதற்கும் அப்பால், மேலதிகமாகப் பல அலுவல்களை இங்கு மேற்கொள்வார் எனச் செய்திகள் தெரிவிக்கின்றன. அவற்றில் முக்கியமான ஒன்று, வன்னிப் போரின்போது இடம்பெயர்ந்த, தமிழ் மக் களுக்கு இந்திய அரசு நிர்மாணித்துக் கொடுக்கவுள்ள 50,000 வீடுகள் சம்பந்தப்பட்ட பணிகளை முடுக்கிவிடுவதாகும்.

இந்திய அரசின் திட்டப்படி கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் தலா 12,500 வீடுகளும், யாழ்ப்பாணம், மன்னார் மாவட்டங்களில் 15,000 வீடுகளும் வவுனியாவில் 10,000 வீடுகளும் நிர்மாணிக்கப்படும். இந்த வீடுகளை மும்பாயை தலைமையகமாகக் கொண்ட நிறுவனம் ஒன்று கட்டிக்கொடுக்கும்.

இந்தியா தனது அன்பளிப்பு வீடுகளை எந்தெந்த இடங்களில் அமைத்துக் கொடுக்க வேண்டும் என்ற விவரத்தையும் பயனாளிகள் பட்டியல் விவரத்தையும் மட்டும் இலங்கை அரசு வழங்கினால் போதும் என்பதே ஏற்பாடு.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இவ்வருடம் ஜூன் மாதம் ஒன்பதாம் திகதி - அதாவது மூன்று மாதங்களுக்கு முன்னர் - இந்தியா சென்றவேளை, கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தம் இந்த வரையறைகளை விதித்துள்ளது.

இந்தியா, வடபகுதியில் அமைக்கவுள்ள வீடுகளை நிர்மாணிக்கும் பணியில் இருபதினாயிரம் (20,000) இந்தியர்கள் ஈடுபடுத்தப்படுவர். ஏற்கனவே வடக்கில் இந்தியா அமைத்துக் கொடுக்கும் ரயில் பாதைகளின் வேலைகளிலும் இந்தியர்களே ஈடுபட்டு வருகின்றனர்.

இவற்றுடன் காங்கேசன் துறைமுகத்தின் அபிவிருத்தி வேலைகளையும் விமான நிலைய அபிவிருத்தி வேலைகளையும் காங்கேசன் தொழிற்சாலையின் மீள்கட்டுமானத்தையும் இந்தியாவே செய்யவுள்ளது. அதன்போதும் இந்தியத் தொழிலாளர்களே வருவிக்கப்படுவர்.

திருகோணமலை மாவட்டத்தில் சம்பூரில் அனல் மின்சார நிலையம் ஒன்றையும் இந்தியா அமைக்க ஏற்பாடாகியுள்ளது. அந்தப் பணிக்கும் இந்தியத் தொழிலாளர்களே வருவிக்கப்படவுள்ளனர்.

இந்திய உதவிகளுக்கு மேலாக, இலங்கையின் அபிவிருத்தித் திட்டங்களுக்கு சீனாவும் உதவி வருகின்றது. அம்பாந்தோட்டை துறைமுக அபிவிருத்தி, வடக்கில் நெடுஞ்சாலைகள் அமைப்பது ஆகிய திட்டங்களில் ஏற்கனவே சீனத் தொழிலாளர்கள் பணி புரிந்து வருகின்றனர்.

வெளிநாடுகள், நாட்டின் அபிவிருத்தி கருதிச் செய்யும் வேலைகளில் தத்தமது நாட்டு தொழிலாளர்களை அமர்த்துவதற்கு பல காரணங்கள் முன்வைக்கப் படுவது உண்டு. சம்பந்தப்பட்ட வேலைகளில் தத்தமது நாட்டவர்களை வேலைக்கு அமர்த்துவதால் விரைவாகச் செய்து முடிக்கலாம். இந்த நாட்டுத் தொழிலாளர்கள் அந்தப் பணியில் பரிச்சயமும் பயிற்சியும் இல்லாதவர்கள், அவர்களை வைத்து தொழில் செய்வதால் மொழிப் பிரச்சினை உண்டு என்று காரணங்கள் பலவகையறாக்களில் தெரிவிக்கப்படுவது உண்டு. ஒரு வகையில் இவை ஏற்றுக் கொள்ளக் கூடியவை என்றாலும் சம்பந்தப்பட்ட நாடுகள் அரசியல் 'உள்நோக்கங்களை' வைத்துக் கொண்டு இயலுமான பணிகளுக்கும் எமது நாட்டவரை வேலைக்கு அமர்த்து வதைத் தவிர்த்து வருகின்றன.

மிகக் குறிப்பாக சீனாவும் இந்தியாவும் இலங்கை யில் தங்களின் நலன்களை (மிகக் குறிப்பாக தம்மி டையே உள்ள ராஜீகப் போட்டிகளை) விஷேடமாக பாதுகாப்புத் துறை சார்ந்த தமது வலிமையைக் காட்டும் மைதானமாக இலங்கையை பயன்படுத்திக் கொள்வதற்கு ஏட்டிக்குப் போட்டியாக செயற்பட முனைந்துள்ளன.

இந்தியாவும் சீனாவும் ஒன்றை மற்றது பரம எதிரியாகப் பார்க்கின்றன. பிராந்தியத்தின் வல்லரசு யார் என்ற போட்டியில் அவை (வெளிப்படையாகக் காட்டிக் கொள்ளாவிடிலும்) முட்டி மோதும் நிலைக்கு வந்துள்ளன. அது அவர்களின் 'தனிப்பட்ட' விவகாரம் என்று கொள்ளலாம். போகட்டும். இரண்டு நாடுகளையும் இருபக்கத்திலும் இருத்தி அவற்றிடம் இருந்து தமக்குத் தேவையானதைப் பெற்றுக் கொள்வது கெட் டித்தனமான ராஜதந்திரம் என்று இலங்கை அரசுத் தலைவர் கருதுகின்றார்.

தமது 'அனுசரணை'யில் நடத்தும் ராஜதந்திரக் குத்துச் சண்டைப் போட்டியில் இரண்டு நாடுகளையும் மோத விட்டு எந்தத் தரப்பையும் வெற்றிகொள்ள விடாது அவைகளைப்புறும் வகையில் நீட்டி, தனக்குரிய நலன்களைப் பெறும் யுக்தியில் அவர் ஈடுபட்டிருக்கிறார்.

அதனைப் புரிந்து கொண்ட இந்தியா எவ்வாறாயினும் தானே வெல்ல வேண்டும் என்ற நோக்கத்துடன் செயற்படுகிறது.

அதனாலேயே இனப்பிரச்சினையைத் தீர்த்து வைப்பதில் தனக்குரிய பங்கை உரியவாறு நல்கி, இலங்கையை 'உசுப்பிச்' செய்விக்க முடியாதபடி பலவீனமாகி உள்ளது இந்தியா. இனப்பிரச்சினையைத் தீர்ப்பதில் உண்மையான, தீவிரமான ஈடுபாடு காட் டாமலும் அடக்கி வாசித்து வருவதற்கும் காரணம் அதுவே. தமிழர் விவகாரத்தில் வேகம் கொள்ளாமல், சீனாவை வென்றுவிட வேண்டும் என்பதால் காலங்கடத்தும் ராஜதந்திரத்தை கையாள்கிறது. தமிழர் தரப்புக்கு ஒன்றும், இலங்கை அரச தரப்புக்கு ஒன்றுமாக இரட்டைத் தொனியில் பேசிவருகிறது. கூட்டிக் கழித்துப் பார்த்தால் இதுவும் ஒரு வகை இரட்டை வேடமே!

# அரசுடன் இணையும் நோக்கம் எமக்கு இல்லை; அரசமைப்புத் திருத்தத்துக்கே எங்கள் ஆதரவு

நேற்று 29.08.2010 அன்று சண்டே ரைம்ஸ் எழுதியிருந்த அரசியல் விமரிசனத்திலிருந்து ஒரு பகுதி

ஹக்கீமுக்கு ஒரு சங்கடமான நிலைமை. அவர் கட்சியைச் சேர்ந்த குறைந்தது மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்கள் ராஜபக்ஷவின் அரசமைப்புத் திருத்தங்களை ஆதரிக்க விரும்புகிறார்கள். அத்துடன் அரசுடன் இணைந்து கொள்வதையும் விரும்புகிறார்கள்.

அவர்கள் கட்சியிலிருந்து பிரிந்து செல்வதை அனுமதிப்பதா? அல்லது அரசின் அரசமைப்பு மாற்ற முயற்சிகளை எல்லாருமாக சேர்ந்து ஆதரிப்பதா என்பதே ஹக்கீமுக்குள்ள அந்தச் சங்கடம்.

கொம்பனிவீதியிலுள்ள கட்சியின் தலைமைக் காரியாலயமான தாருஸ்ஸலாம் மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை முஸ்லிம் காங்கிரஸ் தலைவர்கள் கூடி விவாதித்தார்கள். பின்னர் ஹக்கீம் பத்திரிகையாளர் கூட்டம் ஒன்றை நடத்தினார்.

கட்சியின் உயர்மட்டக் குழு கூடி விவாதித்ததின் பின்னர் அரசின் அரசமைப்புத் திருத்தங்களை ஆதரிப்பது என்று முடிவு செய்தனர். நாங்கள் அரசில் சேரப்போவதாக சில ஊடகங்கள் தெரிவித்துள்ளன. அது சரியல்ல. அப்படியான நோக்கம் எமக்கு இல்லை. இந்த வாரம் முற்பகுதியில் நான் ஜனாதிபதியுடன் கண்டியில் ஆலோசனை நடத்தினேன். அதன் பிறகே எமது கட்சி உயர்மட்டத்துடன் ஆலோசனை நடத்தினேன். இரண்டு தினங்களுக்கு முன் ஜனாதிபதியுடன் விவாதிக்கப்பட்ட அரசமைப்பு மாற்றங்களை ஆதரிப்பதென கட்சி முடிவு செய்தது. இரண்டு தடவைகள் ,பதவியில் இருந்த ஒருவர் ஜனாதிபதிப் பதவிக்கு போட்டியிட முடியாது என்ற கட்டுப்பாடு சம்பந்தமானது இது. அரசமைப்புத் திருத்தம் மூலமாக இந்த அம்சம் அகற்றப்பட்டு விடும்.

இன்னொரு திருத்தம் என்னவென்றால் இப்போதுள்ள அரசமைப்புச் சபைக்குப் பதிலாக வேறொரு முறையை செயல்படுத்துவதாகும். இவைகளை ஆதரிப்பதென நாங்கள் முடிவு எடுத்துள்ளோம். இதன்படி எட்டு முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்கள் அரசமைப்புத் திருத்தங்களை ஆதரிப்பார்கள் என்பதாகும்.

### எதிர்காலத்தில் எப்படி இயங்குவார்கள்?

நாம் எமது கட்சியின் அடையாளத்தைப் பாதுகாத்துக் கொள்வோம். அவ்வாறான முக்கிய தீர்மானங்கள் எடுக்கும்போது எமது அடையாளத்தைப் பாதுகாத்துக் கொள்வோம். பல்வேறு விடயங்களாலும் நாம் எமது சொந்த நிலைப்பாட்டை வெளிப்படுத்துவோம். எதிர்காலத்திலும் கூட நிலைமைகளைப் பொறுத்து அது அமைவதாய் இருக்கும். அண்மைக்கால பேச்சுக்களின் போதும் இதனை நாம் காணக் கூடியதாய் இருந்தது.

மூன்றில் இரண்டு பெரும்பான்மை பெறுவதற்காக எமது ஆதரவை அரசாங்கம் அடிக்கடி எதிர்பார்க்க முடியாது.

### விவாதிக்கப்பட்ட விடயங்கள் என்ன?

அரசமைப்புத் திருத்தங்கள் தொடர்பாக ஜனாதிபதி சில முன்மொழிவுகளை முன்வைத்தார். இவைகள் தொடர்பாக எமது உயர்மட்டத் தலைவர்களுடன் அவை பற்றி நான் விவாதம் நடத்தினேன்.

அதிகார பகிர்வு விடயத்திலும் ஜனாதிபதி ஒரு கருத்தைக் கொண்டிருக்கிறார். 17 ஆவது அரசமைப்புத் திருத்தம் குறித்தும் சில முன்மொழிவுகளை அவர் வெளியிட்டார்.

### நிறைவேற்று அதிகாரம்

உங்கள் கட்சி நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி பதவியை எதிர்க்கிறது அல்லவா?

நாம் மட்டுமல்ல இந்த அரசாங்கத்தை ஆதரித்த சில கட்சிகள் கூட ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரங்களை ஒழிக்க விரும்புகின்றன. அந்த வகையில் பார்க்கையில் இந்தத் திருத்தங்கள் மக்கள் ஆணைக்கு அப்பாற்பட்டவை.

ஜனாதிபதியுடன் ஐ.தே.க நடத்திய பேச்சுக்களால் எதுவித முன்னேற் றமும் ஏற்பட்டி ருப்பதாக எமக்குத் தெரிய வில்லை. அப்படி முன் னேற்றம் ஏற்பட்டிருந் தால் நாங்கள் மகிழ்ச்சியடைந்திருப் போம். எதுவானாலும் இப்போதைய நிலைமையை உத்தேசித்து அரசியல் ரீதியில் நாங்கள் இந்த முடிவை எடுத்திருக்கிறோம் என்றார்.

## நிலைப்பாட்டை விளக்குகிறார் ரவூப் ஹக்கீம்

இந்த திருப்பமானது ஐ.தே.கட்சிக்கும் அதன் தலைவருக்கும் ஒரு சிக்கலை ஏற்படுத்திவிட்டிருக்கிறது. கடந்த ஏப்ரல் தேர்தலின் போது ஹக்கீமும் அவரது 5 ஏனைய உறுப்பினர்களும் ஐ.தே. கட்சி அடையாளத்தில் போட்டி யிட அனுமதிக்கப்பட்டனர். இதற்கு மேலதிகமாக இரு முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்களை ஐ.தே. கட்சி தேசிய பட்டியலில் போட்டியிட ரணில் விக்கிரமசிங்க நியமனம் கொடுத்தார். அண்மையில் நடைபெற்ற அக் கட்சியின் சீர்திருத்த குழுவும் கூட ஐ.தே.கட்சி தனது வாக்காளர் வங்கியை சிறுபான்மைக் கட்சிகளின் உறுப்பினர்களுக்கு விட்டுக் கொடுத்தமை பற்றி விவாதித்துள்ளது. எதிர் காலத்தில் அவ்வாறான முடிவுகள் எடுக்கும் போது கட்சியின் காரியக் குழுவின் ஆலோசனை பெற வேண்டும் என்று தீர்மானம் எடுத்தது.

### முஸ்லிம்கள் கொதிப்பு

ஐ.தே.கவிலுள்ள சிறுபான்மைத் தமிழர்களும் முஸ்லிம்களும் குறிப்பாக முஸ்லிம்கள் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் நடத்தை குறித்து கொதிப்படைந்திருக்கிறார்கள். அவர்கள் ஐ.தே.கட்சியின் ஆதரவில் நாடாளுமன்றத்துக்குள் நுழைந்து விட்டு அரசாங்கத்தை இப்போது ஆதரிக்கத் தொடங்கியுள்ளார்கள் என்று அவர்கள் ஆத்திரம் கொண்டிருக்கிறார்கள். இதை ஒரு முன்மாதிரியாக எடுத்துக் கொண்டு மற்றவர்களும் அரசாங்கத்தை ஆதரிக்க முன்வரலாம். அதனை நியாயப்படுத்தவும் செய்யலாம்.

ஹக்கீமுக்கு எது சரியோ அது எங்களுக்கும் சரியானதே என்று அவர்கள் விவாதிக்கலாம்.

கடந்த திங்கட்கிழமை ஐ.தே.க.வுடன் நடந்த ஆலோசனைகளின் போது இப்போதிருக்கும் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறை தொடர வேண்டும் என்று தமது கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் விரும்புவதாக ஜனாதிபதி ஐ.தே.கட்சித் தலைவர்களிடம் தெரிவித்தார். இதற்கான பின்புலன்களை அமைச்சர் பசில் ராஜபக்ஷ விளக்கினார். இம்மாத முற்பகுதியில் பேருவளையில் இடம் பெற்ற நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் அமைச்சர்களுக்குமான செயல் அமர்வு பற்றியும் அங்கே அவர்கள் தெரிவித்த கருத்துக்களையும் அவர் எடுத்துக் கூறினார். இந்த செயலமர்வில் ராஜபக்ஷ ஜனாதிபதி பதவிக்கு மேற்கொண்டும் போட்டியிட வேண்டும் என அவர்கள் தெரிவித்ததாகவும் பசில் கூறினார். இந்த வகையில் நிறைவேற்று அதிகாரமுள்ள பிரதம மந்திரி பதவி உருவாக்கப்படுவதை அவர்கள் விரும்பவில்லையென்று ஜனாதிபதியானவர் நொண்டிவாத்தாக மாறுவதை அவர்கள் எதிர்க்கிறார்கள் என்று பசில் தெரிவித்தார்.

முன்னதாக ஐ.தே.க தலைவரும் ஜனாதிபதி ராஜபக்ஷவும் நிறைவேற்று அதிகாரமுள்ள பிரதம மந்திரி பதவியை உருவாக்குவதற்கு கொள்கை ரீதியில் இணங்கியிருந்தார்கள்.

நிறைவேற்று அதிகாரமுள்ள பிரதம மந்திரி தொடர்பாக ஆறு அம்ச குறிப்பொன்றை விக்கிரமசிங்க ஜனாதிபதிக்கு வழங்கியிருந்தார். அவை வருமாறு,

1. அமைச்சரவை மூலமாக மக்களால் தெரிவு செய்யப்படும் பிரதம மந்திரியிடம் நிறைவேற்று அதிகாரங்கள் இருக்கும்.
2. நாடாளுமன்றத்துக்கான பொதுத்தேர்தலின் போதே பிரதம மந்திரியும் தெரிவு செய்யப்படுவார்.
3. பிரதமமந்திரியே அரசின் தலைவராகவும் நிறைவேற்று அதிகார தலைவராகவும் இருப்பார்.
4. அமைச்சரவையானது நாடாளுமன்றத்துக்கு முழுமையாகப் பொறுப்புக் கூறுவதாக இருக்கும். அமைச்சரவையின் தலைவராக பிரதம மந்திரி இருப்பார்.
5. அமைச்சரவையின் தலைவராக பிரதமமந்திரி இருப்பார்.
6. இப்போதைய அரசாங்கம் பெரும்பான்மை பலம் கொண்ட ஸ்திரமான அரசாக இருக்கின்றது. நாம் ஆலோசித்துள்ள புதிய அமைப் பிலும் உறுதியான அரசு அமையும். எனவே இஸ்ரேல் அமைப்பு முறையில் ஏற்பட்டுள்ள பிரச்சினை இங்கு தோன்ற மாட்டாது.

**தமிழில்: கோகுலன்**

### மூன்றில் இரண்டு பெரும்பான்மை

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அரசாங்கத்தின் அரசமைப்புத் திருத்தங்களை முழுமையாக ஆதரிப்பதென முடிவெடுத்திருப்பதின் காரணமாக அரசுக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை மிக எளிதாக கிடைத்து விடும்.

ஏற்கனவே பழனி திகாம்பரம் (நுவரேலியா மாவட்டம்), பிரபா கணேசன் (கொழும்பு மாவட்டம்) எம்.பிக்கள் அரசுடன் இணைந்ததன் காரணமாக அதன் பெரும்பான்மை 144 இல் இருந்து 146 ஆக உயர்ந்துள்ளது. அத்துடன் ஐ.தே.க வின் கண்டி மாவட்ட எம்.பி அப்துல் காதரும் அரசுக்கு ஆதரவாக வாக்களிப்பார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. முஸ்லிம் காங்கிரஸின் எட்டு வாக்குகளும் காதரின் வாக்கும் சேர்ந்தால் சபாநாயகரின் வாக்கை விடுத்து 154 வாக்குகள் சாதகமாக அமையக் கூடும். இது மூன்றில் இரண்டைவிட 4 வாக்குகள் அதிகமாகும். அதிகமான உறுப்பினர்கள் ஐ.தே.கவிலிருந்து விலகிச் செல்வதானது அக்கட்சியின் விவகாரங்களை அதிகரித்துக் கொண்டிருக்கின்றது.

கடந்த திங்கட்கிழமை ஐ.தே.க. வின் பிரதித் தலைவர் கருஜயசூரியாவின் கொழும்பு வாசஸ்தலத்தில் அக்கட்சியின் தலைவர்கள் சிலர் கூடி ஆலோசனைகள் நடத்தினார்கள். காமினி ஜயவிக்கிரமபெரெரா, ஜோசப் மைக்கல் பெரேரா, திஸ்ஸ அத்தநாயக்க, லக்ஷ்மன் கிரியெல்ல மற்றும் கபிர் ஹசிம் முதலியவர்கள் இதில் கலந்து கொண்டார்கள். கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் சஜித் பிரேமதாஸவுக்குமிடையிலான முரண்பாடுகளைக்களையும் நோக்குடன் இந்தக் கூட்டம் நடைபெற்றது.

## நாளை

ஆவணி 15 : 31.08.2010 :செவ்வாய்க்கிழமை

| | |
|---|---|
| திதி | : சஷ்டி காலை 06.55 வரை |
| நட்சத்திரம் | : பரணி மு.ப 09.48 வரை |
| சுபநேரம் | : 10.35 - 12.05 |
| ராகுகாலம் | : 03.05 - 04.35 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர்க் காணிக்கை



அமரர் முத்தன் லட்சுமணன்
ஆகிய எமது பெரியப்பா அவர்கள்
காலமானதையிட்டு ஆழ்ந்த துயரம்
அடைகின்றோம். அவரின் பிரிவால்
துயருறும் குடும்பத்தினருக்கு எமது
ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன்
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்
திரு திருமதி பிரதீஸ், மாலினி.
(பெறாமகன் இத்தாலி).

(102571)

## கண்ணீர் அஞ்சலி



அமரர்
சந்தனம்
சவுந்தரராஜன்

அவர்கள் காலமானதையிட்டு
ஆழ்ந்த துயரம்
அடைகின்றோம். அவரின்
பிரிவால் துயருறும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன்
அன்னாரின் ஆத்மா
சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்
சாரங்கா நகைமாடம்,
சாரங்கன் நகைமாடம்,
சாரங்கா ஜுவெல்லறி (கொழும்பு)

(102664)

## மரண அறிவித்தல்

*சந்தனம் ஆச்சாரி சவுந்தரராஜன்*

*(யாழ்ப்பாணம் துர்க்கா நகைப்பூங்கா உரிமையாளர்)*



யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சந்தனம் ஆச்சாரி சவுந்தரராஜன் நேற்று (28.08.2010) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சந்தனம் ஆச்சாரியின் அன்பு மகனும் இராஜலெட்சுமியின் அன்புக் கணவரும் பிரபாகர், சுதாகர், கமலேஸ்வரி, சுதர்சன், பபிகரன் ஆகியோரின் அன்புத் தகப்பனும் யோகேஸ்வரி, பாபு, கிந்துயா ஆகியோரின் அன்பு மாமனாரும் விதுர்சன், துவாரகா, கரிஸ் ராகவன், கரினிகா ஆகியோரின் அன்புப் பேரனும் அம்பிகாவதி, விஸ்வநாதன், பரமேஸ்வரி, நாகராஜா, சிறிஸ்கந்தராஜா ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.08.2010) திங்கட்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் :
மனைவி, பிள்ளைகள்.
T.P. : 0776031332,
0771554661

38, கில்னர் ஒழுங்கை,
கஸ்தூரியார் றோட்,
யாழ்ப்பாணம்.

(102668)

## கூட்டுறவு வைத்தியசாலை புதிய நிர்வாகத்திடம்

சுழிபுரம்,ஓக.30

மூளாய் ஐக்கிய சங்க கூட்டுறவு வைத்தியசாலையின் நிர்வாகப்பொறுப்பை சென்றவாரம் தெரிவு செய்யப்பட்ட புதிய நிர்வாக சபையினர் ஏற்றுள்ளனர்.

வடபகுதி கூட்டுறவு ஆணையாளரினால் புதிய நிர்வாகத்தினர் தெரிவுசெய்யப்பட்டனர். (ஒ-28)

## மின் இணைப்பு பணிகள் ஆரம்பம்

சுழிபுரம்,ஓக.30

சுழிபுரம், பாண்டவட்டை கிராம குடியேற்ற மக்களின் வீடுகளுக்கு மின்சாரம் வழங்கும் வேலைகள் நடைபெற்றுவருகின்றன. சுழிபுரம் தபாற்கந்தோர் சந்தியில் இருந்து மின் இணைப்பு மேலதிக வேலைகள் மின்சார சபை ஊழியர்களால் மேற்கொள்ளப்படுகின்றன.

இந்தவாரத்தில் பணிகள் பூர்த்தியடையும் என்று மின்சார சபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஒ-28)

## மீள் குடியமர்ந்தோரின் கவனத்திற்கு

கோப்பாய்,ஓக.30

வலி.கிழக்குப் பிதேச செயலர் பிரிவில் வன்னியில் இருந்து மீளக் குடியேறிய மக்களுக்கு ரூபா 5 ஆயிரம் மற்றும் அகதிகளுக்கான ஐ.நா. தூதரகம் வழங்கும் ரூபா 20 ஆயிரம் நிவாரணப் பொருள்கள் போன்றவற்றை இதுவரை பெறாதவர்கள் -

உடனடியாக கோப்பாய் பிரதேச செயலகத் திட்டமிடல் கிளையுடன் தொடர்பு கொள்ளுமாறு பிரதேச செயலக திட்டமிடல் உதவிப் பணிப்பாளர் இ.கிருஷ்ணராசன் தெரிவித்துள்ளார். (ஒ-72)

## வீதியின் நிலை மோசம்; மக்கள் பெரும் சிரமம்

கொழும்புத்துறை,ஓக.30

பெரும்போக நெற்செய்கைக்கு அனுமதிக்கப்பட்ட கிழக்கு அரியாலைக்கான வீதி மிகவும் சேதமடைந்து காணப்படுவதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

பாதுகாப்பு வலயத்திற்குள் சிக்கியிருந்த இவ் வீதி குண்டும் குழியுமாகக் காணப்படுவதாகவும் கூறப்படுகிறது.

இதனால் வயல் வேலைகளுக்குச் செல்லும் தொழிலாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். (ஒ-135)

## ரூபா 50 ஆயிரம் கொடுப்பனவு; பயனாளிகள் தெரிவு

கோப்பாய்,ஓக.30

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் மீளக் குடியேறியுள்ள புத்தூர் கிழக்கு கிராம அலுவலர் பிரிவு, நீர்வேலி வடக்கு கிராம அலுவலர் பிரிவில் வதியும் மக்களில் 60 குடும்பங்களுக்கு 'ஜிரிஇசற்' அமைப்பின் நிதி உதவியுடன் யாழ். மாவட்ட சிக்கனக் கடனுதவி கூட்டுறவுச் சங்கம் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் 50 ஆயிரம் ரூபாவை வழங்கவுள்ளது.

இதற்கான பயனாளிகள் தெரிவு கடந்த வியாழன், வெள்ளிக்கிழமைகளில் நடைபெற்று முடிந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (ஒ-72)

### வேலை ஆள்கள் தேவை

ரெஜிபோம் எழுத்து வெட்டி டஸ் போடக்கூடிய பெண் பிள்ளைகள் தேவை. யாழ்.மாநகர சபை எல்லைக்குள்ளும், மானிப்பாயில் வசிப்பவர்களும் விரும்பத்தக்கது.

தொடர்பு: 0774598100

### தவறிவிட்டது

மட்டுவில் தெற்கைச் சேர்ந்த ஜேம்ஸ் யூலியன் ஆகிய எனது தேசிய அடையாள அட்டை (912022102V) பெருங்குளம் சந்திக்கும் மட்டுவில் சந்திக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தந்துதவவும்.

தொடர்பு: 021 490 1452, 021 300 8722

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

*தாயின் மடியில் 21 . 06 . 1948*



*இறைவன் அணைப்பில் 30 . 08 . 2009*

### அமரர் டேவிட் அலெக்ஸ்சாண்டர்

*ஓராண்டு ஆனாலும்*
*ஆறிடுமோ எம் நெஞ்சம்*
*அன்பாலும் பண்பாலும்*
*அனைவரையும் கவர்ந்துவிட்டு*
*அவனியில் எமை விட்டுசென்றதேனோ?*
*அழியாத நினைவுகளாய்*
*என்றும் நீங்கள் எம்*
*நெஞ்சில் வாழ்ந்திடுவீர்*

லொயலாஸ் ஊழியர்கள்

*(102663)*

## 29ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 06 . 04 . 1929



மறைவு 02 . 08 . 2010

### திருமதி பரமேஸ்வரி கனகரத்தினம்

பத்து மாதம் சுமந்து பெற்று
நோகாமல் வளர்த்தெடுத்து
இவ்வையகத்தில் நாம் வாழ
வழிகாட்டி ஆளாக்கிவிட்டு,
எண்பத் தொரு ஆண்டுகள்
நிறைவாழ்வு வாழ்ந்த எம்
அன்னையை இன்று
பூசிக்கின்றோம்

கணவர், பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

இணுவில் தெற்கு,
இணுவில்.

(102649)

## 62வது பிறந்தநாள் வாழ்த்தும் 8ஆம் மாத நினைவஞ்சலியும்

தோற்றம்
1948.08.30

மறைவு
2010.01.26



அமரர்
முருகேசு சிவலிங்கம்

அன்பாய் அறிவூட்டி
பண்புடனே எமை வளர்த்த தந்தையே!
பாதி வழியினில் எமை பரிதவிக்க விட்டுச் சென்றதேனோ?
மாதமோ எட்டானது மனமோ ஆறவில்லை
காலங்கள் தான் சொல்ல வேண்டும் காண்பது எப்போதென்று?
ஆண்டுகள் பல கடந்தாலும் உங்கள் நினைவலைகள்
என்றும் எம்மோடு நிழலாகும்.

மனைவி,
பிள்ளைகள்.

12/4, வைமன் வீதி,
நல்லூர்.

STUDY IN UK

இதுவே இறுதிச் சந்தர்ப்பம் இதனைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள்

யாழ்.நகரில் மிகக் குறைந்த செலவில்..........

லண்டனில் தரம் வாய்ந்த பல்கலைக்கழகங்கள், கல்லூரிகளில்
உங்கள் உயர்கல்வியைத் தொடர்வதற்கு

IELTS அவசியமில்லை



★ Admission within 3 days (ஆவணங்கள் திருப்தியாக இருந்தால்)
★ ஆகக் குறைந்த (O/L) கல்வித் தகைமைகளுடன்
★ விசா கிடைப்பதற்கு முன்னரோ விசா கிடைத்த பிறகோ எதுவித கட்டணமும் அறவிடப்படமாட்டாது.
★ விரைவான பயண ஏற்பாடுகள்.
★ மிகக் குறைந்த கட்டணத்தில் Sponsor வழிகள்
★ விசா நிராகரிக்கப்படுமானால் பணத்தைத் திரும்பப் பெறும் வசதிகள்

எமது சேவைகள் முற்றிலும் இலவசமானது

தொடர்புகளுக்கு: 0770871616

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# யாழ்.பல்கலைக்கழகத்தின் பல்வேறு தரப்பினருடனும் உயர்கல்வி அமைச்சர் நேற்றுக் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஓக. 30

நேற்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்கா யாழ்.பல்கலைக்கழகத்தின் சகல தரப்பினருடனும் தனித்தனியாகக் கலந்துரையாடலை மேற்கொண்டார்.

நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் பூஜை வழிபாடுகளில் நேற்றுக்காலை கலந்து கொண்ட உயர் கல்வி அமைச்சர் அதனைத் தொடர்ந்து



இணைந்த சுகாதாரக் கல்வித் துறைக்கான அடிக்கல் நடும் நிகழ்வின் போது உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்க சமய அனுஷ்டானங்களில் கலந்து கொள்வதையும் அருகில் ஜனாதிபதியின் ஆலோசகர் எச்.எம்.அஸ்வர், யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம். (படம்: தமிழரசன், உமா)

யாழ்.பல்கலைக்கழகத் துக்குச் சென்று அங்கு பல்வேறு தரப்பின ரையும் சந்தித்தார்.

பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கனைச் சந்தித்துக் கலந்துரையாடிய அமைச்சர், அதன் பின்னர், பல்கலைக்கழகப் பேரவை உறுப்பினர்கள் அனைத்துப் பீடங்களதும் பீடாதிபதிகளை உள்ளடக்கிய நிறைவேற்று உத்தியோகத்தர்கள் குழு, மாணவர் அமைப்புக்கள், தொழிற்சங்கப் பிரதிநிதிகள் ஆகி யோரையும் தனித்தனியாகச் சந்தித்து பல்கலைக்கழகத்தின் தற்போதைய நிலைவரம், எதிர் காலத்திட்டங்களில் முன்னெடுக் கப் பட வேண்டிய விடயங்கள் தொடர் பானவற்றை உயர்கல்வி அமைச்சர் கேட்டறிந்தார்.

இதனைத் தொடர்ந்து யாழ்.பல்கலைக்கழக விளையாட்டு மைதானத்தில் புதிதாக நிர்மாணிக்கப்படவிருக்கும் இணைந்த சுகாதார கல்வித்துறைக்கான கட்டடத் தொகுதிக்கான அடிக்கல்லையும் உயர் கல்வி அமைச்சர் நட்டு வைத்தார். அடிக்கல் நடும் நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர், பீடாதிபதிகள் துறைத் தலைவர்கள், பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், மாணவர்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர்.

இதனைத் தொடர்ந்து பல்கலைக்கழக விடுதிகளுக்குச் சென்ற அமைச்சர் அங்குள்ள உட்கட்டமைப்பு வசதிகளின் தேவைகள் தொடர்பாகக் கேட்டறிந்தார்.

இறுதியாக மருதானார்மடத்திலுள்ள இராமநாதன் நுண்கலைப் பீடத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலிலும் உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்க கலந்து கொண்டார். இந்த நிகழ்வுகளில் நாடாளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகருமான ஏ.எச்.எம். அஸ்வர், உயர் கல்வி அமைச்சின் ஒருங்கிணைப்புச் செயலாளர் சுனில் குணவர்த்தன உள்ளிட் டோரும் பங்கேற்றிருந்தனர்.

இதேவேளை, இந்தக் குழுவினர் இன்று யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம்பெறவிருக்கும் பரமேஸ் வராக் கல்லூரி நிறுவுநர்தின நிகழ்விலும் கலந்து கொள்ள வுள்ளனர். அத்துடன் பல்கலைக்கழக மூதவை உறுப்பினர்களுடன் கலந் துரையாடலிலும் இன்றையதினம் பங்கு பற்றவுள்ள அமைச்சர், மருத்துவபீட மாண வர்களுக்கான விடுதியையும் திறந்து வைக்கவுள்ளார்.

நாளை செவ்வாய்க்கிழமை காலை கிளிநொச்சியிலுள்ள விவசாய பீடத்துக்கு விஜயம் செய்யவுள்ள உயர் கல்வி அமைச்சர் அடங்கிய குழுவினர் கிளிநொச்சி மாவட்ட செயலகம், யாழ்.பல்கலைக்கழக வவுனியா வளாகம் ஆகிய இடங்களில் இடம்பெறவுள்ள கூட்டங்களிலும் கலந்துகொள்ளவுள்ளனர். அத்துடன் வவுனியா பம்பைமடுப் பகுதிக்கும் விஜயம் செய்யவுள்ளனர்.

வடபகுதியின் உயர் கல்விச் செயற்பாடுகள் தொடர்பாக ஆராய்ந்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு அறிக்கையிடுவதே இந்தக் குழுவினரின் நோக்கம் என்றும் கூறப்படுகிறது. (எ-14-6)

# யாழில் சுற்றுலாத்துறை சார் அறிவை வளர்க்க உல்லாச விடுதியாளர் சம்மேளனம் அங்குரார்ப்பணம்

யாழ்ப்பாணம், ஓக. 30

யாழ். மாவட்டத்தில் சுற்றுலாத்துறையை மேம்படுத்தவும் சுற்றுலாத்துறை சார்ந்த அறிவை இளைஞர், யுவதிகளுக்கு வழங்குவதன்மூலம் அவர்களுக்கு வேலைவாய்ப்பைப் பெற்றுக்கொடுக்கும் முகமாகவும் ''யாழ்ப்பாண உல்லாச விடுதியாளர் சம்மேளனம்'' அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் முன்னணியிலுள்ள உல்லாசப் பயணத்துறையுடன் சம்பந்தப்பட்ட விடுதிகளின் உரிமையாளர்கள் ஒன்றிணைந்து இந்தச் சம்மேளனத்தை ஆரம்பித்துள்ளனர். இதுதொடர்பாக விளக்கமளிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்று ''ரெஸ்ற் ஒவ் ஜெப்னா'' ஹோட்டலில் இடம்பெற்றது.

அதில் கூறப்பட்ட விடயங்கள் வருமாறு :-

யாழ்.மாவட்டத்தில் உல்லாசப் பிரயாணத்துறையை அபிவிருத்தி செய்வதற்கு இந்தச் சம்மேளனம் அமைக்கப்பட்டது உதவியாக இருக்கும். இதன் யாப்பு நடைமுறைப்படுத்தப்படும் காலம்வரை இடைக்கால நிர்வாக சபை செயற்பட்டுவரும்.

யாழ்ப்பாண உல்லாச விடுதியாளர் சம்மேளனம் யாழ்.மாவட்டத்தின் உல்லாசப்பயணத்துறையை அபிவிருத்தி செய்வதிலும் அதன் கலாசாரம், பண்பாட்டு விழுமியங்களைப் பேணிப் பாதுகாப்பதிலும் காத்திரமான பங்களிப்பை வழங்கும். எதிர்வரும் காலங்களில் பின்வரும் விடயங்களைக் கருத்திற் கொண்டு செயற்படும். அவையாவன :-

* இளம் சமூகத்திடம் உல்லாசப் பயணத் துறை, அதனுடன் தொடர்புடைய ஹோட்டல் என்பன தொடர்பான அறிவை வளர்ப்பதற்குக் கருத்தரங்கு, தொழிற் பயிற்சி என்பவற்றைச் செய்வ துடன் வேலை வாய்ப்புக்களையும் வழங்கல்.
* யாழ்ப்பாணத்தில் ஹோட்டல் பாடசாலை ஒன்றைத் திறந்து அதுசார்ந்த கல்வியை வழங்கல்.
* சுற்றுலாத் துறையுடன் இணைந்த ஏனைய துறைகளையும் வளப்படுத்தல்.
* நட்சத்திர விடுதிகள் திறக்கப்படும் போது உள்ளூர் முதலீட்டாளர்களுக்குப் பாதிப்பு ஏற்படாதவாறு பாதுகாத்தல்.
* யாழ்ப்பாணத்தின் சுற்றுலா மையங்களை இனங்கண்டு அபிவிருத்தி செய்தல்.
* யாழின் பிரபல்யமான சுற்றுலா மையங்களையும் ஹோட்டல்களையும் உள்ளடக்கி இணையத்தளம் ஆரம்பித்தல். (6-15)




# வடமராட்சியில் 6 இடங்களில் மாலை நேர இலவச வகுப்புக்கள்

பருத்தித்துறை, ஓக. 30

யேசுசபை அகதிப் பணி நிறுவனம் வடமராட்சியில் ஆறு இடங்களில் பாடசாலை மாணவர்களுக்கான இலவச மாலைநேர வகுப்புக்களை நடத்திவருகின்றது.

சக்கோட்டை, பொலிகண்டி, கரவெட்டி, துன்னாலை, மணற்காடு, குடத்தனை ஆகிய இடங்களிலேயே மாணவர்களுக்கான மாலைநேர இலவச வகுப்புக்களை நடத்திவருகி ன்றது.

அதேவேளை இந்நிறுவனம் சக்கோட்டை, பொலிகண்டி, தும்பளை, மணற்கோடு, பொற்பதி, குடத்தனை, கற்கோவளம், மணற்காடு இடைத்தங்கல் முகாம் ஆகிய இடங்களில் முன்பள்ளிகளையும் ஆரம்பித்து நடத்திவருகின்றது. அங்கு கற்கும் சிறார்களுக்கான சீருடை, சத்துணவு ஆகியனவும் வழங்கப்பட்டு வருகின்றது. (ஒ-190)

# சுயதொழில் நிவாரணக் கொடுப்பனவு; காசோலைகள் அனுப்பிவைப்பு

கைதடி, ஓக. 30

யாழ். மாவட்டத்திலுள்ள தெல்லிப்பழை, யாழ்ப்பாணம், சண்டிலிப்பாய், மற்றும் உடுவில் ஆகிய பிரதேச செயலர் பிரிவில் சுயதொழில் மேற்கொள்வதற்கான நிவாரணக் கொடுப்பனவுக்கு விண்ணப்பித்த பயனாளிகள் சிலருக்கு முதலாம், இரண்டாம் கட்டக் கொடுப்பனவுக்கான காசோலைகளை தாம் அந்தந்தப் பிரதேச செயலகங்களுக்கு அனுப்பி வைத்துள்ளதாக வடக்கு மாகாண சமூக சேவைத்திணைக்களத்தின் நிர்வாக அலுவலர் பி.சிவலிங்கம் அறிவித்துள்ளார்.

மேற்படி கொடுப்பனவைப் பெற தெல்லிப்பழைப் பிரதேச செயலர் பிரிவில் விண்ணப்பித்த அ.ரூபாதேவி (கும்பளை, அளவெட்டி கிழக்கு), இ.திலகேஸ்வரி (கும்பளை, அளவெட்டி கிழக்கு), ந. லோகனா (காடிவளை, இளவாலை வடக்கு) ஆகியோருக்கு முதலாம் கட்டக் கொடுப்பனவாகவும்,

யாழ்ப்பாணப் பிரதேச செயலர் பிரிவில் எ.ரவீந்திரன் (148/10, ஸ்ரேசன் வீதி, யாழ்ப்பாணம்), அ.கமலா (35, இலந்தைக் குளம் வீதி, கொழும்புத்துறை), த.ரமேஷ் (வில்லூன்றிப் பிள்ளையார் கோயில் வீதி, கொட்டடி), து.பூமணி (காதி அபூபக்கர் வீதி, நாவாந்துறை), க.சதானந்தன் (51/2, நெடுங்குளம் வீதி, கொழும்புத்துறை), செ.டயான் (36, 2ஆம் குறுக்குத் தெரு, குருநகர்), நா.இராஜேஸ்வரி (முத்தமிழ் வீதி, கொட்டடி), வெ.சரஸ்வதி (66, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்) ஆகியோருக்கு முதலாம் கட்டக் கொடுப்பனவாகவும்,

ஞா.மரியராசா (38, இராசசிங்கம் வீதி, யாழ்ப்பாணம்), செ.மேகலா (வசந்தபுரம், நாவாந்துறை வடக்கு), நீ.மேரிபப்ரீஸ் (391, கடற்கரை வீதி, குருநகர்), ஜெ.நகுலேஸ்வரி (21, ஆஸ்பத்திரி வீதி, கொட்டடி), ம.சிறிநதி (6/1, மீனாட்சி அம்மன் வீதி, கொட்டடி), சி.செல்வராணி (10, விதானையார் வீதி, கொழும்புத்துறை), அ.மேரிகொலஸ்ரிக்கா (10, புதிய வீட்டுத் திட்டம், குருநகர்), யோ.வலன்ரீனா (832, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்), கே.பவானி (முத்தமிழ் வீதி, கொட்டடி), மா.இராசராணி (3ஆம் குறுக்கு வீதி, குருநகர்), வி.ஜலினா (70, கொழும்புத்துறை வீதி, சுண்டுக்குளி) ஆகியோருக்கு இரண்டாம் கட்டக் கொடுப்பனவாகவும்,

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் த.கருணாதேவி (சில்லாலை, பண்டத்தரிப்பு) என்பவருக்கு இரண்டாம் கட்டக் கொடுப்பனவும்,

உடுவில் பிரதேச செயலர் பிரிவில் சி.சந்திரலிங்கம் (ஆலடி, உடுவில்), ய.வசந்தா (தாவடி தெற்கு, கொக்குவில்), ஜெ.வதனா (தாவடி தெற்கு, கொக்குவில்), பா.ஜெகதீஸ்வரி (மாரியபுரம், தாவடி வடக்கு), இ.வாமதேவன் (மயிலணி வீதி, சுன்னாகம்), சு.விஜிதா (கோட்டைக் காடு, மல்லாகம்), தி.பாக்கியவதி (சூராவத்தை, சுன்னாகம்), சி.தங்கரெட்ணம் (மயிலங்காடு, ஏழாலை தெற்கு), இ.சகுந்தலாதேவி (சபாபதிப்பிள்ளை வீதி, சுன்னாகம்), அ.மல்லிகாதேவி (ஏழலை கிழக்கு), ச.லீலாவதி (புன்னாலைக்கட்டுவன் வடக்கு), த.பாமா (பூதராயர் கோயில் வீதி, சுன்னாகம்) ஆகியோருக்கு இரண்டாம் கட்டக் கொடுப்பனவாகவும் காசோலைகள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

தலா 7,500 ரூபா வீதம் வழங்கப்பட இருக்கும் இந்நிதியில் கால்நடை வளர்ப்பு, தையல், வியாபாரம், தச்சுவேலை உள்ளிட்ட பல சுயதொழில்களை மேற்கொள்ளலாம் எனவும் இது தொடர்பாக தத்தமது பிரதேச செயலர் பிரிவில் உள்ள சமூக சேவை அலுவலருடன் பயனாளிகள் தொடர்பு கொள்ளுமாறும் நிர்வாக அலுவலர் பி.சிவலிங்கம் கேட்டுள்ளார். (எ-288)



நல்லூர் கந்தசுவாமி கோயில் மகோற்சவத்தை முன்னிட்டு இந்து கலாசார திணைக்களம் நாவலர் மணி மண்டபத்தில் நடத்தும் தெய்வீக உரை நிகழ்வில் தமிழகத்தின் தருமபுரம் ஆதீனத்தைச் சேர்ந்த ஸ்ரீமத் குமாரசுவாமி தம்பிரான் சுவாமிகள் உரையாற்றுவதை முதலாவது படத்திலும். மூளாய் அறநெறிப் பாடசாலை மாணவிகளின் இசை, நடன நிகழ்வுகளை இறுதி இரு படங்களிலும் காணலாம். (படங்கள்: லக்ஸ்மன்)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# தமிழ் மக்களின் தற்போதைய நிலை கண்டு குற்ற உணர்வு என்னை வாட்டுகின்றது

## உண்மைகள் பலவற்றை அம்பலப்படுத்துகிறார் கே.பி.

அரசின் தடுப்புக் காவலில் இருக்கும் கே.பி.எனும் குமரன் பத்மநாதன் வன்னி இறுதி யுத்தத்தின்போது நடந்தது என்ன? என்பது குறித்து ஆங்கில நாளிதழ் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியின் ஒரு பகுதி இது.

இலங்கை அரசாங்கத்திற்கும் முக்கியமாக பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாயாவுக்கும் எனக்கும் இடையில் நல்ல உறவுகள் உள்ளதாகவும், இவற்றில் திரைமறைவான நடவடிக்கைகளும் இடம்பெற்றுள்ள தாகவும் எதிர்க்கட்சிகளும், சில ஊடகங்களும் குற்றச்சாட்டுக்கள் தெரிவித்துள்ளமை தொடர்பில் நான் உண்மையான பதிலைக் கூறவே விரும்புகின்றேன். இது



உண்மையில் ஒரு சோடிக்கப்பட்ட கட்டுக்கதையாகும். இவ்வாறான நடவடிக்கைகள் எதுவும் இடம்பெறவில்லை. எமக்குள் ஒரு புரிந்துணர்வு மாத்திரமே உண்டு. ஒரு உண்மையான புரிந்துணர்வு அதுவாகும். நாங்கள் இருவரும் சில பொதுவான குறிக்கோள்களைக் கொண்டி ருக்கின்றோம். ஆகவே தான் இவற்றை எட்டுவதற்காக நாமிருவரும் இணைந்து வேலை செய்கின்றோம். இதுதான் எமக்கிடையேயுள்ள ஒப்பந்தத்தில் உள்ள அம்சங்களாகும். வேறொன்றும் இதைவிட இல்லை.

விடுதலைப்புலிகளுக்கு எதிரான யுத்தம் இப்போது முடிவுக்கு வந்துவிட்டது. இந்த யுத்தத்தைத் திட்டமிட்டு ஒருங்கிணைத்த பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாயவின் தற்போதைய பங்களிப்பு வித்தியாசமான முறையில் அமைந்துள்ளது. அவர் சமாதானத்தை ஏற்படுத்துவதையும், வன்முறை மறுபடியும் தலைதூக்காமல் தடுப்பதற்கான நடவடிக்கைகளையே தற்போது மேற்கொண்டு வருகின்றார். அவரும் ஜனாதிபதி மஹிந்தவின் அரசாங்கமும் யுத்தம் தோன்றியதற்கான அடிப்படைப் பிரச்சினைகளைக் கண்டறிந்து அவற்றைத் தீர்த்து வைப்பதற்கே அதிக ஆர்வம் காட்டுவதாகத் தெரிகின்றது.

ஏராளமான முன்னாள் புலிப் போராளிகள் தடுப்புக் காவலில் உள்ளனர். இதைவிட உள்நாட்டிலேயே இடம்பெயர்ந்த மக்கள் மீள்குடியேற்றப்பட்டு சாதாரண வாழ்க்கைக்குத் திரும்ப வேண்டும். ஜனாதிபதியும் அவரது சகோதரர்களும் இந்த விடயங்களை சிறப்பாக நிறைவேற்றவே விரும்புகின்றனர்.

நான்கூட இந்த விடயங்களில் அதிக அக்கறை கொண்டுள்ளேன். தடுப்புக் காவலில் உள்ள முன்னாள் புலிப் போராளிகள் அனைவரும் விடுவிக்கப்பட்டு புதியதொரு வாழ்வினை அவர்கள் தொடங்குவதைப் பார்க்கவே நான் விரும்புகின்றேன். இதைப்போன்றே இடம்பெயர்ந்தவர்களும் மீள்குடியேற்றப் பட்டு நிவாராணங்களும் வழங்கப்படவேண்டும்.

பாதுகாப்புச் செயலாளர் இந்த விடயங்களில் ஒரு குறிப்பிட்டளவு பங்களிப்பினை நான் வகிப்பதற்கான ஒரு சந்தர்ப்பத்தை எனக்கு வழங்கி யுள்ளார். இது எமக்கிடையேயான ஒப்பந்தத்தில் ஒரு முக்கிய அம்சமாகும்.

மீளமைக்கப்பட்ட புலிகள் இயக்கத்தின் முன்னாள் தலைவரான நான் ஏன் இந்த விடயங்களில் என்னை ஈடுபடுத்திக்கொண்டேன் என்ற கேள்வியும் எழுகின்றது. இதற்கான பதிலைக் கூறுவதற்குப் பொருத்தமானவர் பாதுகாப்புச் செயலாளரே என நான் நினைக்கின்றேன். அல்லது பொறுப்பு வாய்ந்த அமைச்சர் அல்லது அதிகாரிகளும் பதில் தரலாம். நான் எனக்குத் தோன்றுவதை மட்டுமே விடையாகக் கூற முடியும். அல்லது அரசாங்கத்தின் பின்னால் உள்ள யோசனைகளையும் என்னால் கூறமுடியும்.

எனக்கு இச்சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளதில் சந்தேகங்கள் உள்ளதை நான் அறிவேன். அவர்கள் ஒரு தந்திரமான குழப்ப நிலையில் உள்ளதாக நான் நினைக்கின்றேன். எவ்வளவு முடியுமோ அவ்வளவு விரைவில் தடுப்புக் காவலில் உள்ளோரை விடுவிக்கவும், இடம் பெயர்ந்தோரை மீளவும் குடியமர்த்தி நிவாரணம் வழங்கவும் அவர்கள் விரும்புவார்கள். இந்த விடயங்களில் நீண்ட தாமதங்கள் சர்வதேச விமர்சனங்களுக்கு இடம் கொடுக்கும். ஆனால் மறுபக்கத்தில் பாதுகாப்புக் கோணத்தில் அவர்கள் ஜாக்கிரதையாகவே உள்ளனர். இந்த விடுதலையாலும் அல்லது மீளக்குடியேற்றப் படும் ஆள்கள் வேறு தரப்பினரால் எதற்காவது உபயோகிக்கப்படுத் தப்பட்டு மீண்டும் பிரிவினைவாதம் தலைதூக்கி அரசியல் வன்முறை தோன்றி விடுவதை அவர்கள் விரும்பவில்லை.

இந்த விடயத்தில் அரசாங்கம் கவனமாக உள்ளது. இதனால்தான் காரியங்கள் மெதுவாக நகர்கின்றன. இந்த மெதுவான நகர்வு அரசாங்கத்தை விமர்சனங்களுக்குள் தள்ளி விடுகின்றது.

மேலும் இந்த விடயங்களில் ஒரு சிறிய பங்கினை வகிப்பதற்கான சந்தர்ப்பத்தையே அவர்கள் எனக்கு வழங்கியுள்ளார்கள். இதை ஒரு உதாரணமாகக் கூறுவதானால் இராமாயாணத்தில் கடலுக்கு நடுவே அணை ஒன்றைக் கட்டுவதற்கு அணில் ஒன்று உதவி செய்தமையைப் போன்றது.

இந்தச் சந்தர்ப்பம் எனது வாழ்க்கையில் அர்த்தமுள்ள சில விடயங்களை நான் ஆற்றுவதற்கு வழங்கப்பட்ட சந்தர்ப்பமாகவே கருதுகின்றேன். ஆகவே நான் மிகவும் மகிழ்ச்சியாக உள்ளேன்.

சில அரசசார்பற்ற நிறுவனங்களும்,

### போராளிகளின் விடுதலையும் மக்களின் மீள்குடியேற்றமும் கோத்தபாயவுடனான ஒப்பந்தத்தின் முக்கிய அம்சம்

தமிழ்க்கட்சிகளும் அரசாங்கத்துடன் ஒத்துப் போகாமைபற்றி என்னிடம் கேட்கப்பட்டது. நான் அறிந்த வரையில் கடந்தகால அனுபவங்களின் பிரகாரம் அரசாங்கம் அநேக அரசசார்பற்ற நிறுவனங்களை நம்புவதற்குத் தயாராக இல்லை. இதைப் போன்றே சில தமிழ்க்கட்சிகளைப் பொறுத்தவரையிலும் அதிக ஏமாற்றத்தை அவர்கள் சந்தித்திருக்கின்றார்கள்.

புனர்வாழ்வு நிலையங்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள முன்னாள் புலிப் போராளிகளின் விடயம் அரசியல் ரீதியாகவும், பாதுகாப்புச் சம்பந்தமாகவும் உணர்வு பூர்வமானவையாகக் காணப்படுகின்றன. அரசாங்கம் இந்த விடயத்தில் கண்டனங்கள் எழுவதை விரும்பவில்லை. ஆனால் பாதுகாப்புச் செயலாளர் பாதுகாப்பு ஏற்பாடுகளில் உடைவுகள் ஏற்படுவதிலும் பார்க்க இத்தகைய கண்டனங்களை எதிர்கொள்வதற்கு விருப்பமாக உள்ளார்.

இந்தவேளையில்தான் ஒரு பங்கினை வகிப்பதற்குரிய சந்தர்ப்பம் எனக்குக் கிட்டியுள்ளது. முன்னாள் புலிப் போராளிகள் மற்றும் ஏனையோருடன் ஒரு தொடர்பினை ஏற்படுத்தி சில சேவைகளைச் செய்வதற்கான சந்தர்ப்பமே அதுவாகும். நான் அவர்களின் பாதுகாப்பில் இருப்பதால் என்னை அவர்கள் நம்புகின்றார்கள். எனது விடயத்தில் பயம் எதுவும் அவர்களுக்கு இல்லை. நானும் எமது மக்களுக்குக் குறிப்பாக முன்னாள் புலிப் போராளிகளுக்கு சேவையாற்றுவதில் எனக்குக் கிடைக்க

இந்தச் சந்தர்ப்பத்தை வரவேற்கின்றேன். இன்றுள்ள புலித் தலைவர்களில் நான் தான் மிகவும் சிரேஷ்ட உறுப்பினர். மேலும் தமிழ் மக்களின் இன்றைய துக்ககரமான நிலைகண்டு நான் மிகுந்த குற்ற உணர்வில் ஆழ்ந்துள்ளேன். இந்த இளம் சந்ததியின் விதியினை நினைந்து நான் மிகுந்த வேதனை அடைகின்றேன். இவர்கள் தங்களின் விருப்பத்துக்கு மாறாக வலுக்கட்டாயமாக இயக்கத்தில் சேர்த்துக்கொள்ளப்பட்டதை நான் மறுக்கவில்லை. வன்னி மக்களின் இன்றைய நிலைகண்டு உண்மையிலேயே நான் மிகுந்த மனவேதனை அடைகின்றேன். வளமாக வாழ்ந்த அவர்கள் யுத்தத்தின் காரணமாக மிகுந்த வறுமைக்குள் வாடி நிற்கின்றனர். இவர்களுக்கு நான் ஏதாவது செய்ய வேண்டும்.

இதற்கு ஒரு முக்கிய காராணமும் ஒன்று உள்ளது. சென்றவருடம் மே மாத நடுப்பகுதியில் பிரபாகரன் ஏனைய தலைவர்களுடன் ஒரு ஆலோசனைக் கூட்டத்தைக் கூட்டியிருந்தார். அதில் ஒருவர் எமது மக்களுக்கும் போராளிகளுக்கும் என்ன நடக்கும்? என்று கேட்டார். அதற்குப் பிரபாகரன் கே.பி.இருக்கிறார் அவர் மக்களையும் போராளிகளையும் பார்த்துக் கொள்ளுவார் எனப் பதிலளித்திருக்கின்றார். இதற்குச் சில மாதங்களுக்குப் பிறகு இது உண்மையிலேயே நிகழ்ந்துள்ளது. பிரபாகரன் என்னை வெளிப்படையாகவே பரிந்துரைத்திருக்கின்றார். இதுவே வட-கிழக்கு புனருத்தாரணம் மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தை (NERDO) அமைப்பதற்கு என்னைத் தூண்டியது. இது இந்த ஆண்டு ஜூலை ஆறாம் திகதி சம்பிரதாய பூர்வமாகப் பதிவுசெய்யப்பட்டது. மேலும் வடக்குக் கிழக்குப் பிரதேசங்களுக்குச் செல்வதற்கான பாதுகாப்பு அனுமதியும் பெறப்பட்டுள்ளது.

இதில் பாதுகாப்புச் செயலாளர் தொடர்புகொண்டிருப்பதாகக் கேள்விகள் எழுந்துள்ளன. நாம் உரிய நடைமுறைகளைப் பின்பற்றியே எமது விண்ணப்பத்தைச் சமர்ப்பித்தோம். இவ்வளவு விரைவில் எமக்கு அனுமதி கிடைப்பதற்கு பாதுகாப்புச் செயலாளர் பின்புலத்தில் உள்ளதை நான் மறுக்கவில்லை.

நான் எவ்வாறு மலேசியாவில் கைதுசெய்யப்பட்டு கொழும்புக்குக் கொண்டுவரப்பட்டேன் என்பதை ஏற்கனவே கூறியிருக்கின்றேன். கோத்தபாயவுடனான எனது மூன்றாவது சந்திப்பின் போது நான் தற்போதைய முழு நிலைமைகளையும் எவ்வாறு உணர் கின்றேன் என்பதையும், எதிர்காலத்தில் எதனைச் செய்வதற்கு விரும்புகின்றேன் என்பதையும் அறிவதற்கு அவர் விரும்பினார்.

இதற்கு நான், என்னைப் பொறுத்தவரை யுத்தம் முடிந்து விட்டதென்றும், இனியொரு ஈழத்துக்கான யுத்தம் கேள்விக்கு அப்பாற்பட்டதென்றும் பதிலளித்தேன். மேலும் எமது மக்களின் நிலை கண்டு குற்ற உணர்வில் நான் ஆழ்ந்துள்ளேன் எனவும் அவர்களுக்குச் சேவை யாற்றுவதற்கு ஒரு சிறு சந்தர்ப்பத்தை வழங்குமாறும் கேட்டேன். சில நாள்களுக்குப் பிறகு இராணுவப் புலனாய்வுத் தலைவர் கபில ஹெண்ட விதாரண என்னுடன் தொடர்புகொண்டு எனது விருப்பத்துக்கு இசைவான தீர்மானம் ஒன்று எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார். இதற்குப் பின்னர் தடுத்து வைக்கப்பட்டுள்ள போராளிகளுடனும் வடக்கில் உள்ள மக்களுடனும் தொடர்புகளை ஏற்படுத் திக்கொள்ள அனுமதிக்கப்பட்டேன்.

முதலில் தொலைபேசி வாயிலாகவே தொடர்புகள் ஏற்படுத்தப் பட்டன. இதற்குப் பிறகு தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்களின் பெற்றோர்களின் பிரதிநிதிகளைக் கொழும்பில்



சந்தித்தேன். அந்தக் கூட்டத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மாணவர்கள் தடுத்து வைக்கப் பட்டுள்ளமை தொடர்பாக என்னிடம் தெரிவிக்கப்பட்டது. நான் அந்தக் கூட்டத்தில் கலந்துகொண்ட உத்தியோகத்தர்களில் ஒருவரை பாதுகாப்புச் செயலாளரிடம் இந்த விடயத்தை எடுத்துக் கூறுமாறு கேட்டுக் கொண்டேன். பாதுகாப்புச் செயலாளர் உடனடியாகவே இதற்குச் சம்மதித்து அவர்களை விடுவிப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டார். இன்று ஒரு பட்டதாரி மாணவனும் தடுப்புக் காவலில் இல்லை என்றும் மகிழ்ச்சி யுடன் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

நான் ஒரு உத்தியோகபூர்வமற்ற பங்கினை வகித்தது (NERDO) என்ற அமைப்பினை உருவாக்குவதற்கு முன்பே ஆகும். தற்போது நான் இந்த அமைப்பினை பிரதிநிதித்துவப்படுத்துகின்றேன். தற்போதைய புனர்வாழ்வு ஆணையாளர் நாயகமாகப் பதவி வகிக்கும் பிரிகேடியர் சுதந்த ரணசிங்க ஒரு முன்மாதிரியான அதிகாரி ஆவார். அவர் புனர்வாழ்வு நிலையங்களை நல்ல நிலையில் பராமரித்து வருகின்றார்.

நாமும் அரசாங்கத்தினால் செயற்படுத்தப்பட்ட சில திட்டங்களுக்கு உதவியிருக்கின்றோம். இவற்றில் பல (NERDO) ஊடாகவே செயற் படுத்தப்பட்டன.

முன்னாள் போராளிகளை விடுதலை செய்வதிலும் புனர்வாழ்வு வழங்குவதிலும் தாமதம் ஏற்படுவதாகக் கூறப்படுகின்றது. இதற்குச் சில காரணங்கள் உள்ளன. போராளிகள் இரண்டு பிரிவுகளாக இனம் காணப்பட்டுள்ளனர். ஒரு பிரிவினர் சில பயங்கரவாத சம்பவங்க ளுடன் தொடர்புடைய கடும் போக்காளர்கள். சிலர் கரும்புலிகள் பிரிவைச் சேர்ந்தவர்கள். இவர்கள் கிட்டத்தட்ட 1,400 பேர் உள்ளனர். அநேகமானோர் நீதிமன் றங்களின் முன் நிறுத்தப்படவுள்ளனர்.

அடுத்த பிரிவினர் மென்மையான போக்குடையவர்கள். இவர்கள் சிறதளவே அனுபவம் உள்ளவர்கள். அல்லது விடுதலைப்புலிகளின் மக்கள் சார்ந்த நிர்வாகக் கட்டமைப்பில் பணிபுரிந்தவர்கள். உதாரணமாக பொலிஸ் மற்றும் வங்கிச் சேவையைக் குறிப்பிடலாம். இவர்களின் தொகை ஆரம்பத்தில் 11,000ஆக இருந்தது. இது தற்போது 7,000 அல்லது 8,000ஆக இருக்கலாம். ஏனையோர் படிப்படியாக விடுவிக்கப்பட்டுள்ளனர். அர்சாங்கம் நாளொன்றுக்கு 400 ரூபாவை இவர்கள் ஒவ்வொருவருக்கும் செலவிடுகின்றது. இவர்களை விடுவிப்பதனால் இந்தச் செலவிடும் தொகையை அரசாங்கத்தால் சேமிக்க முடியும். ஆனால் நான் முன்னர் சொன்ன காரணத்துக்காக அரசாங்கம் பயப்படுவதால் இது உடனடியாகச் சாத்தியம் இல்லாமல் உள்ளது. ✱

தமிழில்-ராஜராஜன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடாநாட்டு ரயில் பாதைகளில் குடியிருக்கும் மக்களின் பிரச்சினைகள் தொடர்பான தரவுகள் திரட்டப்படுகின்றன

## யாழ். அரச அதிபர் தகவல்

யாழ்ப்பாணம்,ஓக.30

குடாநாட்டில் உள்ள ரயில் பாதைகளில் குடியிருக்கும் குடும்பங்களை அகற்றுவது தொடர்பான முதற்கட்ட நடவடிக்கையாக அவர்களது பிரச்சினைகள் குறித்து தரவுகள் திரட்டப்படுகின்றன.

பிரதேச செயலர்கள், உதவி அரசாங்க அதிபர்கள் இத்தகைய நடவடிக்கையில் தற்போது ஈடுபட்டு வருகின்றனர்.

யாழ்.மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

யாழ்.மாவட்டத்தில் உள்ள ரயில் பாதைகளில் சுமார் 350 குடும்பங்கள் குடியிருப்பதாகத் தரவுகள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில் ரயில் பாதைகளை புனரமைப்பது தொடர்பாக அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

எனவே அந்தக் குடும்பங்களை உடனடியாக அகற்றுமாறு என்னிடம் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

இது விடயத்தில் அவசர நடவடிக்கைகள் எதனையும் மேற்கொள்ளாமல் ரயில் பாதைகளில் குடியிருக்கும் குடும்பங்களின் பிரச்சினை என்ன? அவர்களது சொந்த இடம் எது, அவர்கள் அங்கிருந்து வெளியேறாமல் அங்கேயே இருப்பதற்கான காரணம் என்ன? என்பன தொடர்பாகத் தரவுகள் திரட்டப்பட்டு வருகின்றன.

இத்தகைய நடவடிக்கைகளை அந்தந்தப் பிரதேச செயலர்கள், உதவி அரசாங்க அதிபர்கள் மற்றும் கிராம உத்தியோகத்தர்கள் என்போர் மேற்கொண்டு வருகின்றனர்.

தகவல்கள் திரட்டும் நடவடிக்கைகள் யாவும் பூர்த்தியடைந்ததும் அந்தக் குடியிருப்பாளர்களின் பிரச்சினை குறித்து பல்வேறு தரப்புகளுடனும் ஆராய்ந்த பின்னர் தான் இறுதி முடிவு எடுக்கப்படும் - என்று அவர் மேலும் தெரிவித்தார். (எ-9)

# சீ.டி.எம்.ஏ. தொலைபேசி மூலமான அழைப்புக் கட்டணம் குறைப்பு

சிறிலங்கா ரெலிக்கொம் நிறுவனம் சீ.டி.எம்.ஏ தொலைபேசி அழைப்புக்கான கட்டணத்தை திடீரென குறைத்துள்ளது.

இதன்படி உள்ளூர் அழைப்புக்கு ஒரு நிமிடத்துக்கு ஒரு ரூபாவே தற்போது அறவிடப்பட்டுவருகின்றது.

ரெலிக்கொம் தொலைபேசி இணைப்பு ஊடான அழைப்புக்கே இவ்வாறு நிமிடத்துக்கு ஒரு ரூபா அறவிடப்படுகின்றது.

அதனைவிட ஏனைய தொலைபேசி இணைப்புக்கள் ஊடான அழைப்புகளைப் பெறுவதற்கு நிமிடத்திற்கு இரண்டு ரூபா வீதம் அறவிடப்படும் எனவும் ரெலிக்கொம் நிறுவனத்தின் யாழ்பிராந்திய அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன. (எ-26)

# சாரதி அனுமதிப்பத்திரம் பெற விண்ணப்பிக்கும் அங்கவீனவர்களுக்கு மருத்துவச் சான்றிதழ் அவசியம்

யாழ்ப்பாணம், ஓக. 30

சாரதி அனுமதிப்பத்திரத்துக்கு அங்கவீனர்கள் விண்ணப்பிக்கும் பட்சத்தில் கொழும்பில் நுகேகொடவில் உள்ள தேசிய போக்குவரத்து வைத்தியசாலையில் மருத்துவச் சான்றிதழ் பெற்றுக் கொள்ளவேண்டும்.

யாழ்.மாவட்ட மோட்டார் போக்குவரத்து திணைக்கத்தின் அதிகாரி ஒருவர் மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அந்த அதிகாரி மேலும் தெரிவித்தவை வருமாறு:

சாரதி அனுமதிப்பத்திரத்துக்கு அங்கவீனமுடையோர் விண்ணப்பிக்கும் போது முதற்கட்ட நடவடிக்கையாக குறிப்பிட்ட நபர் கொழும்பை அண்மித்த நுகேகொடவில் உள்ள தேசிய போக்குவரத்து வைத்தியசாலையில் மருத்துவப் பரிசோதனையை மேற்கொள்ளவேண்டும்.

அங்குள்ள வைத்தியர்களால் குறித்த நபர் எந்த வாகனத்தைச் செலுத்த முடியும் என்பது குறித்து மருத்துவச் சான்றிதழ் வழங்கப்படும்.

அதன் பின்னர் அந்த மருத்துவச் சான்றிதழுடன் யாழ்.மோட்டார் போக்குவரத் திணைக்களத்துடன் தொடர்புகொண்டு மேலதிக விவரங்களைப் பெற்றுக்கொண்ட பின்னர் சாரதி அனுமதிப்பத்திரத்துக்கு விண்ணப்பிக்க முடியும் - என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (எ-9)

## ரம்ழான் சிந்தனை

இம்மாதத்தில் திடமான எண்ணத்துடன் இறைவனிடம் கையேந்த வேண்டும். கருணையாளன் முன் நின்று கையேந்திப் பிரார்த்திக்க வேண்டும். அவனது புகழ்பாடி அவனது தூதர் மீது இஸ்லாபாத் ஓதிப் பாவ மன்னிப்புக் கேட்டபிறகு ரம்ழானை சிறப்பாகக் கழிக்க, அதன் அருள் மழையில் நனைய அதில் மூழ்கி முத்தெடுக்க அருள் புரிவாய் ரஹ்மானே என்று பிரார்த்திக்க வேண்டும்.

எம்.ஏ.காதர்

# மட்டுவிலில் கச்சான் களவு

மட்டுவில், ஓக.30

மட்டுவில் வடக்கு முதலியார் வயல் வெளிபகுதியில் பயிரிட்டிருந்த கச்சான் பயிர்களைத் திருடர்கள் கடந்த செவ்வாய் இரவு பிடுங்கிச்சென்றுள்ளனர்.

பலமாகப் பெய்த மழையினைச் சாதமாக்கியே இவ்வாறு கச்சானைத் திருடியுள்ளனர்.

இதுவரை காலமும் விலையுயர்ந்த மரக்கறிவகைகளையும், விவசாய உபகரணங்களையுமே தோட்டங்களில் திருடர்கள் கையாடி வந்தனர். இப்போது திருடர்கள் கச்சான் போன்ற பயிர்வகைகளில் கூட கண்வைத்திருப்பதால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர். (எ-131)

# நடமாடும் சேவையில் 43 தம்பதிகளுக்கு காரைநகரில் சட்ட ரீதியான திருமணப் பதிவு

காரைநகர், ஓக. 30

காரைநகர் பிரதேசத்தில் சட்ட ரீதியாக பதிவுத்திருமணம் மேற்கொள்ளதிருந்த 43 தம்பதிகளுக்கு சட்டரீதியாக பதிவுத்திருமணம் செய்துவைக்கப்பட்டு அவர்களுக்கான திருமணச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.

காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் கடந்த சனிக்கிழமை இடம் பெற்ற சட்டரீதியான ஆவணங்களைப் பெறுவதற்கான நடமாடும் சேவையின் போதே இவ்வாறு 43 தம்பதிகளுக்கு சட்ட ரீதியாக திருமணப் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

வடவலய உதவிப் பதிவாளர் நாயகத்தினால் தேசிய நல்லிணக்க ஒருமைப்பாட்டு அமைச்சுடன் இணைந்து யு.என்.டி.பி. நிறுவனத்தின் அனுசரணையுடன் இந்த நடமாடும் சேவை இடம்பெற்றது.

இச்சேவையில் இதுவரை பதிவு செய்யப்படாத 41 பேருக்கான பிறப்புப் பதிவுகளும் காலங்கடந்த எட்டு இறப்புப்பதிவுகளும் செய்யப்பட்டன. (எ-250)

# வன்னிப் பகுதிக்கு இடமாற்றம் செய்யப்பட்ட ஆசிரியர்கள் தொடர்பான மீளாய்வு செவ்வாயன்று

வன்னிப் பெருநிலப்பரப்புக்கு இடமாற்றம் செய்யப்பட்ட ஆசிரியர்களின் இடமாற்றம் தொடர்பாக மீள் பரிசீலனை செய்வதற்கான குழு நாளை மறுதினம் 31 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணத்தில் மீளாய்வு தொடர்பான பணிகளை மேற்கொள்ளவுள்ளது.

யாழ்.மாவட்ட மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் அலுவலகத்தில் வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன் தலைமையில் மேற்கொள்ளப்படவுள்ள இடமாற்றம் தொடர்பான இந்த மீளாய்வுக் குழுவில் வடக்குமாகாண கல்விப் பணிப்பாளர் வீ.இராசையா உட்பட மாகாண கல்வித் திணைக்கள உயர் அதிகாரிகள் பலரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

கல்வி வலயங்களின் கல்விப் பணிப்பாளர்கள், வலயங்களின் திட்டமிடல் பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், நிர்வாக உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், இடமாற்றம் தொடர்பான பணியை மேற்கொண்ட அதிகாரிகள் மற்றும் ஆசிரியர் தொழிற் சங்கங்களின் பிரதிநிதிகள், இடமாற்றச் சபையின் உறுப்பினர்கள் இதில் கலந்து கொள்ளுமாறு அழைக்கப்பட்டுள்ளனர்.

யாழ்.மாவட்டத்தில் உள்ள 5 வலயங்களின் மீளாய்வுப் பணிகளும் தனித்தனியாக - வலயரீதியாக - மேற்கொள்ளப்படவுள்ளன. மாகாணக் கல்வித் திணைக்களம் விதித்த நிபந்தனைக்கு புறம்பாக இடமாற்றம் செய்யப்பட்டவர்கள் என்ற வகையில் யாழ்.மாவட்டத்தில் இருந்து 50இற்கும்மேற்பட்ட மேன்முறையீடுகள் செய்யப்பட்டுள்ளன. இதில் 40 மேன்முறையீடுகள் வரையில் யாழ்.கல்வி வலயத்தைச் சேர்ந்த ஆசிரியர்களால் செய்யப்பட்டுள்ளன என கூறப்படுகின்றது.

இதேவேளை - யாழ்.கல்வி வலயத்தில் இருந்து நான்கு மாதங்களுக்கு முன்னர் தென்மராட்சி இடமாற்றம் பெற்றுச் சென்ற ஆசிரியர் ஒருவருக்கும் யாழ்.வலயத்தில் இருந்து வன்னிப் பெருநிலப் பரப்பிற்கு இடமாற்றம் வழங்கப்பட்டிருப்பதாகவும் அவர் 6 வருடங்களுக்கு மேற்பட்ட காலங்கள் கஷ்டப் பிரதேச சேவையை பூர்த்தி செய்திருப்பதாகவும் கூறப்படுகின்றது. (எ-11)

# அச்சுவேலி - செல்வச்சந்நிதி வீதியில் பொதுமக்கள் பயணிக்க மீண்டும் தடை?

அச்சுவேலி, ஓக. 30

அச்சுவேலி - செல்வச்சந்நிதி வீதியில் கடந்த வெள்ளிக்கிழமை முதல் பொதுமக்கள் பயணம் செய்வதற்கு அனுமதிக்கப்படவில்லை எனக் கூறப்படுகின்றது. எனினும் வீதி மூடப்பட்டது தொடர்பாக பாதுகாப்புத் தரப்பினரால் உத்தியோக பூர்வமான அறிவிப்பேதும் விடுக்கப்படவில்லை எனவும் கூறப்படுகின்றது.

30 வருடங்கள் மக்களின் பயன்பாட்டுக்குத் தடை செய்யப்பட்டிருந்த அச்சுவேலி - செல்வச்சந்நிதி வீதி தொண்டமானாறு செல்வச் சந்நிதி கொடியேற்றத்திற்கு முன்னர் பொதுமக்களின் போக்குவரத்துக்காகத் திறந்து விடப்பட்டிருந்தது. பகல் வேளையில் காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை பொதுமக்கள் இவ்வீதியூடாகப் பயணம் செய்வதற்கு அனுமதிக்கப்பட்டிருந்தனர். ஆயினும் கடந்த வெள்ளிக்கிழமை முதல் பொதுமக்கள் இந்த வீதியால் பயணிக்க அனுமதிக்கப்படவில்லை.

அச்சுவேலியில் இருந்து செல்லும்போது தம்பாளைச் சந்திக்கு அப்பால் இடைக்காடு புவனேஸ்வரி அம்மன் கோயிலுக்கு முன்னாலும் தொண்டமானாற்றில் இருந்து வரும்போது தொண்டமானாறு பாலத்திலும் பாதை தற்போது மூடப்பட்டிருக்கின்றது. (எ-11)







யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு மூன்று நாள் விஜயத்தை மேற்கொண்டு நேற்று வந்த உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்கா பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற பல்வேறு நிகழ்வுகளிலும் பங்கேற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

யாழ்.பல்கலைக்கழக ஊழியர்களுடன் எஸ்.பி.திஸநாயக்கா கலந்துரையாடுவதையும் அருகில் யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் நா.சண்முகலிங்கன் இருப்பதையும் மருத்துவபீட வளாகத்தில் இணைந்த சுகாதாரக் கல்வித் துறைக்கான புதிய கட்டடம் அமைப்பதற்காக சமய கிரியைகள் இடம்பெறுவதையும் புதிய கட்டடம் அமைப்பதற்கான பெயர்ப்பலகையை அமைச்சர் திறந்து வைப்பதையும் மருத்துவபீட மைதானத்தை அமைச்சரும் குழுவினரும் பார்வையிடுவதையும் படங்களில் காணலாம். *(படங்கள்: தமிழரசன், உமா)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில்
12.02.1956

ஆண்டவன் அடியில்
10.09.2009

## அமரர் பாலசுப்பிரமணியம் குகனேசன்

(பிரபல சந்தை வர்த்தகர், திருநெல்வேலி)

ஆண்டொன்று கழிந்திட்ட போதினிலும்
ஆறவில்லை எங்கள் மனதின் சோகங்கள்
இவ்வுலக வாழ்வில் உங்கள் பணி முடித்து
இறைவனடி சென்று ஓராண்டு இன்று ஆனபோதும்
நீங்கள் எமக்காக ஆற்றிய பணிகளை இந்நினைவுநாளில்
நீள நினைந்துருகி உள்ளம் துடிக்கின்றோம்.
அன்புடனே எம்மை அரவணைத்து ஆதரவாய்
நம் குடும்பத்தின் நாயகனாய் நாங்கள்
நல்லுயர்வுடன் வாழ்ந்திடவே நாளுமே
பாடுபட்ட நம் குடும்பக் குலவிளக்கே!
வாழ்வில் என்றும் வளமுடன் எம்மை
வாழவைத்து வையகத்தில் உயர்த்திவிட்ட உத்தமரே!
தவழ்ந்து மகிழ்ந்து வளர்ந்த உம் ஊரைவிட்டு
தாங்கி வளர்த்த உம் உறவுகளைத்
தரணியிலே தவிக்கவிட்டுச் சென்றதேனோ?
காலத்தின் நீரோட்டத்தில் கழிந்ததுவே ஓராண்டு
காலமெல்லாம் நினைத்து புலம்புகின்றோம்
கண்ணீரால் உம்மை அர்ச்சித்து வணங்குகின்றோம்
ஆசையுடன் எம்மை வளர்த்த தலைவனே!
உங்கள் ஆத்மா என்றும் சாந்தி பெற்றிடவே
ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்
முதலாண்டு நினைவு நாளினிலே!

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

இன்று (30.08.2010) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் எங்கள் குடும்பத் தலைவரின் முதலாமாண்டு ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குடும்பத்தினர்.

சுதுமலை கிழக்கு,
மானிப்பாய்.

ஜெனா(பெறாமகன்) பிரான்ஸ்.

(102646)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மத்திய மாகாணத்தின் பிரதேச செயலர் பிரிவுகளில் முஸ்லிம் கலாசார அதிகாரிகளை நியமிக்க ஏற்பாடு

பூஜாப்பிட்டிய, ஓக 30

மத்திய மாகாணத்திற்கு உட்பட்ட பிரதேச செயலாளர் பிரிவுகளில் முஸ்லிம் கலாசார அதிகாரிகள் நியமனம் செய்யப்படவுள்ளனர் எனத் தெரியவருகின்றது.

இதற்கான நடவடிக்கைகள் மும்முரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் மத்திய மாகாண சபைப் பிரிவுக்கு உட்பட்ட தெரிவுசெய்யப்பட்ட ஐந்து பிரதேச செயலாளர் பிரிவுகளில் முஸ்லிம் கலாசார அதிகாரிகள் நியமனம் செய்யப்படவுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுன்றது.

இதற்கான நடவடிக்கைகளை மாகாண சபை உறுப்பினர் ரிஸ்வி பாரூக் மேற்கொண்டு வருகின்றார். (ளி)

## விளையாட்டு உபகரணம் வழங்கல்

கண்டி, ஓக 30

மத்திய மாகாணசபையின் விளையாட்டுத் துறையை விருத்திசெய்யும் வகையில் விளையாட்டு உபகரணங்களை வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இவ்விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் திட்டம் இலங்கை சர்வதேச அபிவிருத்தி ஒன்றியத்தின் அனுசரணையுடன் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இவ்விளையாட்டு உபகரணங்களை வழங்குவதற்கான ஏற்பாடு களை மத்திய மாகாணக் கல்விப் பணிப்பாளர் காரியாலாயம் மேற்கொண்டுள்ளது. (ளி)




### இரண்டு மாதங்களுக்கு முன்னர்

# நான்கு பிள்ளைகளையும் பஸ்ஸில் தவிக்கவிட்டு தலைமறைவாகிய பெண் மைத்துனருடன் கைது

நுவரெலியா, ஓக.30

சுமார் இரண்டு மாதங்களுக்கு முன்னர் தனது நான்கு பிள்ளைகளையும் பஸ்ஸில் பரிதவிக்கவிட்டு, கணவனின் சகோதரனுடன் தலைமறைவான பெண்ணும், குறிப்பிட்ட நபரும் அளவத்துகொட பொலிஸாரால் கடந்த வியாழக்கிழமை கைதுசெய்யப் பட்டுள்ளனர்.

இது குறித்துக் கூறப்பட்டவை வருமாறு:-

கண்டி, ரங்கலை பொலிஸ் பிரிவில் வசித்துவந்த நான்கு பிள்ளைகளின் தாயான இப்பெண் தனது கணவனின் சகோதரனுடன் நெருங்கிய தொடர்பைக் கொண்டிருந்தார் எனக் கூறப்படுகிறது.

சம்பவதினம் எவருக்கும் தெரியாமல் நான்கு பிள்ளைகளையும் அழைத்துக் கொண்டு பஸ் ஒன்றில் சற்றுத் தூரம் சென்ற இவர் இடையில் அவர்களை பஸ்ஸில் அநாதரவாக விட்டுவிட்டு மைத்துனருடன் தலைமறைவாகிவிட்டார்.

சிறிது நேரத்தில் பஸ் ஊழியர் சந்தேகம் வந்து விசாரித்தபோது தாயைக் கண்டுபிடிக்கமுடியவில்லை. பிள்ளைகள் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இந்தநிலையில் நேற்றுமுன்தினம் காலை அளவத்துகொட நகரில் சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடிய இவர்களிருவரையும் பொலிஸார் கைது செய்து விசாரித்த போதே இந்த விடயம்அம்பலத்திற்கு வந்துள்ளது.

மேற்படி பெண்ணால் கைவிடப்பட்ட குழந்தைகள் 11, 09, 07, 05 வயதையுடையவர்கள். இந்த நான்கு குழந்தைகளும் தற்போது சிறுவர் பராமரிப்பு நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட தாயும், அவரது மைத்துனரும் பன்விலை நீதிமன்றில் ஆஜர் செய்யப்படவுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர். (ளி)

# இ.தொ.கா. அமைப்பாளர் ஜெகதீஸ்வரனின் இல்லம் உடைக்கப்பட்டு ரூ.15 லட். பெறுமதி நகை கொள்ளை

நுவரெலியா, ஓக. 30

முன்னாள் பிரதியமைச்சரும்; இ.தொ.கா தேசிய அமைப்பாளருமான எஸ்.ஜெகதீஸ்வரனின் ஹற்றன் இல்லம் உடைக்கப்பட்டு 15 லட்சம் ரூபா பெறுமதியான தங்க நகைகள் கொள்ளையிடப்பட்டுள் என என அவர் தெரிவித்தார்.

இச்சம்பவம் கடந்த வியாழக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

வைத்திய பரிசோதனை ஒன்றுக்காகத் தாம் குடும்பத்துடன் கொழும்பு சென்றுவிட்டு திரும்பி வந்து பார்த்தபோது வீடு உடைக்கப்பட்டிருந்தது என்றும்-

அங்கிருந்த நகைகளும் இரண்டு லட்சம் ரூபா பணமும் கொள்ளையிடப்பட்டிருந்தன என்றும் அவர் தெரிவித்தார்.

சம்பவம் தொடர்பாக ஹற்றன் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ளி)

# கம்பளையிலிருந்து நயாபான வரை செல்லும் பிரதான வீதியைப் புனரமைக்கக் கோரிக்கை

## கவனிப்பார்களா அதிகாரிகள்?

கம்பளையிலிருந்து நயாபான நோக்கிச்செல்லும் பிரதான பாதை முற்றாகச் சேதமடைந்த நிலையில் காணப்படுகின்றது.

இப்பாதையூடாகவே நியூ.பீக்கொக், சார்ளி ஜனபதிய, பாதெக்க, கெக்குலந்த, கனறிவத்தை, புலத்வத்தை மற்றும் அட்டபாகே போன்ற பகுதிகளுக்குச் செல்லவேண்டும்.

இப்பாதை புனரமைக்கப்படாது குன்றும், குழியுமாகக் காணப்படுவதால் இதனூடாகப் பயணம் செய்யும் பொதுமக்களும், வாகனச்சாரதிகளும் பெரும் சிரமங்களுக்கு முகம்கொடுத்து வருகின்றனர்.

கர்ப்பிணித் தாய்மார் மற்றும் நோயாளர்களை ஏற்றிச்செல்லும் வாகனங்கள் குழிகளில் விழுந்து குலுங்கிப் பயணிப்பதால் அவர்கள் ஆபத்தான நிலைக்குச் செல்லும் சந்தர்ப்பங்களும் இடம்பெற்றுள்ளன.

நாளாந்தம் இப்பாதையூடாகப் பயணிக்கும் பாடசாலை மாணவர்கள் சொல்லொணாத் துயரங்களை அனுபவிக்கின்றனர். குறிப்பாக மழைக்காலங்களில் இவ்வீதியில் தண்ணீர் தேங்கி நிற்பதால் அது சேறும் சகதியுமாக மாறிவிடுகின்றது.

அதேவேளை, இப்பாதையில் பாரதெக்க பகுதியிலிருந்து சுமார் நான்கு கிலோமீற்றர் தூரம் கொண்ட பகுதி வெளிச்சமின்றிக் காணப்படுகின்றது.

இதனால் பிரதேசவாசிகள் பெரும் சிரமங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

எனவே, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இவ்வீதி விடயத்தில் நடவடிக்கை எடுக்கவேண்டும் எனப் பிரதேசவாசிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ளி)

# ஆழ்கடலில் மீன்பிடிக்கச் சென்ற மூவர் 10 நாள்களாகியும் வீடு திரும்பவில்லை

## பா. அரியநேத்திரன் எம்.பியிடம் மனைவிமார் முறையீடு

கொழும்பு, ஓக. 30

வாகரையிலிருந்து படகில் மீன்பிடிக்கச் சென்ற மூன்று மீனவர்களைக் கடந்த 10 நாள்களாகக் காணவில்லை என அவர்களது உறவினர்கள் மட்டு.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பா. அரியநேத்திரனிடம் முறைப்பாடு செய்துள்ளனர்.

எனினும், இச்சம்பவம் தொடர்பாக கடந்த வியாழக்கிழமை கல்குடா பொலிஸ் நிலையத்திலும் அவர்களது உறவினர்கள் முறையிட்டுள்ளனர் எனத் தெரியவருகிறது.

வாகரைக் கடல் பிரதேசத்தில் ஆழ்கடல் மீன்பிடிப்புக்காக கடந்த 19ஆம் திகதி குறித்த மூவரும் சென்றுள்ளனர். எனினும் அவர்கள் இதுவரை கரை திரும்பாமையை அடுத்தே அரியநேத்திரன் எம்.பியிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பாக அரியநேத்திரன் எம்.பி. கூறியவை வருமாறு:

''வாழைச்சேனை, பேசாலை, விஷ்ணுகோ விலைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை சிவராஜா (வயது - 53), சிவராஜா ஜீவராஜ்(வயது - 20), செல்லப்பா மனோகரன் (வயது - 41) ஆகியோரே இவ்வாறு மீன்பிடிக்கச் சென்று இதுவரை வீடுதிரும்பவில்லை என மீனவர்களின் மனைவிமார் என்னிடம் முறையிட்டனர்.

இது தொடர்பாக நான் மட்டக்களப்பு மாவட்டப் பிரதிப் பொலிஸ் மா அதிபரிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது, அவர் நடவடிக்கை எடுக்கப்படும் எனக் கூறினார்.

இதேவேளை, இச்சம்பவம் தொடர்பாக கடற்றொழில் அமைச்சுக்கு கடிதம் ஒன்று அனுப்பவுள்ளேன்'' - என்றார். (ளி)

# மட்டு.உள்ளூராட்சி மன்றங்களில் உத்தியோகத்தர்களுக்குப் பயிற்சி

மட்டக்களப்பு, ஓக. 30

மட்டக்களப்பு மாவட்ட உள்ளூராட்சி மன்றங்களில் பணிபுரியும் உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சித்துறை கணக்கீட்டு நடவடிக்கைகள் பற்றிய பயிற்சி நெறிகள் நடத்தப்பட்டுள்ளன.

உள்ளூராட்சி மன்றங்களுக்கான பிரத்தியேக கணக்கீட்டு நடைமுறைகள் தொடர்பாக உத்தியோகத்தர்களைத் தெளிவுபடுத்துவதற்காகவும், உள்ளூராட்சி மன்றங்களின் கணக்கீட்டு நடவடிக்கைகளைச் சீர்ப்படுத்துவதற்காகவும் இந்தப் பயிற்சி நெறிகள் நடத்தப்பட்டன எனப் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி என்.சத்தியானந்தி தெரிவித்தார்.

உள்ளூராட்சித்துறை கணக்கீட்டு முறைகள் ஏனைய திணைக்களங்களின் கணக்கீட்டு முறைகளை விட வித்தியாசமானவை. இவைகுறித்து உத்தியோகத்தர்களுக்கு முழுமையான அறிவைப் பெற்றுக் கொடுக்க வேண்டிய அவசியம் உணரப்பட்டுள்ளது.

இதேவேளை, கணக்கீட்டு முறைகளை ஒருங்கிணைத்து துரிதப்படுத்தும் நோக்குடன் உள்ளூராட்சி மன்றங்களின் கணக்கீட்டு நடவடிக்கைகளை கணினிமயப்படுத்துவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

இதுபற்றிய இரண்டுநாட்கள் பயிற்சிச் செயலமர்வு மட்டக்களப்பு பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் கடந்த திங்கள், செவ்வாய்க்கிழமைகளில் நடைபெற்றது.

கிழக்கு மாகாண உள்ளூராட்சித் திணைக்களப் பிரதம கணக்காளர் கே.கௌஸ்துபாமணி பிரதான வளவாளராகக் கலந்துகொண்டார். (ளி)

# விவேகானந்தா விளையாட்டுக்கழகம் சாரதா சிறுமியர் இல்லத்துக்கு உதவி

காரைதீவு, ஓக. 30

விவேகானந்தா விளையாட்டுக்கழகம் கொடி விற்பனை மூலம் ஈட்டிய நிதியையும், அன்பளிப்புப்பொருள்களையும் அண்மையில் காரைதீவு இ.கி.மிஷன் சாரதா சிறுமியர் இல்லத்திற்கு கையளித்தது.

கழக ஸ்தாபகர் தட்சணாமூர்த்தி நவநீதன்(பிரான்ஸ்) நேரடியாக அங்கு விஜயம் செய்து அன்பளிப்புகளை இல்ல சிறுமியர்க்கு வழங்கினார். அத்துடன் மதிய விருந்துபசாரமும் அளித்தார்.

இல்ல முகாமையாளர் பொன்னையா சிவயோகன் முன்னிலையில் நடைபெற்ற கையளிப்பு வைபவத்தில் கழக முக்கியஸ்தர்களான மு.வரதராஜன், ஜே.ஜெயராஜா, ரி.தயாபரன், ரி.ஆசைராசா ஆகியோர் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

வருடா வருடம் கொடி விற்பனை மூலம் கிடைக்கப்பெறும் நிதியை மேற்படி விவேகானந்தா விளையாட்டுக் கழகம் இச்சிறுமியர் இல்லத்திற்கு வழங்கி வருவது பாராட்டுக்குரிய அம்சமாகும்.

கழக ஸ்தாபகர் நவநீதனின் கும்பத்தினரும் இதில் கலந்துகொண்டனர். (ளி)




# மோட்டார் சைக்கிள் விபத்தில் ஒருவர் மரணம்

மட்டக்களப்பு, ஓக. 30

நிந்தவூர், பொதுச்சந்தைக்கு அருகில் கடந்த வியாழக்கிழமை இரவு 10 மணியளவில் இடம்பெற்ற மோட்டார்சைக்கிள் விபத்தில் ஒருவர் உயிரிழந்தார்.

நிந்தவூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க கோப்சிற்றி விற்பனைநிலைய முகாமையாளர் ரீ.என்.ஆப்தீன் என்பவரே விபத்தில் உயிரிழந்தவராவார்.

இந்த விபத்தின்போது இவரது தலையிலேற்பட்ட காயம் காரணமாக உட்பகுதியில் இரத்தக்கசிவும், காயமும் ஏற்பட்டன. இந்நிலையில் இவர் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லும் வழியில் உயிரிழந்துள்ளார்.

கல்முனை நீதிவான் நீதிமன்ற பதில் நீதிவான் ஏ.எம்.பதுறுதீன், சம்பவ இடத்திற்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டார். (ளி)

# மட்டக்களப்பில் விபத்து மாணவி ஒருவர் மரணம்

மட்டக்களப்பு, ஓக. 30

மட்டக்களப்பு, புதிய பாலை வீதியில் கடந்த வெள்ளிக்கிழமை காலை 7.30 மணியளவில் இடம்பெற்ற வீதி விபத்தில் பாடசாலை மாணவி ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

பிரத்தியேக வகுப்புக்காக சைக்கிளில் சென்றுகொண்டிருந்த குறித்த மாணவி மீது கனரக வாகனமொன்று மோதியதாலேயே இவ்விபத்து சம்பவித்துள்ளது.

வின்சன் மகளிர் உயர்தரப் பாடசாலையில் தரம் - 11 இல் கல்வி கற்கும் சற்குணம் கோகிலா என்ற மாணவியே இந்த விபத்தில் பலியானவர்.

வாகனத்தின் சாரதி மற்றும் உதவியாளர் ஆகியோர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ளி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

### மேடம்



புதுமையான அனுபவங்களைப் பெறலாம். ஏட்டிக்குப் போட்டியாக செயற்பட்ட சிலர் மனம் மாறி உதவி செய்ய முன்வருவர். தொலைபேசி வழியில் சந்தோஷம் தரும் செய்திகளைக் கேட்கலாம். நாடிவந்த சிலருக்கு இல்லை என்று சொல்லாமல் உதவி செய்வீர்கள். உங்களிடம் கைமாத்தாக பணம் வாங்கிய ஒருவர் அதை திருப்பிக் கொடுக்கலாம்.

### இடபம்



உறவினர்கள் , நண்பர்கள் வழியில் சுபச் செலவுகளைச் சந்திக்கலாம். சில விடயங்களில் வேகமாக இறங்கி விட்டு பின்னர் அதிலிருந்து பின்வாங்கலாம். பெரிய மனிதர்கள் சிலரின் அறிமுகம் கிடைக்கலாம். சிறு உடல் உபாதைகளைச் சந்திக்கலாம். வழக்கத்திற்கு மாறாக கூடுதல் நேரம் தூங்கலாம். வீட்டுக்குத் தேவையானதை வாங்கிக் கொடுப்பீர்கள்.

### மிதுனம்



பிள்ளைகள், வாழ்க்கைத் துணைவரின் மனம் கோணாமல் நடந்து கொள்வீர்கள். ஆடை, அலங்காரப் பொருள்கள் வாங்கலாம். சொந்த விடயம் ஒன்றை நண்பர்களிடம் சொல்லி ஆலோசனை கேட்பீர்கள். பெண்களால் சந்தோஷமான அனுபவங்களைப் பெறலாம். உடன் பிறப்புக்கள் விடயங்களில் பட்டும் படாமல் நடந்து கொள்ளவும்.

### கடகம்



செவி குளிரும் செய்திகளைக் கேட்கலாம். நீண்ட நாள்களாக செல்லாத உறவினர் ஒருவரின் வீட்டிற்கு செல்லலாம். உங்களுக்கு வேண்டிய காரியம் ஒன்றை சாதிப்பதற்காக தந்திரமாக நடந்து கொள்வீர்கள். பெண்கள் பிறந்த வீட்டின் உதவிகளைப் பெறலாம். நண்பர்களிடம் பெருமை பேசுவீர்கள். தம்பதியர் இடையே அன்யோன்யம் கூடும்.

### சிங்கம்



உதவி செய்வதாக சொன்ன சிலர் கடைசி நேரத்தில் கையை விரிக்கலாம். உங்களின் ரகசியம் ஒன்றை மற்றவர்கள் தெரிந்து கொள்ளலாம். பிள்ளைகளுக்காக, குடும்ப உறுப்பினர்களுக்காக சில பொருள்களை வாங்கலாம். சிலரை தேவையில்லாமல், தொந்தரவு செய்து அவர்களின் அதிருப்திக்கு ஆளாகுவீர்கள். திட்டமிட்ட வெளியூர் பயணம் செல்லலாம்.

### கன்னி



குடும்ப பெரியவர்கள் உங்களின் செயற்பாடுகளை விமர்சிக்கலாம். தவறு என தெரிந்தும் சில வேலைகளை செய்து, மற்றவர்களின் அதிருப்திக்கு ஆளாகுவீர்கள். சபலங்களால் சிறு இழப்புகளுக்கு ஆள்படலாம். சுலபமாக முடியும் என நினைத்த வேலை ஒன்றுக்கு நீண்டநேரம் காத்திருக்கலாம். மறதியால் அவதிகளுக்கு ஆளாகலாம்.

### துலாம்



தடைப்பட்டுக் கொண்டே வந்த சில விஷயங்கள் நல்ல விதமாக முடியலாம். குடும்ப உறுப்பினர்களுடன் வெளியிடங்களுக்குச் செல்வீர்கள். பல நாள்களாக கொடுக்க நினைத்த கடன் மிகுதி ஒன்றை கொடுப்பீர்கள். நண்பர்கள் மனம் கோணாமல் நடந்து கொள்வீர்கள். வெளியூர்களில் இருக்கும் சிலரை தொடர்பு கொண்டு முக்கிய விடயமாகப் பேசுவீர்கள்.

### விருச்சிகம்



விமர்சனங்களையும் அறிவுரையாக ஏற்றுச் செயற்படுவீர்கள். நீங்கள் நினைத்தது போல சில விடயங்கள் நடக்காமல் போனாலும், நடப்பது நல்ல விதமாகவே நடக்க லாம். உறவினர்களுடன் ஏற்பட்ட மனஸ்தாபம் விலகும். பணப் பற்றாக்குறை தீர்ந்து கையில் பணப்புழக்கம் அதிகரிக்கும். தந்தை வழியில் உதவிகள் கிடைக்கலாம்.

### தனுசு



உங்களிடம் பேச விரும்பும் ஒருவரிடம் நீங்கள் பேச விரும்பாமல் தவிர்க்கலாம். பிள்ளைகள் வழியில் திடீர் செலவுகளைச் சந்திக்கலாம். பெண்கள் விடயங்களில் பட்டும் படாமல் நடந்துகொள்ள வேண்டும். மற்றவர்கள் பெருமையாக நினைக்க வேண்டும் என்பதற்காக சில காரியங்களைச் செய்வீர்கள். சிலருடன் ஏற்பட்ட மனஸ்தாபம் தீரும்.

### மகரம்



குடும்ப உறுப்பினர்கள் உங்களுக்கு நல்ல யோசனைகள் சொல்லலாம். காலை நேரத்தில் முக்கியமான செய்தி ஒன்றை கேட்கலாம். வீட்டுக்குத் தேவையான பொருள்களை வாங்கிக் கொடுப்பீர்கள். தாய் வழியில் சுபச் செலவுகளைச் சந்திக்கலாம். உறவினர் ஒருவரை பார்ப்பதற்காக நீண்ட தூர பயணங்கள் செல்லலாம். வெறுப்பு உண்டாகும்.

### கும்பம்



உங்களைப் பார்த்து மற்றவர்கள் பொறாமைப் படும் வகையிலான நிகழ்ச்சிகள் நடக்கலாம். சோம்பலாக இருக்காமல் காலை முதல் மாலை வரை பரபரப்பாக செயற்படுவீர்கள். உங்களை நம்பி சிலர் பணப்பொறுப்புகளை ஒப்படைக்கலாம். புதிய முயற்சிகளில் முத்தான வெற்றி கிடைக்கும் நாள். சுபகாரிய நிகழ்ச்சிகளில் பங்கேற்கும் வாய்ப்பு உண்டு.

### மீனம்



திட்டமிட்ட வேலைகளை நாளை செய்யலாம் என தள்ளி வைப்பீர்கள். நெருங்கிய சொந்தங்களின் சந்திப்பு நிகழும். எங்காவது வெளியில் செல்லும் போது பொருள்களை மறந்து விட்டு செல்வதன் மூலம் அவதிகளுக்கு ஆளாகலாம். பிள்ளைகளின் பொறுப்பான செயற்பாடு கண்டு பெருமைப் படுவீர்கள். சிலரிடம் கடன் வாங்கலாம்.

Mega SAT
மெகா ஸ்கொலர்ஷிப் 2010
After O/L & A/L Join CSC-ASIAN
Win 75% SCHOLARSHIP
கொம்ப்யூட்டர் உயர்கல்விக்கான இலவச புலமைப்பரிசில் பரீட்சை
இலவச பரீட்சை
செப்டெம்பர் 12th ஞாயிறு

கொம்ப்யூட்டர் புலமைப்பரிசில்
- பரீட்சை அனுமதி முற்றிலும் இலவசம்
- பரீட்சையை தமிழ் or ஆங்கிலத்தில் எழுதலாம்
- அடிப்படைத் தகைமை G.C.E. (O/L)
- வினாத்தாள் 50 நிமிடங்கள் மட்டுமே
- O/L பாடத்திட்டம் மற்றும் பொது அறிவு வினாக்கள்
- 75% வரையான ஸ்கொலர்ஷிப் (கட்டணக்கழிவு)
- இலவச பாடநூல்கள் (இந்தியா & இலங்கை)
- தவணைமுறை கட்டண வசதி
- சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்கள்

O/L, A/L பரீட்சைகளின் பின் Why Pay More?
உயர்தர பரீட்சை எழுதிய மாணவர்கள் மற்றும் ICT துறையில் ஆர்வம் உள்ளவர்கள் அனைவரும் மெகா இலவச புலமைப்பரிசில் பரீட்சையில் பங்குபற்றி, பெறும் மதிப்பெண்களுக்கமைய 75% வரையிலான ஸ்கொலர்ஷிப்பைப் பெற்றுக்கொள்ளலாம்.



Collect Your Free Admission Card, Today !
விரையுங்கள், வெற்றிபெறுங்கள் !
CSC-ASIAN COMPUTER EDUCATION
2G, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். T.P : 021-222 5677
கொடிகாமம் வீதி, நெல்லியடி. T.P : 021-2262399
230, 1ம் மாடி, கண்டி வீதி,

## யாழ்.முற்றவெளியில் திரளும் உல்லாசப் பயணிகள்

யாழ்.முற்றவெளித் திடலில் தினமும் மாலை நேரங்களில் தென் பகுதி உல்லாசப் பிரயாணிகள் திரண்டு வருகின்றனர். அவர்கள் வருகைதரும் ஏராளமான வாகனங்களும் அப்பகுதியில் நிறுத்தப்பட்டிருப்பதைக் காணமுடிகிறது. சத்திரத்துச் சந்திக்கும் அஞ்சல் வளாகத்துக்கும் இடைப்பட்ட பகுதிகளில் இப்பொழுது வாகனங்களைக் கொண்டுசெல்வதைப் பொலிஸார் தடுத்து நிறுத்தி வருவதால் அப்பகுதிகளில் ஏற்பட்டுவந்த நெரிசல் பெருமளவில் தவிர்க்கப்பட்டுள்ளதை அவதானிக்க முடிகிறது. மேலும் ஏனைய வீதிப்போக்குவரவுகளிலும் ஏற்படுகின்ற நெரிசல்களைத் தவிர்ப்பதற்காக காலையில் இருந்தே ஒவ்வொரு பிரதான சந்திகளிலும் பொலிஸார் நிறுத்தப்பட்டு வீதி ஒழுங்குகளை மேற்கொண்டு வருகின்றனர். (160)

நல்லூரான் உற்சவ தினங்களில் அதிரடி மலிவு விற்பனையில்...
வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட குளியலறை சாதனங்கள், சகல மாபிள் வகைகள், கொமட் செட் வகைகள், பைப் வகைகள், "DUKE" பெயின்ற் வகைகள், கல்மிதி போன்கள் போன்றவற்றை தரமான, மலிவான விலையில் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள நாடுங்கள்
போக்குவரத்து வசதி இலவசம்.
ஸ்ரார் செராமிக்ஸ்
இல.05, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம். தொ.பே: 0215672061, 077 7578277.

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
**வீரசிங்கம் தெய்வநாயகி**

திதி: அபரபக்க சஷ்டி

மலர்வு 15★02★1939


உதிர்வு 22★08★2008

அன்புடனும் பண்புடனும் எமைக்காத்து
அறிவூட்டி வழிகாட்டி இன் வையகதில்
வாழ்வாங்கு வாழவைத்த எம் அன்னையே!
ஈராண்டாய் எமைவிட்டு எங்கு நீர் சென்றீரோ?
உமைத் தேடிக் காணாது நாமெல்லாம்
தவிக்கின்றோம் இப்புவிதனிலே-மாறாது
மாறாது உம் நினைவுகள் எம் நெஞ்சமதில்.

அழியாத உங்கள் நினைவுகளுடன்:
குடும்பத்தினர்.

கௌரி கோட்டம்,
அல்வாய். (102543)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




01.10.1993

★ நேற்று முன்தினம் இயக்கச்சியில் நடந்த சண்டையில் 6 உயர் அதிகாரிகள் உட்பட 120 படையினர் கைதானதாக பாதுகாப்புப் படை வட்டாரங்களை மேற்கோள் காட்டி ஏஜென்சி செய்திகள் தெரிவிப்பு.

★ வடக்கில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள "ஒப்பரேஷன் யாழ்தேவி" இராணுவ நடவடிக்கையில் 10 ஆயிரம் படையினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக பி.பி.ஸி வானொலி தெரிவிப்பு.

02.10.1993

★ இந்தியாவின் மகராஷ்டிரா மாநிலத்தில் நேற்று இடம்பெற்ற பெரும் நில நடுக்கத்தில் 10 ஆயிரம் பேருக்கு மேற்பட்டோர் உயிரிழந்ததாக இந்திய வானொலி அறிவிப்பு.

★ வடக்கில் யாழ்ப்பாணத்தில் பிரதேசத்தைப் பிடிக்க இராணுவத்தால் முடியும். ஆனால் பிடித்த பிரதேசத்தை தக்க வைத்துக்கொள்வது கஷ்ரமான காரியம் என பாதுகாப்பு ஆய்வாளர்கள் விமர்சிப்பு.

03.10.1993

★ இலங்கையின் இனப்பிரச்சினைக்கு இராணுவத்தீர்வு காணமுயன்றால் 2000 ஆம் ஆண்டுக்கு முன் இந்த நாடு இரு கூறுகளாகப் பிரிந்துவிடும் என முன்னாள் விமானப்படைத் தளபதி ஹரி குணதிலக தெரிவிப்பு.

★ சர்வதேச ரீதியில் தடை செய்யப்பட்ட "கிளஸ்டர்" குண்டுகளை இலங்கை விமானப்படை தமிழ்ப் பகுதிகளில் வீசுவதாக விடுதலைப் புலிகள் குற்றச்சாட்டு.

04.10.1993

★ படையினர் தாம் கைப்பற்றியதாகக் கூறும் கிளாலிப் பகுதியை தொடர்ந்தும் தமது கட்டுப்பாட்டில் வைத்திருப்பதா அல்லது அங்கிருந்து வெளியேறுவதா என்பது குறித்து ஆராய்ந்து வருவதாக ஏஜென்சி செய்திகள் தெரிவிப்பு.

★ யாழ்தேவி இராணுவ நடவடிக்கையில் கொல்லப்பட்ட இராணுவத்தினரில் படையினரால் மீட்கப்பட்ட 81 பேரின் சடலங்கள் அனுராதபுரம் ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டிருப்பதாக கொழும்பு பத்திரிகைகள் தெரிவிப்பு.

05.10.1993

★ புலிகள் மீண்டும் தாக்குதல் நடத்தலாம் என்ற அச்சத்தில் தாம் முன்னேறிய புலோப்பளை, அல்லிப்பளை மற்றும் கிளாலிப் பகுதிகளில் இருந்து இராணுவத்தினர் பின்வாங்கி தமது பழைய நிலைகளுக்குத் திரும்பியுள்ளதாக அறிவிப்பு.

★ கிளாலிப் பகுதியில் இருந்து பின்வாங்கிச் சென்ற படையினர் அப்பகுதியில் இருந்த 300க்கும் மேற்பட்ட பயணிகள் படகுகளைத் தீயிட்டுக் கொளுத்தியுள்ளதாகத் தெரிவிப்பு.

06.10.1993

★ 20 ஆயிரம் துருப்புகளுடன் அடுத்த தாக்குதலுக்கு அரச படைகள் தயாராவதால் ஆயுதப் போரில் இணைய வருமாறு இளைஞர், யுவதிகளுக்கு விடுதலைப் புலிகள் அவசர வேண்டுகோள் விடுப்பு.

★ கருணாநிதியைக் கொலை செய்யும் திட்டத்தில் விடுதலைப்புலிகளும் சம்பந்தப்பட்டிருப்பதாக கூறப்படுவதை விடுதலைப் புலிகள் இயக்கம் முற்றாக மறுத்திருப்பதாக பி.பி.ஸி வானொலி தெரிவிப்பு.

07.10.1993

★ 10 நாள்களுக்கு முன்னர் கொழும்பில் இருந்து விமான மூலம் பலாலிக்கு வந்த 9 பேர் கொண்ட யாழ். ஆஸ்பத்திரி டாக்டர்கள் நேற்று அங்கிருந்து "கோமாரி" கப்பல் மூலம் பருத்தித்துறையை வந்தடைந்ததாகத் தெரிவிப்பு.

★ விடுதலைப் புலிகளுடான சண்டையில் உடல் சிதறி உயிரிழந்த படையினரின் சதைத் துண்டங்கள் பெட்டி ஒன்றில் அடைக்கப்பட்டு அல்லிப்பளை கடற்கரையில் புதைக்கப்பட்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டிருப்தாகத் தெரிவிப்பு.

08.10.1993

★ தம்மைக் கொல்ல விடுதலைப் புலிகள் இயக்கம் திட்டமிட்டிருப்பதாக கருணாநிதி சுமத்திய குற்றச்சாட்டை விடுதலைப் புலிகள் இயக்கம் மறுப்பு.

★ குடாநாட்டின் பல பகுதிகளைச் சேர்ந்த 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொதுமக்கள் யாழ்ப்பாணம் வரமுடியாமல் கிளிநொச்சியில் தவம் கிடப்பதாகத் தெரிவிப்பு.

09.10.1993

★ வடமேல் மாகாண சபைக்கும், தென்மாகாண சபைக்கும் ஐ.தே.கட்சியைச் சேர்ந்த பிரமுகர்களை முதலமைச்சர்களாக நியமித்தமை சட்டவிரோதமானது என மேல்முறையீட்டு நீதிமன்றம் தீர்ப்பு அளித்துள்ளதாகத் தெரிவிப்பு.

★ இரத்தினபுரி பகுதியில் நேற்று ஏற்பட்ட பெரும் மண்சரிவு காரணமாக அதில் சிக்கி 50க்கும் மேற்பட்டோர் உயிரிழந்ததாகத் தெரிவிப்பு.

10.10.1993

★ தீவிர அரசியலில் இருந்து ஓய்வு பெறப் போவதாக கடந்தவாரம் அறிவித்த கருணாநிதி நேற்று திடீரெனத் தமது முடிவை மாற்றிக்கொண்டுள்ளதாக அறிவிப்பு.

★ சுதந்திர தமிழீழம் என்ற விடுதலைப் புலிகளின் கோரிக்கைக்கு தி.மு.க ஆதரவு அளிக்கவில்லை என தி.மு.க தலைவர் கருணாநிதி நேற்று பகிரங்கமாக அறிவிப்பு.

11.10.1993

★ தமிழக மக்களின் ஆதரவு பெற்றுள்ள கருணாநிதியை விடுதலைப் புலிகள் கொலை செய்ய திட்டமிட்டுள்ளதாகக் கூறி தமிழக மக்களை தமக்கெதிராக திசைதிருப்ப இந்திய மத்திய அரசும், "றோ" அமைப்பும் முயன்று வருவதாக தமிழீழக அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் கரிகாலன் தெரிவிப்பு.

★ ஐ.தே.கட்சியுடனோ அல்லது வேறேந்தக் கட்சியுடனோ இணைந்து செயறபடாமல் தனியாக இயங்குவது என ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணித் தலைவர் காமினி திஸநாயக்க தெரிவிப்பு.

12.10.1993

★ சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட தலைவர்களுள் ஒருவரான அனுரா பண் டரநாயக்க கட்சியின் உட்கட்சிப் பூசல் காரணமாக கட்சியில் இருந்து ராஜினாமாச் செய்திருப்பதாகத் தெரிவிப்பு.

★ நாடாளுமன்றத்தின் புதிய கூட்டத் தொடர் அடுத்த மாதம் ஆரம்பமாகும் போது ஜனாதிபதி விஜேதுங்க தமது கொள்கைத் திட்டத்தை வெளியிடுவார் என அறிவிப்பு.

13.10.1993

★ அண்மையில் வடபகுதியில் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கையில் தாம் வெற்றியீட்டியதாக இராணுவம் தெரிவிக்கும் நிலையில் அரசியல் தீர்வு ஒன்றுக்காக அரசு தயாராகிவரும் அறிகுறிகள் தென்படுவதாக கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்று தெரிவிப்பு.

★ இனப்பிரச்சினையில் மத்தியஸ்தம் வகிக்க ஐரோப்பிய நாடாளுமன்றம் முன்வந்ததை ஆளும் ஐ.தே.கட்சி நிராகரித்து விட்டதாகப் பத்திரிகைகள் தெரிவிப்பு.

14.10.1993

★ யாழ்தேவி இராணுவ நடவடிக்கை தோல்வியுற்றதைத் தொடர்ந்து இனிமேல் தமது நிலைகளில் இருந்து முன்னேறி புலிகளைத் தாக்கிவிட்டு தமது பழைய நிலைகளுக்கே பின்வாங்கும் உத்தியை இராணுவத்தினர் மேற்கொள்வர் எனத் தெரிவிப்பு.

★ ஆளும் ஐ.தே.கட்சியுடன் கருத்து வேறுபாடு ஏற்பட்டதைத் தொடர்ந்து வடமேல் மாகாண ஆளுநர் தமது பதவியை ராஜினாமாச் செய்துள்ளதாகத் தெரிவிப்பு.

15.10.1993

★ தமிழக மீனவர் இலங்கைக் கடற்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட விவகாரத்தால் ஏற்பட்ட முறுகல் நிலையைத் தளர்த்துவதற்காக இலங்கை அரசு, வெளியுறவு அமைச்சின் செயலாளர் பேர்னாட் திலகரத்தினவை புதுடில்லிக்கு அனுப்பிவைத்துள்ளதாகத் தெரிவிப்பு.

★ மன்னார் மாவட்டம் - தாழ்வுப்பாடு கடற்பகுதியில் மீன் பிடிக்கச் சென்ற 125 மீனவர்கள் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டுள்ளதாக விடுதலைப்புலிகள் குற்றச்சாட்டு.

# ஒரே சேவை மையத்தில் 5 வருடங்களுக்கும் மேல் பணியாற்றிய பிரதேச செயலர்களுக்கு விரைவில் இடமாற்றம்

## அரசு துரித நடவடிக்கை

5 வருட காலத்துக்கும் மேலாக ஒரே பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் அனைத்துப் பிரதேச செயலாளர்களுக்கும் இடமாற்றங்களை வழங்குவதற்கு நிர்வாக சேவைகள் மற்றும் உள்நாட்டு விவகார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

மேற்படி நியமனம், அங்கீகரிக்கப்பட்டுள்ள இடமாற்றுக் கொள்கையாக இருந்தாலும், இதுவரை காலமும் அக்கொள்கை முறையாக நடைமுறைப் படுத்தப்படாமையாலேயே அதனை உடன் நடைமுறைக்குக் கொண்டுவரும் முயற்சியில் அரசு இறங்கியுள்ளது.

அதற்கமைய ஒரே சேவை மையத்தில் 5 வருடங்களுக்கு மேல் பணியிலிருக்கும் பிரதேச செயலர்கள் தொடர்பான அறிக்கையொன்றைத் தயாரிக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளதாகவும் நிர்வாக சேவைகள் மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் டீ.திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

மேலும் ஒரே சேவை மையத்தில் 5 முதல் 10 வருடங்கள் வரை பணியாற்றிவரும் பிரதேச செயலாளர்கள் அதிக எண்ணிக்கையில் இருப்பதும் தெரிய வந்துள்ளது.

அவ்விதம் நீண்ட காலத்துக்கு ஒரே சேவை மையத்தில் பணியாற்றுவதன் காரணமாக சில பிரதேச செயலாளர்கள் ஊழல், மோசடிகளில் ஈடுபட்டுள்ளதாக முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகவும் அத்தகைய சில பிரதேச செயலாளர்கள் சம்பந்தமாக ஒழுக்காற்று விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சின் செயலாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

(எ)

# இரவு நேரப் பேருந்துகளில் இளைஞர்களின் தொல்லை

யாழ்ப்பாணம்,ஓக.30

யாழ்ப்பாணத்தில் இரவு நேரங்களில் தனியார் சிற்றூர்திகளில் மற்றும் பேருந்துகளில் இளைஞர்களின் சேஷ்டைகள் அதிகரித்துள்ளதாகப் பயணிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

யாழ்ப்பாணத்தில் சமீப காலமாகச் சுமுகமான சூழ்நிலை நிலவுவதால் பயணிகளின் நலன் கருதி யாழ்ப்பாணம் நகரத்திலிருந்து தூர இடங்களுக்குச் செல்லும் இறுதி நேர தனியார் சிற்றூர்திகள் மற்றும் பேருந்துகள் புறப்படுவது இரவுவரை நீடிக்கப்பட்டுள்ளது.

இதனால் வேலைக்குச் சென்று திரும்புவோர், மாலைநேர வகுப்புக்களுக்குச் சென்று திரும்பும் மாணவர்கள், வைத்திய சாலைக்குச் சென்று திரும்புவோர் எனப் பலதரப்பட்டோர் இந்த இரவுநேர பஸ் சேவையால் பயனடைவது குறிப்பிடத்தக்கது.

எனினும் இந்த இரவுநேர பஸ்களில் மதுபானம் அருந்தி விட்டுவரும் சில இளைஞர்கள் பஸ்களில் பயணிக்கும் இளம் பெண்களுடன் தகாத முறையில் நடந்துகொள்ள முனைவதாகவும் பயணிகள் விசனம் தெரிவிக்கின்றனர். இவை கூடுதலாகத் தனியார் சிற்றூர்திகளிலேயே நடைபெறுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதனை ஒரு சில நடத்துநர்கள் கண்டித்தாலும், பல நடத்துநர்கள் கண்டும் காணாதது போல் செயற்படுவதாகவும், பொதுமக்களால் மேலும் தெரிவிக்கப்படுகின்றது.

(எ-322)

# தென்மராட்சியில் அதிகரிக்கும் விபத்துக்கள் இருநாள்களில் மட்டும் 9பேர் படுகாயம்

தென்மராட்சி,ஓக.30

தென்மராட்சிப் பிரதேசத்தில் இடம் பெற்ற பல்வேறு வீதி விபத்துக்களில் சிக்கி இருநாள்களில் ஒன்பதுபேர் காயமடைந்தனர்.

மீசாலை புத்தூர்ச் சந்தியில் இடம் பெற்ற மோட்டார் சைக்கிள் - சைக்கிள் விபத்தில் மீசாலை மேற்கைச் சேர்ந்த மாணிக்கதேவன் பிரதீபன் (வயது - 33) என்பவரும், அவரது மகளான பி.சயந்தா (வயது - 6), விடத்தற்பளையைச் சேர்ந்த கே.மகேந்திரன் (வயது - 47) ஆகியோரும்,

வீதியால் சென்ற நாயின் மீது மோட்டார் சைக்கிள் ஏறியதில் மீசாலையைச் சேர்ந்த முத்துக்குமாரி சிவகுரு (வயது - 65) என்வரும்,

வீதியின் குறுக்கே வந்த ஆட்டுக் குட்டியை காப்பாற்ற வீதியின் மறுபுறம் சென்ற மோட்டார் சைக்கிள் எதிரே வந்த சைக்கிளை மோதியதில் அதில் பயணித்த கச்சாயைச் சேர்ந்த கே.சிவகுமார் (வயது- 27) என்பவரும்,

மோட்டார் சைக்கிள் சில்லுக்குள் சேலைத் தலைப்பு சிக்கியதால் தூக்கி வீசப்பட்ட நாவற்குழியைச் சேர்ந்த கருணாதேவி (வயது - 38) என்பவரும்,

சைக்கிளில் கட்டியிருந்த மண்வெட்டி மோட்டார் சைக்கிளில் வந்தவரை வெட்டியதில் மீசாலை புத்தூர்ச் சந்தியைச் சேர்ந்த கே.சதீஸ்குமார் (வயது - 32), என்பவரும்,

டிப்பர் வாகனமும் ஓட்டோவும் நேருக்கு நேர் மோதிக்கொண்டதில் ஓட்டோச் சாரதியான நாவற்குழியைச் சேர்ந்த ஜெயரஞ்சிதன் (வயது - 30 ) என்பவரும்,

ஓட்டோ தடம்புரண்டதில் சரசாலையைச் சேர்ந்த என்.மயூரதன் (வயது - 18) என்பவருமே காயமடைந்தவர்களாவர். காயமடைந்த அனைவரும் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

(எ-207)

# 'பிளாஸ்ரிக்' கொள்கலன்களை வீதியோரத்தில் வைக்குமாறு சுகாதாரப் பகுதி அறிவுறுத்து

தென்மராட்சி,ஓக.30

மழைக் காலம் ஆரம்பித்துள்ளதால் டெங்கு நுளம்பு உற்பத்தியாகக் கூடியதாக கருதப்படும் 'பிளாஸ்ரிக்' கொள்கலன்கள் உட்பட்ட பொருள்களை பொதிகளில் கட்டி வீதியோரங்களில் வைக்குமாறு சுகாதாரப் பகுதியினர் அறிவித்துள்ளனர்.

வீதியோரங்களில் வைக்கப்பட்டுள்ள கழிவுப் பொருள்களை வாகனங்கள் மூலம் அகற்றும் பணிகள் சாவகச்சேரி நகர சபையினரால் ஆரம்பிக்கப்பட்டு பொதிகள் அப்புறப்படுத்தப்பட்டு வருவதால் பொதுமக்களை ஒத்துழைக்குமாறு ஒலிபெருக்கி மூலம் அறிவித்து வருகின்றனர்.

(து-207)



தாய் அல்லது தந்தையை இழந்த குடும்பங்களுக்கு சுயதொழில் உதவி வழங்கும் திட்டத்தின்கீழ் தென்மராட்சி பிரதேசத்தைச் சேர்ந்த ஆறு குடும்பங்களுக்கு சமூக சேவைகள் அமைச்சினால் தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டன. பயனாளியொருவருக்கு பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் தையல் இயந்திரம் கையளிப்பதையும் அருகில் பிரதேச செயலக சமூக சேவை அலுவலர் வரத பாஸ்கரன் நிற்பதையும் படத்தில் காணலாம்.

(படம்:- தென்னவன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 21.06.1948 விண்ணில் 30.08.2009



## டேவிட் அலெக்ஸ்சாண்டர்

(லொயலாஸ் உரிமையாளர்)

### இதயத் துடிப்பினிலே......

விழி நீர் ஓயவில்லை ஓராண்டு சென்றதுவோ!
கண்முன்னே நடப்பதுபோல் நினைவுகள் வாட்டுகின்றன
சிறு துரும்பெடுக்கவேனும் துணையிங்கு எமக்கில்லை
செயல் வீரன் தனையிழந்து செய்வதறியா நிற்கின்றோம்.
ஓய்வில்லா கடும் உழைப்பின்
பயனிழந்து சென்றதேனோ?
பாதையில் நான் நடந்தறியேன்
என்ரதம் சென்றதெங்கோ?
என் துணிவு ஆற்றலெல்லாம்
உம்மோடே சென்றதுவோ?
துணையின்றி உம்பிரிவால்
நடைப்பிணம் போல் நிற்கின்றேன்.
பூப்போன்று என்னை என்
செல்வங்கள் பார்த்தாலும்
என்மனப்பாரம் இறக்கிவைக்க முடியவில்லை
நாடோறும் உம் செல்வங்கள் உமக்கு
மலர்வைத்து உம் ஆசி பெற்றுச் செல்கின்றனர்
உம் செல்லக்குட்டிகளும்
உமக்கு பூவைத்து வணங்குகின்றனர்
உம் பெருமை பார்க்கவன்றோ
எனைவிட்டு சென்றுவிட்டீர்
என்றும் உம் பிள்ளைகளுக்காய்
இறைவனிடம் துணைவேண்டி இறைஞ்சிடுவீர்.

**மனைவி, பிள்ளைகள்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

42/9, இராஜேந்திரா வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/370192)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உயர்வும் தாழ்வும்

உயர்வும் தாழ்வும் உடம்பும் உயிரும் சேரும் போது உருவாகும். உள்ளம் தான் இரண்டையும் ஆட்டிப் படைக்கின்றது. வாழ்வின் வெற்றி தோல்விகளை முடிவு செய்கின்றது. இந்த உள்ளம் எங்கிருக்கிறது என்று கேட்டால் விடை சொல்ல முடியாது. ஆனால் அதுதான் வாழ்க் கையின் சூத்திரதாரி!, உயர்வு, தாழ்வு, விருப்பு, வெறுப்பு இவையெல்லாம் உலகத்தில் தோன்றுவதற்குக் காரணம் மனம்தான். எடை போடுகிறவனின் மனமும் நிறுக்கப்படுபவனின் மனமும் தான் உயர்வு, தாழ்வுக்குக் காரணம்.

மகாபாரத போர்க்களத்தில் கர்ணனின் தேர்ச்சக்கரம் சகதியில் கிடக்கின்றது. அதை எடுக்க கர்ணன் போராடுகிறான். அவனால் முடியவில்லை. இதற்கிடையில் அருச்சுனனில் அம்புகள் அவனை நோக்கியே வந்தும் கூட காயப்படுத்தவில்லை. கண்ணனோ சிரித்தபடி அர்ஜுனா உன் அம்பு வற்றினாலும் அவனது ஆயுள் வற்றாது. எனச் சொல்லிய அடுத்த விநாடி அவனைக் காணவில்லை. கர்ணன் முன்பாக அந்தண வடிவத்தில் கொடை கேட்டு வந்தார் கண்ணன். அதற்கு கர்ணன் என்னிடம் இருப்பதை மட்டும் கேளுங்கள் என்றான். நீ பலமுறை தானம் செய்து ஈட்டிய புண்ணியம் எல்லாம் எனக்கு தர வேண்டும் என்றான். கர்ணன் அதற்கு தானம் செய்வது புண்ணியங்களை பெறுவதற்காகவே அதைக் கொடுப்பது என்றால் எதற்காகத் தானம். எதைக் கேட்பது என்ற வரன்முறை இல்லையா? ''அந்தணரே சரி பிரம்மாவை விட உயர்ந்தவன்'' என்று தொடங்கிய கர்ணன். வந்திருப்பவன் கண்ணன் என்பதை உணர்ந்து கொண்டான். முக்காலத்தையும் மனதில் வைத்துக் கொண்டு நான் செய்த, செய்கிற, செய்யப் போகிற புண்ணியங்களை உமக்கே தந்தேன்'' என்றான்.

புண்ணியங்களைத் தாரை வார்த்துக் கொடுக்க தண்ணீர் வேண்டுமே! தானம் கொடுப்பதானால் மனைவி ஓர் உத்தரணி தண்ணீர் தெளிப்பது மரபல்லவா? ஒவ்வொரு மனிதனின் இடது பகுதி மனைவிக்கு உரியது. எனவே இடது பகுதியில் இதயத்தில் பதிந்திருந்த அம்பை அசைத்தான் கர்ணன் குருதி வழிந்தது... இரத்தத்தை கையில் வாங்கி கண்ணபெருமான் கைகளில் தாரைவார்த்தபடி புண்ணியங்களை தானம் கொடுத்தான்.



இதை பார்த்த கண்ணன் கர்னா உனக்கு என்ன வேண்டும் என கேட்டான். கொடுத்து பழகிய கர்ணன், இரத்தம் கையில் பட்டதும் வாங்க வந்தனுக்கும் கொடுக்க வேண்டும் என்ற எண்ணம் பிறந்தது. அது எதிரே இருப்பவர்களையும் ஊடுருவும் அவர்களையும் தூண்டும். கர்ணன் கேட்டான் இறைவா இனிமேல் பிறவி வேண்டாம். இன்னொரு பிறப்பு உண்டு என்பது விதி என்றால் அப்போதும் இல்லை என்று சொல்லாது கொடுக்கிற மனம் எனக்கு வேண்டும். கொடுப்பதற்கு தேவையான பணம் கேட்கவில்லை. மனம்தான் கேட்டான்! மனசுதான் எல்லாம்!

சொன்னவர்:- சுகி.சிவம்.

# 64 கலைகள்

பா.வாணி

1. அச்சரவிலக்கணம் - எழுத்திலக்கணம் பற்றி அறிந்து கொள்வது
2. இலிகிதம் - கடிதம் எழுதும் வகைகளை அறிவது
3. கணிதம் - கணக்கு வகைகளைப் பற்றிய நூல் அறிவு
4. வேதம் - இருக்கு, யசூர், சாமம், அதர்வணம் ஆகிய வேதங்களைப் பற்றி அறிவது
5. புராணம் - பதினென் புராணங்களையும் கற்றுத் தெரிதல்
6. வியாகரணம் - இலக்கண நூலறிவு
7. நீதி சாத்திரம் - சுக்கிரநீதி, மனுநீதி போன்ற சாத்திரங்களின் அறிவு
8. சோதிட சாத்திரம் - வானசாத்திரம், கோள்களின் சஞ்சாரம் முதலியன கற்றுப் பலன் சொல்லும் அறிவு
9. தருமசாத்திரம் - அறநூல்களைப் பற்றிய ஞானம்.
10. யோகசாத்திரம் - ரேசகம், பூரகம், கும்பகம் முதலியன அறிந்து குண்டலினி சக்தியின் ஆற்றலை உணர்ந்து, யோகம் செய்து பேரின்பம் துய்க்கும் யோகநூல்களைப் பற்றிய கலைஞானம்.
11. மந்திர சாத்திரம் - மந்திரங்களையும் உச்சாடனங்களையும் குருவின் மூலம் அறிந்து கொள்வது.
12. சகுணசாத்திரம் - நல்ல காரியம் செய்யப் புறப்படும் பொழுது தெருவில் எதிர்ப்படும் பறவை, விலங்கு, மானுடர் முதலிய பொருள்களை காண்பதால் ஏற்படும் நல்ல நிமித்தம், தீய நிமித்தம் ஆகியவை பற்றிய சாத்திர நூலறிவு.
13. சிற்ப சாத்திரம் - கருங்கற்களாலும், பஞ்சலோகங்களாலும், பிறவற்றாலும் செய்யப்படும் சிலைகளின் அளவைகள், உருவ அமைப்பு முறைகள், கருங்கற்களின் தன்மை லோகக் கலவையின் விகிதம் முதலியவற்றை அறிவதோடு ஓவியத்திலும் திறமை பெறும் கலைகளின் நுட்பம் (சிற்பக் கலையும், ஓவியக் கலையும் ஒன்றுக்கொன்று தொடர்புடையவை)
14. வைத்திய சாத்திரம் - மக்களுக்கும் விலங்குகளுக்கும் பறவைகளுக்கும் ஏற்படும் நோய்கள் பற்றியும் அவற்றைப் போக்கும் மருந்து வகைகள் பற்றியும் அறிந்து கொள்ளும் சாத்திர அறிவு.
15. உருவ சாத்திரம் - மக்களின் உருவ அமைப்பு, உச்சி முதல் உள்ளங்கால் வரையிலுள்ள உறுப்புகளின் அமைப்பு ஆகியவற்றை அறிந்து கொண்டு மக்களின் குணம், செயல்களை ஆராய்ந்து கூறும் சாமுத்திரிகா லட்சணம் போன்ற நூலறிவு.
16. இதிகாசம் - சிவரகசியம், பாரதம், இராமாயணம் ஆகிய நூலறிவு.

(வளரும்)

# புகழ் மயக்கம்

புகழுக்கு மயங்காதவர்கள் யார் இந்த உலகத்தில் இருக்கிறார் என்று ஒருவர் இன்னொருவரை பார்த்துச் சொன்னார்.

''ஐயா! இந்த உலகத்திலே புகழுக்கு மயக்காதவர் நீங்கள் ஒருவர்தான்'' என்றார். இதனை கேட்டதும் அவர்.

''அப்படியா? நன்றி'' என்று சொல்லி அசடு வழிந்தார். அப்படி என்றால் என்ன அர்த்தம்? அதற்கே அவர் மயங்கிவிட்டார் என்று அர்த்தம்.

இரண்டு பேர் பேசிக் கொண்டிருந்தார்கள். அந்த இருவரில் ஒருவரிடம் பணம் அதிகமாக இருந்தது! இன்னொருவரிடம் அறிவு அதிகமாக இருந்தது! இவை இரண்டும் ஒரே இடத்தில் இருப்பதுதான் அபூர்வம்!

பணம் அதிகமாக வைத்திருப்பவருக்கு ஓர் ஆசை! யாராவது தன்னைப் புகழமாட்டார்களா? என்று! பக்கத்தில் இருக்கின்ற அறிவாளி மிகவும் ஏழை! பார்த்தார் அவர்! சரி... இவரிடம் பணம் கொடுத்தாவது தம்மைப் புகழ வைப்போம் என்று நினைத்தார். அந்த ஏழையைப் பார்த்து கூறினார்.

''இதோ பாருங்கள்... என்னிடம் ஆயிரம் பொற்காசுகள் இருக்கிறது. அதில் நூறு பொற்காசுகளை உன்னிடம் தருகிறேன். நீ என்னைப் புகழ்ந்து பேச வேண்டும்! என்று கேட்டார்.

''இது நேர்மையான பங்கீடு இல்லை! நீங்கள் பங்கு பிரித்ததில் நேர்மை இல்லாததனால் நான் உங்களைப் புகழ்ந்து பேச மாட்டேன்!'' என்றார் அவர்.

''அப்படியா? சரி ஆளுக்கு அரைவாசியாக எடுத்துக் கொள்வோம். என்னிடம் இருக்கின்ற ஆயிரத்தில் உனக்கு ஐநூறு எனக்கு ஐநூறு இவ்வாறு பிரித்துக் கொள்வோம். இப்பொழுதாவது என்னை சிறிது புகழ்ந்து சொல்லுவீரா? என்று கேட்டார். இவர் பார்த்தார். என்னிடம் ஐநூறு உன்னிடம் ஐநூறு இருந்தால் நாம் இருவரும் சமம் என்று தான் அர்த்தம்? அப்படியிருக்கும் போது எனக்கு சமமான பணம் வைத்திருக்கும் உங்களை நான் எப்படிப் புகழ்ந்து பேச முடியும்?'' என்றார்.

''சரி நான் வைத்திருக்கின்ற அவ்வளவையும் உன்னிடம் தருகின்றேன். அப்பொழுதாவது என்னை புகழ்ந்து சொல்லுவீர்களா? என்று கேட்டார் அவர். நீங்கள் உங்களிடம் இருக்கின்ற எல்லாவற்றையும் கொடுத்தால் நான் செல்வந்தன் ஆகிவிடுவேன்! நீங்கள் ஏழை ஆகிவிடுவீர்கள்! செல்வந்தனான நான் ஒன்றுமே இல்லாத ஏழையாகிய உங்களை எப்படிப் புகழ்ந்து பேசுவேன்?'' என்று கேட்டார் இவர்.

அதுவும் நியாயம் தானே! ஒன்றுமே இல்லாதவனைப் புகழ்ந்து என்ன செய்வது? இப்படித்தான் அந்த பெரிய மனிதர் யோசித்தார். நாம் என்ன செய்தாலும் இந்த ஏழையின் வாயிலிருந்து புகழ் மொழிகளை வாங்க முடியாது'' என்று புரிந்து கொண்டார். புகழ் மொழிகளை விலைக்கு வாங்கிவிட முடியாது! அப்படி வாங்கவேண்டும் என்று நினைத்தாலும் அதனால் எந்தப் பிரயோஜனமும் இல்லை! புகழ் தானாக வந்து சேர வேண்டும். அதற்கு தகுந்த மாதிரி நல்ல காரியங்களை செய்யவேண்டும்! அதுதான் முறை. அதை விட்டுவிட்டு காசு கொடுத்து புகழ வைப்பதோ ... கடதாசியில் அச்சடித்து சுவரில் ஒட்டுவதோ... எத்தனை நாள்களுக்கு நிலைத்திருக்கும்.

தென்கச்சி கோ.சுவாமிநாதன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## லயன்ஸ் ஆளுநர் யாழ்.வருகிறார்

சர்வதேச லயன்ஸ் கழக 306 பி 1 மாவட்ட ஆளுநர் லயன் எஸ்.ஜெய வத்சலன் (எம்.ஜே.எவ்) அடுத்த மாதம் யாழ்.மாவட்ட லயன்ஸ் கழகங்களுக்கு உத்தியோகபூர்வ விஜயத்தினை மேற்கொள்ளவுள்ளார்.

செப்ரெம்பர் ஏழாம் திகதி தொடக்கம் 12 ஆம் திகதிவரை யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்து லயன்ஸ் கழகங்களால் மேற்கொள்ளப்படவுள்ள நலத்திட்டங்களை ஆரம்பித்து வைக்கவுள்ளார். (த-207)

## முகாம் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள்

யாழ்ப்பாணம், ஓக.30

வடமராட்சி கிழக்கு மணற்காடு திறந்தவெளி முகாமில் தங்கியுள்ள மாணவர்களுக்கு 50ஆயிரம் ரூபா பெறுமதியான கற்றல் உபகரணங்களைத் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஸ்ரீதரன் வழங்கியுள்ளார்.

இந்த நிதியை கனடாவில் உள்ள நலன் விரும்பி ஒருவர் வழங்கி இருந்தார். (எ-236)



உ

# கொழும்பு-தம்பையா சத்திரம்-கொச்சிக்கடை
# ஸ்ரீசித்தி விநாயகர் தேவஸ்தானம்
# ஆவணிச் சதுர்த்திப் பெருவிழா

ஆரம்பம்:- ஆவணி 17ஆம் நாள் (02.09.2010) வியாழக்கிழமை

பூர்த்தி:- ஆவணி 26ஆம் நாள் (11.09.2010) சனிக்கிழமை தினமும் மாலை 5மணிமுதல் அஷ்டோத்தர சத கலசாபிஷேகம், சாயங்கால பூஜை, வசந்தமண்டப அலங்கார தீபாராதனை, பஞ்சமுகார்ச்சனை, சுவாமி வீதியுலா

ஆவணி:- 25ஆம்நாள் (10.09.2010) வெள்ளி - **ரதபவனிப் பெருவிழா** (தேர்)

ஆவணி:- 26ஆம்நாள் (11.09.2010) சனிக்கிழமை - **தீர்த்தத்திருவிழா திருவூஞ்சல்** இடம்பெறும்.

அருளாசியுரை:-'சிவாகம கலாநிதி' சிவப்பிரம்மஸ்ரீ.சிவ.நித்தியானந்த சிவாச்சாரியார்
(சர்வதேச இந்துமத குருபீட-யாழ்.மாவட்டத் தலைவர்-சங்கானை)

"சர்வதேச இந்துமத குருபீடாதிபதி-"சபரிமலைக் குருஜி" "ஆன்மீக அருள்ஜோதி" ஸ்ரீ ஐயப்பதாஸ சர்மசிவ சிவாச்சாரியார் அவர்களின் தலைமையில் உற்சவம் நடைபெறும்.

*30,ST.ANTHONY'S MW COLOMBO--13.*

ஸ்ரீசாஸ்தாபீட பக்தர்களும் உபயகாரர்களும்.

## மரண அறிவித்தல்



# Dr.யமுனா மார்க்கண்டு

MBBS, MD, MRCP(UK)
(MILTON KEYNES HOSPITAL - UK)

காரைநகர், பாலாவோடையைச் சேர்ந்த Dr. யமுனா மார்க்கண்டு 18.08.2010 புதன்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தில்லையம்பலம், சிவகாமிப்பிள்ளை தம்பதியினரினதும் காரைநகர் தங்கோடையைச் சேர்ந்த பொன்னுடையார் வேலுப்பிள்ளை நாகலிங்கம்-பார்வதிப்பிள்ளை தம்பதியினரினதும் அன்புப் பேர்த்தியும், மார்க்கண்டு (இளைப்பாறிய உத்தியோகத்தர், நீர்ப்பாசனத் திணைக்களம், கச்சேரி - முல்லைத்தீவு) , திருமதி சிவபாக்கியம் மார்க்கண்டு தம்பதியினரின் செல்வப் புதல்வியும் மனோகரி (FORMERLY, HNB), மாலினி (KMS - LONDON), கேதீஸ்வரி (LONDON), யாழினி (CANADA) ஆகியோரின் அன்புச் சகோதரியும், இராமச்சந்திரன் ( EXPRESS CARGO SERVICES - COLOMBO), சுகந்தன் (KNOWLEDGE MANAGEMENT SYSTEMS, COLOMBO, LONDON), சயந்தன் (LONDON), திலகேசன் (CANADA) ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் வசீகரன் (S.t.THOMAS COLLEGE, Mt. LAVINIA), ஆரணி (LONDON), ஹரினி (LONDON), கிருஷான் (CANADA) ஆகியோரின் நேசமிகு பெரியம்மாவும், தி.பொன்னுத்துரை (இளைப்பாறிய புள்ளி விவர அதிகாரி, புள்ளிவிவரத் திணைக்களம்), திருமதி இராஜலட்சுமி பொன்னுத்துரை ஆகியோரின் பெறாமகளும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (30.08.2010) திங்கட்கிழமை இறுதி அஞ்சலிக்காக பொரளை ஜெயரட்ண மலர்ச்சாலையில் வைக்கப்பட்டு நாளை (31.08.2010) செவ்வாய்க்கிழமை மு.ப. 10 மணியளவில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் பொரளை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தகவல்:*

திரு.திருமதி மார்க்கண்டு
NO.164/4, 1St. CHAPEL LANE,
WELLAWATTA, COLOMBO - T.P.06.2505[illegible]

## மானிய உரத்துக்குப் பதிய சம்மேளனம் மறுப்பு

தென்மராட்சி,ஓக.30

மட்டுவில் சந்திரபுரம் விவசாய சம்மேளன பிரிவுக்குட்பட்ட நெல்வயல்களில் இவ்வருடம் குத்தகைக் காணிகளில் காலபோக நெற்செய்கை மேற்கொள்வதற்கு மானிய உரம் விநியோகிப்பதற்கான பதிவுகளை மேற்கொள்ளச் சம்மேளனம் மறுத்து வருவதாக நெற்செய்கையாளர்கள் கவலை தெரிவித்தனர்.

2005ஆம் ஆண்டு தொடக்கம் நெல்வயல் உரிமையாளர்களின் சம்மதக் கடிதங்கள் கிராம அலுவலரால் சிபார்சு செய்யப் பட்டவர்களுக்குக் குத்தகை காலபோக நெற்செய்கை மேற்கொள்வதற்கும் உரமானியத்துக்குப் பதிவு செய்யப்பட்டிருந்தது. இவ்வருடம் உர மானியத்திற்கு குத்தகையாளர்களின் விவரங்கள் பதிவுசெய்ய சம்மேளனம் மறுப்பதால் நூற்றுக்கணக்கான நெல் வயல்களில் காலபோக நெற்செய்கை மேற்கொள்ளப் படாது விடலாமெனவும் தெரிவித்தனர். (த-207)

## சட்டவிரோத மின் பாவனையாளர் அதிரடி வேட்டையில் சிக்கினர்

தென்மராட்சி கிழக்கு,ஓக.30

வரணிப் பிரதேசத்தில் கடந்த 25ஆம் திகதி அதிகாலை சாவகச்சேரி பிரதேச மின்சார சபையினரும், பொலிஸாரும் கூட்டிணைந்து நடத்திய அதிரடி நடவடிக்கையின்போது சட்டவிரோதமாக மின்சாரம் பெற்ற பலர் கையும் மெய்யுமாகப் பிடிபட்டதுடன் சட்டவிரோதமாக மின்சாரம் பெற்ற உபகரணங்களும் கைப்பற்றப்பட்டன.

வரணி வடக்கு கருக்காய் மற்றும் மாசேரி கிராமத்திலும் இவ்விரு சட்டவிரோதமாக மின்சாரம்பெற்றவர்கள் கைதுசெய்யப்பட்டு அழைத்துச் செல்லப்பட்டதாக பிரதேச வாசிகள் தெரிவித்தனர்.

அண்மைக் காலத்தில் பிரதேச மின்சார சபையினரால் இவ்வாறான திடீர் பரிசோதனைகள் மூலம் பலர் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (த-122)




வீட்டுக்கும் ஹோட்டலுக்கும்
டயிடஸ் ஸ்ரோஸ்
2435383

நிஜமான மாற்றம்




அழகான உடலைப் பெற...

சொக்லட் மற்றும் வனிலா சுவை கொண்ட வெயிட் கெய்னர், அதில் அடங்கியுள்ள தீவிர செயற்பாட்டுச் சேர்வை மூலம் அவசியமான போஷாக்கை வழங்கி, உங்களது நேர்த்தியான உடல் வளர்ச்சிக்கு உதவும் மெலிந்த தோற்றமுடைய நீங்கள் முற்றிலும் வித்தியாசமான, கவர்ச்சியான உடலழகை பெறுவீர்கள்.

EDGE வெயிட் கெய்னர்

Hotline 0777 536 796
Manufactured under licence from Edge USA

அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றி இலக்கங்கள் — 1220 சிவப்பு

கடகம் 09 17 18 30 — 27-08-2010

ஜக்பொட் பரிசு ரூபா. 2,644,100/- வெல்லப்பட்டுள்ளது

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 225,262 | 20/- | 4,505,240/- |
| 2 இலக்கங்கள் | 20,677 | 40/- | 827,080/- |
| 1 இல. + லக்கினம் | 20,490 | 60/- | 1,229,400/- |
| 2 இல. + லக்கினம் | 1,898 | 200/- | 379,600/- |
| 3 இலக்கங்கள் | 558 | 1000/- | 558,000/- |
| 3 இல. + லக்கினம் | 44 | 10,000/- | 440,000/- |
| 4 இலக்கங்கள் | 2 | 200,000/- | 400,000/- |
| 4 இல. + லக்கினம் | 1 | 2,644,100/- | 2,644,100/- |
| பிரதான சீட்டிழுப்பில் பரிசுகளின் மொத்தம் | | | 10,983,420/- |
| இரண்டாம் வாய்ப்புக்கான பரிசுகள் | 608 | | 602,500/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 269,540 | | 11,585,920/- |

இந்த செவ்வாய்க்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 2,000,000/-

இரண்டாவது வாய்ப்பு

வெற்றி இலக்கங்கள்

மீனம் 08 26 40 42

ஜக்பொட் பரிசு ரூபா. 1,400,000/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 3 இலக்கங்கள் | 605 | 500/- | 302,500/- |
| 4 இலக்கங்கள் | 3 | 100,000/- | 300,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 1,400,000/- | - |
| இரண்டாவது வாய்ப்புக்கான மொத்தத் தொகை | 608 | | 602,500/- |

அடுத்த செவ்வாய்க்கிழமைக்கான இரண்டாவது வாய்ப்பின் ஜக்பொட் ரூபா.1,500,000/-


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வீதி விளக்குகள் ஒளிராமையால் முடமாவடியில் பயணிகள் சிரமம்

யாழ்ப்பாணம்,ஒக.30

யாழ்.கோயில் வீதியில் முடமாவடி சந்தியை அண்மித்த பகுதிகளில் உள்ள அனேகமான வீதி விளக்குகள் இரவில் ஒளிர்வதில்லை என்று மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

நல்லூர் கந்தசுவாமி கோயிலை அண்டிய பகுதியில் காணப்படும் இந்த வீதியிலுள்ள மின் விளக்குகள் ஒளிராமையால் இப்பகுதி இரவில் இருண்டு போய்க் காணப்படுகின்றது.

தற்போது நல்லூரில் பெருந்திருவிழா ஆரம்பமாகி இருப்பதால் மேற்படி வீதியில் இரவு வேளையில் பயணிக்கும் மக்களின் எண்ணிக்கையும் அதிகரித்துக் காணப்படுகின்றது.

வீதி விளக்குகள் இரவில் ஒளிராமையால் வீதியால் பயணிக்கும் மக்கள் பெரிதும் சிரமப்பட்டு வருகின்றனர் எனக் கூறப்படுகின்றது. (எ-26)

## நடைபாதை வியாபாரிகளின் பிரசன்னம் அதிகரிப்பு

யாழ்ப்பாணம்,ஒக.30

நயினாதீவில் தென்னிலங்கை நடைபாதை வியாபாரிகளின் பிரசன்னம் தற்போது அதிகரித்துக் காணப்படுகின்றது.

நயினை நாகபூசணி அம்மன் ஆலயச் சுற்றாடலில் இந்த வியாபாரிகள் பல்வேறு பொருள்களையும் எடுத்து வந்து வியாபார நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

தயிர், புளுக்கொடியல்,பனாட்டு, பனங்கட்டி, றம்புட்டான் பழம் மற்றும் பல பொருள்களையும் இந்த நடைபாதை வியாபாரிகள் விற்பனை செய்து வருகின்றனர்.

(எ-26)

# நல்லூர்க் கந்தனுக்கு நாளை கார்த்திகைத் திருவிழா

வலி.வடக்கு,ஒக.30

வரலாற்றுப் புகழ்மிக்க நல்லூர்க் கந்தன் ஆலய உற்சவத்தில் கார்த்திகைத் திருவிழா நாளை செவ்வாய்க் கிழமை பிற்பகல் நடைபெறவுள்ளது.

நாளை பிற்பகல் கந்தனுக்கு விசேட அபிஷேக ஆராதனைகளைத் தொடர்ந்து மாலை 5 மணிக்கு வசந்த மண்டபப் பூசை இடம்பெறும். மாலை 5.45 மணிக்கு சுவாமி வெளிவீதியுலா வருவார்.

இதேவேளை கார்த்திகைத் திருவிழாவையொட்டி பல்வேறு வாத்தியக் கலைஞர்களின் இசைக் கச்சேரி உள் வீதியில் பிற்பகல் நடைபெறவுள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

(எ-86)




யாழ்ப்பாணம்,ஒக.30

கொழும்புத்துறை உப்புக்குளம் நரசிம்ம வைரவர் ஆலய மகாகும்பாபிஷேகம் இன்று திங்கட்கிழமை மு.ப 11.05 மணி தொடக்கம் நண்பகல் 12.28 மணிவரை உள்ள சுபநேரத்தில் இடம்பெறவுள்ளது.

(201)

* * *

அச்சுவேலி,ஒக.30

பூநகரி முழங்காவில் கிருஷ்ணாநகர் வெங்கடேஸ்வரப் பெருமாள் ஆலய மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் முதலாம் திகதி புதன்கிழமை காலை 11 மணிக்கு நடைபெறவுள்ளது.

கிருஷ்ண ஜெயந்தியை முன்னிட்டு அன்றையதினம் உறியடி உற்சவமும் நடைபெறவுள்ளது.

முழங்காவிலில் இருந்து பொதுமக்கள் இடம்பெயர்ந்த வேளையில் வெங்கடேஸ்வரப் பெருமானின் மூல விக்கிரகம் எடுத்துச் செல்லப்பட்டு வவுனியா இராமநாதன் நலன்புரி நிலையத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டு வழிபடப்பட்டு வந்தது.

மீண்டும் ஆலயத்தில் குறித்த விக்கிரகம் பிரதிஷ்டை செய்யப்பட்டு மகா கும்பாபிஷேகம் நடைபெறுகின்றமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

# நல்லூர் ஆலயச் சூழலில் இன்று

யாழ்ப்பாணம்,ஒக.30

நல்லைக்கந்தன் ஆலயப் பெருந்திருவிழாவையொட்டி இளங்கலைஞர்மன்றமும் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானமும் இணைந்து துர்க்கா மணிமண்டபத்தில் நடத்தும் இசையரங்கில் இன்று மாலை 6.30 மணிக்கு வயலின் கச்சேரி இடம்பெறும்.

எஸ்.கோபிதாஸ், கே.குகபரன் ஆகியோர் வயலின் வாசிப்பர். வி.ரமணா மிருதங்கமும், என்.சிவசுந்தர் கடமும் பக்கவாத்தியங்களாக வாசிப்பர். (201)

* * *

நல்லைக்கந்தன் ஆலயப் பெருந்திருவிழாக்காலத்தில் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் நடத்தும் சமயச் சொற்பொழிவுகள் மற்றும் கலை நிகழ்வுகள் வரிசையில் இன்று பி.ப 3 மணிக்கு 'நீறு இல்லா நெற்றி பாழ்' என்னும் தலைப்பில் சைவப் புலவர் கா.கமலநாதனின் சிறப்புச் சொற்பொழிவு இடம்பெறும். விசேட நிகழ்வாக திருமதி புஸ்பமலர் யோகநாதனின் நெறிப்படுத்தலின் கீழ் அமைந்த பண்ணிசைக் கச்சேரி இடம்பெறும்.

மானிப்பாய் மருதடி விநாயகர் அறநெறிப் பாடசாலை, யாழ். சைவ பரிபாலன சபை அற நெறிப் பாடசாலை ஆகியவற்றின் மாணவர்களின் கலை நிகழ்வுகள்இடம்பெறும்.


(201)

* * *

நல்லைக்கந்தன் ஆலய உற்சவத்தையொட்டி நல்லூர் சைவ மகாசபை நல்லை திருஞானசம்பந்த ஆதீன குருமூர்த்தி ஆலய மண்டபத்தில் நடத்தும் தெய்வீகத் தொடர் இசைப் பேருரையில் இன்று மாலை 6.30 மணிக்கு முத்தமிழ் வித்தகர் பிரம்மஸ்ரீ வை.நித்தியானந்தசர்மா 'அரக்குமாளிகை' என்னும் தலைப்பில் உரையாற்றுவார்.

(201)



# நல்லூர் பெருந்திருவிழாக் கால சிறப்பம்சம்

## நல்லபதி நல்லைப் பதி

வந்தவினை வல்லவினை
அத்தனையும் தீர்க்கு மெங்கள் - முருகன்
பால குமரன்,
தந்தைக் குபதேசித்தவன்
தரணியையே ஆளுமிவன் - அழகன்
என்றும் இனியன்
சொந்தமென கொண்டவரின்
நெஞ்சுறைந்து நிற்குமெங்கள் - வேலன்
ஞான சீலன்
ஐந்து கரம் கொண்டவனின்
தம்பியென்று வந்தணைந்த - தீரன்
சுவாமி நாதன்
கந்தனென்றோ வேலென்றோ
என்ன சொல்லிப் போற்றினாலும் - வருவான்
அருள் தருவான் - அவன்
வந்துறைந்த நல்லபதி
நல்லையெங்கள் பதியென்று - நாடு
நலம் வேண்டு.

சின்மயி
கோப்பாய்.

## நல்லையில் அருளும் பெருமானே

கோபுர மாடங்கள் அணி செய்யும் - எழில்
நல்லையில் தேவரும் பணி செய்ய
வள்ளிதெய்வானையுடன் கூடி
நல்லையின் வீதியில் விளையாடி
கைதொழும் அன்பருக்கருள்வோனே
பாவலர் பரவிடும் பெரியோனே
பாடினேன் என் குரல் கேளாதா
இன்னருள் வந்துமே சேராதா
கண்ணுதல் நல்கிய குமரேசா
அருள் நல்லையில் அருளும் பெருமானே.

ந.மணிவண்ணன்
கொழும்புத்துறை

## சுவாமிநாதன் அருள்வேண்டிடுவோம்

மாமயில் வாகனம் ஏறுகின்ற சுவாமி, எம்
மனங்களைக் கவர்ந்திழுக்கும் கந்த சுவாமி!
நல்லைதனில் அருள் அருளும் எங்கள் தெய்வம்
நாடிச் செல்வோருக்கு வரங்கள் கொடுக்கும் கந்தன்
பல்லினத்தோரும் பொற்பாதங்கள் தொழுதிட,
பவனி வருகின்றார்; அங்கே பாரும்,
சால்லெடுத்தே பாமாலை தொடுத்திடுவோம் எம்
சுவாமி நாதன் அருள் வேண்டிடுவோம்.

செல்வி க.கமலாம்பிகை
மீசாலை.

## நிகழ்கால அற்புதமே!

எத்தனை இடப்பெயர்வு எத்தனை உயிரழிவு
எத்தனை பொருளழிவு அத்தனையும் நடந்ததிங்கே
ஆனாலும் நல்லையிலோ அணுவளவும் பிசகாது
நிகழ்கின்ற விழாக்களிங்கே நிகழ்கால அற்புதமே

நேரத்தைக் குறித்திடுவாய் நேர்த்தியுடன் வந்திடுவார்
பாரத்தைப் போக்கிடுவாய் பணிந்து தொழுதேத்த
ஆரென்ன சொன்னாலும் அனைத்தும் விலை ஏறினாலும்
அர்ச்சனைக்கோ ஒரு ரூபாய் அதுவும் உன் அற்புதமே.

கவிமணி அன்னதாஸன்
ஊரெழு.

## மனம் களித்து அருள்சேரும்...

கத்தும் கடல் இதுவோ என
பக்தர் குழாம் நெருங்கும்
நித்தம் பணிகின்றவர் பாடல்
விண்ணின் மிசையோங்கும்
சித்தம் மயங்கும் வகை
சிலர் காவடிகள் ஆடி
சத்தம் தரும் மேளம் குழல்
வகையாய் இசை பாட
முத்தும் பொன் மணியும் பொலி
தவிசின் மிசை யேறி
கந்தன் வரும் காட்சி காண மனம்
களித்து அருள்சேரும்...

சோதிதாஸன் வெண்ணிலவன்
யாழ்.இந்துக் கல்லூரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விற்பனைக்கு

பந்தல், கேட்டின் செற், பலூன் செற், பித்தளை வாஸ், சில்வர் வாஸ், டம்ளர், பிளேட், மாபிள் பிளேட், பிளாஸ்ரிக் பிளேட், கிடாரம், டபரா பேசின், பெரல், பூக்கள், ஆக், மணவறை, மேசைகள், கதிரைகள், பூ மண வறை வகைகள், கிளாஸ், நிலக்கம்பளம் என்பன விற்பனைக்குண்டு.

தொடர்பு :-

**சந்திரன் பான்சி ஹவுஸ்,**
நவாலி வீதி, ஆனைக்கோட்டை.
**T.P. : 0212228606**

(102634)


## மலசலகூடம் அமைக்க ரூபா 1 லட்சம் நிதியுதவி

நவாலி,ஓக.30

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவிலுள்ள விசேட தேவைக்குரியவர்களின் மலசலகூடம் அமைப்பதற்கு தெரிவு செய்யப்பட்ட நால்வருக்கு சமூக சேவைத் திணைக்களம் ஒரு லட்சம் ரூபாவினை வழங்க முன்வந்துள்ளது.

இதன் முதற்கட்டமான இருபத்தையாயிரம் ரூபாவினை பெறுவதற்கு பின்வரும் பெயர் முகவரியுடையவர்களை உடன் வருமாறு சமூக சேவை உத்தியோகத்தர் வி.அருந்தவராசா கேட்டுள்ளார்.

க.குலசேகரம் (கல்வளை வீதி, சண்டிலிப்பாய்), சி.செல்லத்துரை (சண்டிலிப்பாய்), சி.காந்தரூபன் (சண்டிலிப்பாய் மேற்கு), க.மாரிமுத்து (சண்டிலிப்பாய் மத்தி), ச.தேவநந்தினி (ஆனைக்கோட்டை)

(த-100)

## உத்தியோக பூர்வ முடிவுகள் — சுப்பிரி வாசனா சம்பத்து

சீட்டிழுப்பு இலக்கம் 564
திகதி 2010/08/28

சுப்பர் இலக்கம்: **21**
வெல்லப்பட்ட இலக்கங்கள்: **21 26 56 57**

| | கூட்டு | பரிசுத்தொகை | வெற்றிபெற்றவர் தொகை |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் நான்கு இலக்கங்கள் சரியாயின் | ரூ. 29,809,345.60 விகிதம் | — |
| முதலாம் பரிசு | நான்கு இலக்கங்கள் சரியாய் இருப்பின் | ரூ. 1,000,000.00 விகிதம் | 01 |
| இரண்டாம் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் ஏனைய 3 இலக்கங்கள் சரியாய் இருப்பின் | ரூ. 50,000.00 விகிதம் | 10 |
| மூன்றாம் பரிசு | 3 இலக்கங்கள் சரியாய் இருப்பின் | ரூ. 2,000.00 விகிதம் | 216 |
| நான்காம் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் ஏனைய 2 இலக்கங்கள் சரியாய் இருப்பின் | ரூ. 1,000.00 விகிதம் | 443 |
| ஐந்தாம் பரிசு | 2 இலக்கங்கள் சரியாய் இருப்பின் | ரூ. 100.00 விகிதம் | 11,523 |
| ஆறாம் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் ஏனைய 1 இலக்கம் சரியாய் இருப்பின் | ரூ. 40.00 விகிதம் | 6,630 |
| ஏழாம் பரிசு | 1 இலக்கம் சரியாய் இருப்பின் | ரூ. 20.00 விகிதம் | 165,914 |
| எட்டாவது பரிசு | சுப்பர் இலக்கம் சரியாய் இருப்பின் | ரூ. 20.00 விகிதம் | 26,559 |

இவ்வாரம் வெல்லப்பட்டுள்ள பரிசு தொகை ரூ. 7,641,960.00
சுப்பர் பரிசு சொகுசு ஜீப் வண்டியுடன் மிகுதி தொகை பணமாக

வெற்றி பெற்ற டிக்கட்டுகள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்கள் மட்டுமே செல்லுபடியாகும்.
ஐந்து இலட்சம் அல்லது அதற்கு கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரிச்சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது பரிசைப் பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது

அடுத்த சனிக்கிழமை சுப்பர் பரிசு: **ரூ. 30,038,989.60**

தேசிய லொத்தர் சபை
[illegible]
www.nlb.lk

# PATRICIAN INSTITUTES
## பற்றீசியன் தொழிற்பயிற்சி நிறுவனங்கள்
### ஆரம்பம்: 01.09.2010

மாணவர்களுக்கு மகிழ்ச்சியான ஓர் நற்செய்தி!

எமது நிறுவனம் மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவில் பதியப்பட்டு பயிற்சிகளுக்கு அரச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன என்பதை அறியத்தருகிறோம்

TVEC REG.NO - P25/0021

**1.COMPUTER COURSES**

| Course | Duration |
|---|---|
| A. Advanced in Computer Programming | Duration 8 Months |
| B. Diploma in Microsoft Office | Duration 4 Months |
| C. Diploma in Desk Top Publishing | Duration 4 Months |
| D. Diploma in Video Editing | Duration 4 Months |
| E. Diploma in Type Setting | Duration 3 Months |
| F. Diploma in Computerized Accounting | Duration 4 Months |
| G. Diploma in Software Engineering | Duration 6 Months |
| H. Diploma in Micro media | Duration 4 Months |
| I. Diploma in Web Multimedia | Duration 4 Months |
| J. Professional Diploma in Graphic Design | Duration 6 Months |
| K. Computer Hardware Technology | Duration 4 Months |
| L. Internet & E-mail | Duration 1 Month |
| M. General Information Technology (GIT) | Duration 4 Months |
| N. Information & Communication Technology (ICT) | Duration 4 Months |
| O. Children's Kids | Duration 4 Months |

**2.CERTIFICATE COURSES**

I. MS Word
II. MS Excel
III. MS Access
IV. MS Power Point
V. Visual Basic
VI. Java Script
VII. MYOB
VIII. Adobe Photoshop
IX. Page Maker
X. Flash
XI. Quick Book
XII. Simply Accounting
XIII. Corel Draw

Duration : 3 Months Each

G - Tec Computer Education நிறுவனத்தின் ஆதரவில் MS Office, E-Mail, Internet கற்கை நெறிகள் மிகவும் குறைந்த கட்டணத்தில் பயிற்சி அளிக்கப்படுகின்றன. முழுக் கட்டணம் 1600/= (குறிப்பு: இலவச தமிழ் கணனிப் பாடப்புத்தகம் வழங்கப்படும்)

| Course | Duration |
|---|---|
| III. Short Hand Typing (English) சுருக்கெழுத்தும் தட்டெழுத்தும் (ஆங்கிலம்) கணனி மூலம் தட்டெழுத்து பயிற்சி அளிக்கப்படும் | Duration 6 Months |
| IV. Short Hand Typing (Tamil) சுருக்கெழுத்தும் தட்டெழுத்தும் (தமிழ்) கணனி மூலம் தட்டெழுத்து பயிற்சி அளிக்கப்படும் | Duration 6 Months |
| V. General Motor Mechanism (Petrol & Diesel வாகனங்கள்) மோட்டார் வாகனம் திருத்துதல் | Duration 6 Months |
| VI. General Electrician (Wiring & Re - Winding) ஜெனரல் எலக்ரிஸன் (மின்சார இணைப்பு, மோட்டார் றிவைண்டிங் | Duration 6 Months |
| VII. Radio & T.V Repairing வானொலி, தொலைக்காட்சிப் பெட்டி திருத்துதல் | Duration 6 Months |
| VIII. Lathe Machine Operation கடைச்சல் இயந்திரப் பயிற்சி (On the job training) வழங்குதல்) | Duration 6 Months |
| IX. Arc Welding மின் ஒட்டுநர் பயிற்சி (On the job training) வழங்குதல் | Duration 6 Months |
| X. Carpentry (with use of machinery) மரவேலை வழங்குதல் (On the job training) | Duration 6 Months |
| XI. Refrigeration and Air conditioning குளிர்சாதனப் பெட்டி திருத்துதல் | Duration 6 Months |
| XII. தையல் பயிற்சி (Sewing) | Duration 4 Months |

குறிப்பு:
1. பயிற்சிக் கட்டணம் தவணை முறையில் செலுத்தலாம்.
2. வன்செயலால் பாதிக்கப்பட்ட அல்லது வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மாணவர்கள் பயிற்சிக்கட்டணத்தில் சலுகைகள் பெறலாம்.
3. பயிற்சி நெறிகள் சம்பந்தமான சகல விவரங்களையும் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

மேலதிக விவரங்களுக்கு:
Registrar,
Partician Institute,
61 (59), St.Patrick's Road,
Jaffna.
T.P: 021 222 6148
Fax: 021 222 6148
Email: Spitec@Sltnet.lk

(சி/570187)

# மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



செல்வன்
**கண்ணதாசன் ரஜந்தன்** (அன்பு)
தரம் 4 மாணவன்
இணுவில் இந்துக் கல்லூரி

அன்னை மடியில்
25★06★1998

பரமன் அடியில்
30★08★2007

ஆண்டுகள் மூன்று ஆனதோ அன்புச் செல்வமே உமைப் பிரிந்து -உம்
அன்பு முகமும் இனிய பேச்சும் எம் மனதில் நிழலாடுதே!
நித்தம் எம் நினைவுகளில் நீங்காது இடம் பிடித்த
எம் அன்புவே ஆருயிரே விக்கித் தவிக்கின்றோம்
வேதனையால் துடிக்கின்றோம் ஆண்டுபல போனாலும்
அழியாது உமதுருவம் மீண்டு வாராயோ என இறை
வேண்டி நிற்கின்றோம் உன் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்

இணுவில் கிழக்கு,
இணுவில்.

குடும்பத்தினர்.

(102624)

## மஹஜன சம்பத — Mahajana Sampatha

මහජන සම්පත
மஹஜன சம்பத
Mahajana Sampatha

27.08.2010

அலுவலக முடிவுகள்
சீட்டிழுப்பு இல. 2284

வெற்றி எழுத்து: **P**
வெற்றி எண்கள்: **2 6 9 0 5 4**

வலமிருந்து இடமாக பரிசு அமைப்பு

| பரிசு | இலக்கங்கள் | தொகை | பரிசுகள் |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | P 2 6 9 0 5 4 | ரூபா. 20,611,180/= | பரிசு - |
| 1 பரிசுகள் | 2 6 9 0 5 4 | ரூபா. 2,000,000/= | பரிசுகள் 01 |
| 2 பரிசுகள் | 6 9 0 5 4 | ரூபா. 100,000/= | பரிசுகள் 12 |
| 3 பரிசுகள் | 9 0 5 4 | ரூபா. 10,000/= | பரிசுகள் 136 |
| 4 பரிசுகள் | 0 5 4 | ரூபா. 1,000/= | பரிசுகள் 1331 |
| 5 பரிசுகள் | 5 4 | ரூபா. 100/= | பரிசுகள் 13414 |
| 6 பரிசுகள் | 4 | ரூபா. 20/= | பரிசுகள் 132897 |

இடமிருந்து வலமாக பரிசு அமைப்பு

| பரிசு | இலக்கங்கள் | தொகை | பரிசுகள் |
|---|---|---|---|
| 7 பரிசுகள் | 2 6 9 0 5 | ரூபா. 10,000/= | பரிசுகள் 14 |
| 8 பரிசுகள் | 2 6 9 0 | ரூபா. 1,000/= | பரிசுகள் 136 |
| 9 பரிசுகள் | 2 6 9 | ரூபா. 100/= | பரிசுகள் 1350 |
| 10 பரிசுகள் | 2 6 | ரூபா. 50/= | பரிசுகள் 13253 |
| 11 பரிசுகள் | P | ரூபா. 20/= | பரிசுகள் 53155 |

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை
**Rs. 12,027,090.00**

ஐந்து இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட பரிசுத்தொகை அரசாங்க வரி சட்டதிட்டங்களுக்கு உட்படும் பரிசுத்தொகையைப் பெற்றுக்கொள்ள தேசிய அடையாள அட்டை சமர்ப்பிக்கப்பட வேண்டும். வெற்றி பெற்ற டிக்கட், சீட்டிழுப்பு இடம்பெற்ற தினத்தில் இருந்து ஆறு மாதங்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும்.

உங்களின் செழிப்பு நாட்டின் செழிப்பு
தேசிய லொத்தர் சபை
324/2 காலி வீதி, கொழும்பு 03 தொலைபேசி: 2470662, 4607000, Hotline 2433631 மின்னஞ்சல்: www.nlb.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முருங்கனில் இடம்பெற்ற 23 இலட்சம் கொள்ளை
# பொலிஸ் இன்ஸ்பெக்டர் உட்பட மூவர் கைது

மன்னார்,ஓக.30

முருங்கனில் இடம்பெற்ற பாரிய கொள்ளைச் சம்பவம் தொடர்பாக பொலிஸ் இன்ஸ்பெக்டர், பொலிஸ் உத்தியோகத்தர், புளொட் அமைப்பின் உறுப்பினர் ஆகியோர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

மன்னார் - முருங்கன் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட சூரிய கட்டைக் காட்டில் வசிக்கும் வர்த்தகர் ஒருவரின் வீட்டிலிருந்து ஏறத்தாழ 23 இலட்சத்து 78 ஆயிரம் பெறுமதியான பணம், தங்க நகைக்கள் மற்றும் கைத்தொலைபேசியொன்றைக் கொள்ளையடித்த சம்பவம் தொடர்பாக பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஒருவரும் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரும் மற்றும் புளொட் அமைப்பின் உறுப்பினர் ஒருவரும் கைது செய்யப்பட்டு மன்னார் நீதவான் நீதிமன்றம் முன் நிறுத்தப்பட்டதை அடுத்து அவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் பணித்துள்ளது.

மன்னார் பொலிஸ் நிலையத்தில் பணியாற்றிய சந்தேக நபர்களான பொலிஸ் இன்ஸ்பெக்டரும் பொலிஸ் உத்தியோகத்தரும் கடமையில் ஈடுபட்டிருந்த வேளையிலேயே புளொட் உறுப்பினர் ஒருவரின் ஒத்துழைப்புடன் மேற்படி வர்த்தகரின் வீட்டினுள் புகுந்து அவரை அச்சுறுத்தி கடந்த ஆண்டு ஜனவரி மாதத்தில் 23 இலட்சத்து 78 ஆயிரம் பெறுமதியான பணம், தங்க நகைகள் மற்றும் கைத் தொலைபேசியொன்றையும் அபகரித்துச் சென்றுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இக் கொள்ளையில் கூட்டுச் சேர்ந்திருந்த புளொட் உறுப்பினர் தலைமறைவாகியிருந்ததாகவும், மேற்படி வர்த்தகரின் கைத்தொலைபேசி எண்ணின் ஊடாக தொழில்நுட்ப முறைமையைப் பயன்படுத்தி முதலில் சந்தேக நபர்களுள் ஒருவரான பொலிஸ் உத்தியோகத்தர் கைது செய்யப்பட்டதாகவும், அவரை விசாரணைக்கு உட்படுத்தியதன் மூலம் அபகரிக்கப்பட்ட கைத்தொலைபேசியைக் கைப்பற்ற முடிந்ததோடு, பொலிஸ் இன்ஸ்பெக்டரையும் புளொட் உறுப்பினரையும் கைது செய்ய முடிந்ததாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

(க)

## கணேசபுரம் கிராமத்தில் சிறீதரன் எம்.பி

கிளிநொச்சி,ஓக.30

கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கணேசபுரம் கிராம மக்களின் குறைகளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சிவஞானம் சிறீதரன் கேட்டறிந்தார்.

கடந்த வியாழக்கிழமை குறித்த கிராமத்திற்கு சென்ற அவர் அங்கு மீள்குடியேறிய மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக அவர்களுடன் கலந்துரையாடி குறைகளைக் கேட்டறிந்ததுடன் அவற்றை உரிய இடங்களுக்கு தெரியப்படுத்துவதாகவும் உறுதியளித்தார். அத்துடன் அக்கிராமத்தின் கிராம அபிவிருத்திச்சங்க கட்டடத்தில் தையல் பயிற்சி நெறிகளை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதாக்வும் கூறிச் சென்றார். மக்கள் ஆர்வத்துடன் தமது குறை நிறைகளை சிறீதரன் எம்.பியுடன் பகிர்ந்து கொண்டனர்.

(க-405)

## ஆனையிறவு தடைமுகாமில் வாகனங்கள் பதிவின் பின்னரே பயணிக்க அனுமதி

கிளிநொச்சி,ஓக.30

யாழ்ப்பாணத்தில் இருந்து வெளி மாவட்டங்களுக்குச் செல்லும், வெளிமாவட்டங்களில் இருந்து யாழ்ப்பாணத்திற்குள் நுழையும் சகல வாகனங்களும் ஆனையிறவு தடைமுகாமில் இராணுவத்தினரால் பதிவு செய்யப்பட்ட பின்னரே தொடர்ந்து பயணிக்க அனுமதிக்கப்படுகின்றது.

பயணம் செய்யும் வாகனத்தின் வகை, இலக்கம், வாகன உரிமையாளரின் பெயர் என்பன பதிவு செய்யப்பட்ட பின்னரே ஆனையிறவு தடைமுகாமைக் கடந்து செல்ல இராணுவத்தினர் அனுமதிக்கின்றனர்.

குற்றச் செயல்களைத் தடுக்கும் முகமாகவே இத்தகைய வாகனப் பதிவுகள் இடம்பெறுவதாக இராணுவத்தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

(எ-6)

## கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவில் மீள்குடியேற்றம்

கிளிநொச்சி,ஓக.30

கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவில் இன்று 30 ஆம் திகதி சில கிராம அலுவலர் பிரிவுகளில் நலன்புரி முகாம்களுக்கு வெளியே உள்ளவர்களை மீள் குடியேற்றும் பணி நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி திருநகர் தெற்கு, திருநகர் வடக்கு, கணேசபுரம், பெரிய பரந்தன், அம்பாள்நகர் ஆகிய கிராம சேவகர் பிரிவுகளைச் சேர்ந்தவர்களே மீள்குடியேற்றம் செய்யப்படவுள்ளனர். இக்கிராம அலுவலர் பிரிவுகளை நிரந்தர வதிவிடமாகக் கொண்ட ஏனைய மாவட்டங்களில் தற்காலிகமாக வசிக்கும் மக்கள் இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தமது மீள் குடியேற்றத்தை மேற்கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. இவ்வாறானவர்கள் தாம் தற்போது தற்காலிகமாக வசிக்கும் கிராம அலுவலர் பிரிவுகளில் தமது பதிவுகளை நீக்கி அக்கிராம அலுவலர் பிரிவுகளுக்குரிய பிரதேச செயலாளரினால் மேலொப்பமிடப்பட்ட கடிதங்களுடன் இன்று திங்கள்கிழமை மு.ப 9 மணி தொடக்கம் பி.ப 2 மணிவரை கிளிநொச்சி மத்திய கல்லூரியில் அமைந்துள்ள இடைத்தங்கல் முகாமிற்கு வருகை தருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு வருபவர்களுக்கான மீள் குடியேற்றப் பதிவுகளை உரிய கிராம அலுவலர்கள் இடைத்தங்கல் முகாமில் வைத்து மேற்கொண்டு உணவுப்பங்கீட்டு அட்டைகளையும் நிவாரண அட்டைகளையும் வழங்குவதுடன் குறித்த பிரதேச இராணுவப் பிரிவினராலும் புகைப்படங்கள் எடுக்கப்பட்டு, பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு பதிவிலக்கங்கள் வழங்கப்படும்.

இம்மாதம் தொடக்கம் இவ்வாறாக கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கிராமங்களில் மீள் குடியேற்றம் இடம்பெற்று வருவதும், இம்மீள் குடியேற்றம் இறுதியானது என்பதும் குறிப்பிடத்தக்கது.

(க-405)

# வடமாகாண சுகாதார தொண்டர் நியமனம் நீதியின்படி செயற்பட வேண்டும்

## வினோ எம்.பி கோரிக்கை

மன்னார்,ஓக.30

வடமாகாணத்தில் முன்னெடுக்கப்படவிருக்கும் சுகாதார தொண்டர்களுக்கான நியமனத்தை நீதியின் அடிப்படையில் அணுகுமாறு வடமாகாண ஆளுநர் உள்ளிட்ட பலருக்கு எழுத்து மூலம் அவசர கோரிக்கை விடப்பட்டிருப்பதாக வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் வினோ நோகராதலிங்கம் தெரிவிக்கின்றார்.

மன்னார், வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்களிலில் முன்னேடுக்கப்படவிருக்கும் சுகாதார தொண்டர்களுக்கான ஆள்சேர்ப்பு நடவடிக்கையில் அரசியல் தலையீடு இடம்பெறும் வாய்ப்புள்ளதாக சுட்டிக்காட்டியே நாடாளுமன்ற உறுப்பினர் மேற்படி வேண்டுகோளை முன்வைத்திருப்பதாக தெரியவந்துள்ளது.

இது பற்றி அவர் தெரிவிக்கையில் வடமாகாண சுகாதாரத் திணைக்களத்தினால் குறித்த மாவட்டங்கள் ஒவ்வொன்றிற்கும் 250 பேர் வீதம் 750 பேரை நியமனம் செய்வதற்கு வடமாகாண சுகாதாரத் திணைக்களம் நடவடிக்கை எடுத்திருப்பதாகவும் இதற்கான முடிவுத்திகதி செப்ரெம்பர் மூன்றாம் திகதி என அறிவிக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் ஏற்கனவே சுகாதாரத் தொண்டர்களாக பணியாற்றுபவர்களையும், அந்தந்த மாவட்டங்களைச் சேர்ந்தவர்களையும் புறக்கணித்துவிட்டு வெளி மாவட்டங்களைச் சேர்ந்தவர்களை நியமனம் செய்வதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும், குறித்த பதவிக்கு விண்ணப்பிப்பதற்கு தகுதி பெற்றவர்கள் அதுதொடர்பில் தம்மிடம் முறையிட்டிருப்பதனால் சுகாதாரத் தொண்டர்களுக்கான நியமனங்கள் நீதியான முறையில் முன்னெடுக்கப்படவேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளேன் எனவும் அவர் தெரிவிக்கின்றார்.

செல்வாக்குள்ள அமைச்சர் ஒருவர் இந்தபதவிகளுக்கு தமது ஆதரவாளர்களை நியமனம் செய்வதற்காக ஒவ்வொரு மாவட்டத்தின் சுகாதாரத்திணைக்களத்திற்கும், 250 பேர் கொண்ட மூன்று பெயர்ப்பட்டியல்களை அனுப்பிவைத்துள்ளதாகவும், அந்தப் பெயர்ப்பட்டியலில் உள்ளவர்களுக்கே நியமனம் வழங்குமாறு உத்தரவிட்டுள்ளதாகவும் எனக்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அரசின் நியமனங்கள் வழங்கப்படும் போது அதற்கென உள்ள நடைமுறைகள் சரியான முறையில் பின்பற்றப்படவேண்டும். அதேவேளை அந்தத் துறையில் ஏற்கனவே தொண்டர்களாக சிறிய கொடுப்பனவோடு அல்லது எவ்விதமான கொடுப்பனவுகளும் இல்லாமல் வருடக்கணக்கில் பணியாற்றிவருகின்ற அந்தந்தப் பிரதேசங்களைச் சேர்ந்த இளைஞர் யுவதிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படவேண்டும். அத்தகைய முன்னுரிமை இல்லாமல் புதியவர்களுக்கு நியமனம் வழங்கப்படுவதை எந்தக் காரணம் கொண்டும் ஏற்றுக் கொள்ள முடியாது.

ஆகவே வவுனியா, மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்களுக்கான சுகாதார தொண்டர்களை நியமிக்கும் இப்போதைய நடவடிக்கையில் அரச நியமனம் வழங்கும் நடைமுறை கைக்கொள்ளப்படவேண்டும்.

அத்துடன் செல்வாக்குள்ள அமைச்சர் ஒருவரினால் அனுப்பப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ள அந்த பெயர்ப்பட்டியலை இந்த நியமனத்தின் போது கவனத்தில் எடுக்கக்கூடாது என்பது எமது கோரிக்கையாகும்.

சுகாதார தொண்டர் நியமனம் விடயம் தொடர்பாக வடமாகாண ஆளுநர், சுகாதார அமைச்சுச் செயலாளர், சுகாதார திணைக்கள அதிகாரிகள் ஆகியோருக்கு உடனடியாக எழுத்து மூலம் முறைப்பாடு செய்துள்ளேன் எனவும் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். வினோ நோகராதலிங்கம் தெரிவித்திருக்கின்றார்.

(த-80)




## பள்ளிக்குடா கடற்றொழிலாளர் சங்கங்களுக்கு கண்ணாடி இழைப் படகுகள் வழங்கப்படவுள்ளன

கிளிநொச்சி மாவட்டத்தில் பூநகரி பிரதேச செயலர் பிரிவில் பள்ளிக்குடா பிரதேசத்தில் உள்ள இரண்டு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு தலா 4 இலட்சம் ரூபா பெறுமதியான கண்ணாடி இழைப் படகுகளும் அதற்குரிய இயந்திரங்களும் உலக தரிசனம் நிறுவனத்தால் வழங்கப்படவுள்ளன.

இதற்குரிய பயனாளிகள் தெரிவு கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது.

வளர்மதி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கு இரண்டு படகுகளும் பள்ளிக்குடா கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கு நான்கு படகுகளும் வழங்கப்படவுள்ளதாக கிளிநொச்சி கடற்றொழில் நீரியல்வள முகாமைத்துவ உதவியாளர் எம்.நக்கீரன் தெரிவித்துள்ளார்.

(க-72)



கிளிநொச்சி மாவட்டத்தின் பளை கல்விக் கோட்டத்திற்குட்பட்ட மாசார் அ.த.க.பாடசாலையின் கூரைகளற்ற கட்டடங்களை முதல் மூன்று படங்களிலும், கிடுகினால் வேயப்பட்ட அதிபரின் அலுவலகத்தை இறுதிப்படத்திலும் காணலாம்.

(படங்கள்:- கிளிநொச்சிச் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜாதிக சம்பத

சீட்டிழுப்பு இலக்கம் - 51
திகதி - 28.08.2010

ஜாதிக சம்பத Jathika Sampatha — உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றியீட்டும் ஆங்கில எழுத்து **O** | அதிர்ஷ்ட இலக்கம் **02** | வெற்றி இலக்கம் **9 5 5 0 4**

வலமிருந்து இடமாக பரிசு அமைப்பு

| பரிசு | இலக்கங்கள் | பரிசுத் தொகை | பரிசுகள் |
|---|---|---|---|
| ஜாக்பொட் பரிசு | O 02 9 5 5 0 4 | ரூ. 16,471,754.00 | - |
| 1 பரிசு | 02 9 5 5 0 4 | ரூ. 2,000,000.00 | 01 |
| 2 பரிசு | 9 5 5 0 4 | ரூ. 100,000.00 | 02 |
| 3 பரிசு | 5 5 0 4 | ரூ. 10,000.00 | 23 |
| 4 பரிசு | 5 0 4 | ரூ. 1,000.00 | 252 |
| 5 பரிசு | 0 4 | ரூ. 50.00 | 2456 |
| 6 பரிசு | 4 | ரூ. 20.00 | 23677 |

இடமிருந்து வலமாக பரிசு அமைப்பு

| பரிசு | இலக்கங்கள் | பரிசுத் தொகை | பரிசுகள் |
|---|---|---|---|
| 7 பரிசு | 9 5 5 0 | ரூ. 1,000.00 | 27 |
| 8 பரிசு | 9 5 5 | ரூ. 100.00 | 253 |
| 9 பரிசு | 9 5 | ரூ. 50.00 | 2468 |
| 10 பரிசு | O | ரூ. 20.00 | 9760 |
| 11 பரிசு | O 02 | ரூ. 100.00 | 1094 |

இம்முறை வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை ரூ. 3,758,640.00

வெற்றிபெறும் டிக்கட்கள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்களுக்கு மாத்திரமே செல்லுபடியாகும். ரூ.5 இலட்சம் அல்லது அதற்குக் கூடிய பரிசுத் தொகைகள் அரச வரிகளுக்கு உட்படும். பரிசைப் பெற்றுக்கொள்வதற்கு, தேசிய அடையாள அட்டையைச் சமர்ப்பிப்பது கட்டாயமானது.

தேசிய லொத்தர் சபை
234/2, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி: 2470662, 2470663 அவசர அழைப்பிற்கு: 2473360, 2433631
இணையத்தளம்: www.nlb.lk

அடுத்த புதன் கிழமை சுப்பர் பரிசு
ரூ. 16,471,754.00


# கண்ணீர் அஞ்சலி



எமது கல்வி நிலையத்தின் தமிழ்
ஆசிரியர் ச.நவநீசன்
அவர்களின் துணைவியார்

**திருமதி ந.பிருந்தா**

அவர்களின் திடீர் மறைவினால்
துயருற்றிருக்கும் அவரது
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத்
தெரிவித்துக்கொள்வதோடு அன்னாரது ஆத்ம
சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

விக்னேஸ்வரா கல்வி நிலையம், பொற்பதி வீதி, கொக்குவில். — நிர்வாகி, ஆசிரியர்கள், மாணவர்கள்.

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை
செல்வி குமுதினி தில்லையம்பலம் அவர்களின் பாசமிகு தந்தை

**பழனி தில்லையம்பலம்**

(மண்டான், கரணவாய் மேற்கு, கரவெட்டி)
அவர்கள் 29.07.2010 அன்று இறைபதமடைந்ததையிட்டு
எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதுடன்
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

வ/அண்ணாநகர் பரமேஸ்வரா வித்தியாலயம், வவுனியா — ஆசிரியர் நலன்புரி சங்கம்.

# யாழ்.மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கங்களின் இணைந்த புலமைப் பரிசில் திட்டம்

## 8 ஆவது வழங்கலுக்கான (2009 - 2010) விளம்பரம்

யாழ்.மத்திய கல்லூரியின் திறமைமிக்க வசதி தேவைப்படும் மாணவர்கள் இலங்கையில் தங்கள் உயர் கல்வியைத் தொடர்வதற்காக கனடா, அவுஸ்திரேலியா, கொழும்பு யாழ்.மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கங்களும், ஐக்கிய இராச்சிய (U.K) பழைய மாணவ மாணவிகள் சங்கமும் அமெரிக்காவில் வசிக்கும் Dr.S.K.மகேஸ்வரன் அவர்களும் மற்றும் Dr.K.இரகுநாதன் ஞாபகார்த்தமாக அவரது குடும்பத்தினரும் இணைந்து வழங்கும் புலமைப்பரிசில்.

இந்த உத்தேச திட்டத்தின் கீழ் க.பொ.த. உயர்தர 12ஆம், 13 ஆம் ஆண்டுகள் ஒவ்வொன்றிலும் கல்வி பயிலும் ஏறக்குறைய இருபது தகைமை வாய்ந்த மாணவர்கள் ஒவ் வொருவருக்கும் ஆண்டு தோறும் தலா ரூபா 5,000/= வழங்கப்படும். இதேபோன்று தேசிய பல்கலைக்கழகங்களுக்கு வருடா வருடம் தெரிவுசெய்யப்பட்டு முதலாம் ஆண்டில் கல்வி பயிலும் ஏறக்குறைய 10 தகைமைவாய்ந்த மாணவர்கள் ஒவ்வொருவருக்கும் அவர்களது கற்கை நெறி நிறைவுபெறும் வரை ஆண்டு தோறும் தலா ரூபா 10,000/= வழங்கப்படும்.

பொது தேவைப்பாடுகளும் நிபந்தனைகளும்

தற்பொழுது தரம் 12 இல் படிக்கும் மாணவர்களும், 2009 ஆம் ஆண்டில் நடைபெற்ற உயர்தர பரீட்சையில் சித்தியெய்தி தேசிய பல்கலைக்கழகங்களுக்கு தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களும் இப்புலமைப்பரிசிலுக்கு விண்ணப்பம் செய்வதற்கு தகுதி உடையவர் ஆவார்.

குடும்பத்தின் கூட்டுவருமானம் ஆண்டொன்றுக்கு ரூபா 125,000.00 க்கு மேற் படலாகாது.

பெற்றோரை இழந்த, ஊனமுற்ற மற்றும் விளையாட்டு, பாடசாலைக் கல்வி விதானத் திட்டத்திற்கு மேற்பட்ட செயற்பாடுகளில் சிறந்து விளங்கும் தகைமை பெற்ற மாணவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

பரீட்சைப் பெறுபேறுகள், பாடநெறித்தெரிவு முன்னுரிமை என்பன தொடர்பில் பாடசாலை அதிபர்/உபஅதிபரின் விதப்புரையும், தனிப்பட்ட விவரங்கள், குடும்ப வருமானம் என்பவற்றின் உறுதிப்படுத்தலுக்கு கிராம சேவையாளரின் அத்தாட்சிப்படுத்தலும் தேவைப்படும்.

இப்புலமைப்பரிசில்களைப் பெற விரும்பும் தகைமையைப் பெற்ற மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பப்படிவங்களை பாடசாலை அதிபர்/உபஅதிபரிடமும், யாழ்.மத்திய கல்லூரி, பழைய மாணவர் சங்கம், கொழும்புக் கிளை, கௌரவ புலமைப்பரிசில் செயலாளரிடமிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

சகல விண்ணப்பங்களும் சரியான முறையில் பூர்த்தி செய்யப்பட்டு யாழ்.மத்திய கல்லூரி அதிபரிடம் கையளிக்கப்படவேண்டும்.

இவ் விண்ணபங்கள் அதிபரின் பரிசீலனைக்கு பின்பு யாழ். மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்க கொழும்பு கிளை புலமைப்பரிசில் செயலாளருக்கு அதிபரினால் அனுப்பி வைக்கப்படும்.

நிதியுதவி பெறுவோரைத் தேர்ந்தெடுத்தலும் கொடுப்பனவுகளை மேற்கொள்ளுதலும் புலமைப்பரிசில் முகாமைக்குழுவின் பொறுப்பாக அமையும், இப் புலமைப்பரிசில் திட்டம் தொடர்பிலான சகல விடயங்கள் பற்றி, இக்குழு எடுக்கும் தீர்மானங்கள் முற்றானதும் இறுதியானதுமாகக் கருதப்படும்.

விண்ணப்பங்கள் 20.09.2010 இற்கு முன்னர் யாழ்.மத்திய கல்லூரி அதிபருக்கு அனுப்பி வைக்கப்படவேண்டும்.

மனோ தேவசகாயம்,
தலைவர்
பழைய மாணவர் சங்கம்,
கொழும்புக் கிளை.

கே.மகேந்திரநாதன்,
புலமைப் பரிசில் செயலாளர்,
33 1/3, பொஸ்வெல் பிளேஸ்,
கொழும்பு - 06
தொ.பே. 0773525413

(வி/570320)

யாழ்.மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கம், கொழும்புக்கிளை.

# ஊனமுற்றோர் கொடுப்பனவு

சமூக சேவைகள் அமைச்சு யாழ். மாவட்டத்தில் ஊனமுற்றோருக்கு மாதாந்தம் வழங்கப்படும் 3000 ரூபா கொடுப்பனவுக்குரிய நிதியை அனுப்பி வைத்துள்ளது.

ஒகஸ்ட் மாதம் முதல் டிசெம்பர் மாதம் வரையிலான கொடுப்பனவுக்குரிய நிதியே இவ்வாறு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவிலும் தலா 7 பேர் வீதம் தெரிவுசெய்யப்பட்டு தலா 105 பேருக்கு இந்நிதி மாதாந்தம் வழங்கப்படவுள்ளது.

2006 ஆம் ஆண்டு தெரிவு செய்யப்பட்டவர்களுக்கே தொடர்ச்சியாக இந்நிதி வழங்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (எ-121)

## வீடு வாடகைக்குண்டு

யாழ்.மாநகரசபை எல்லைக்குள், 5 அறைகள் கொண்ட மேல்மாடி வீடு அரசசார்பற்ற or தனியார் நிறுவனங்களுக்கு வாடகைக்கு விடப்படும்.
தொடர்பு: 0776047589

## விற்பனைக்கு

1 ¼ பரப்புக் காணியில் அமைந்துள்ள ராஜா சுவைச்சோலை கடையும் காணியும் விற்பனைக்குண்டு. பருத்தித்துறை பிரதேச செயலகத்துக்கு அருகாமையிலும் பருத்தித்துறை நகருக்கு அண்மையிலும் இருக்கிறது. விலைநேரில் பேசலாம்.
தொடர்பு: 0772673612

## வீடு காணி விற்பனைக்கு

வளாக வீதியில் 1 ½ பரப்புக்காணியுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு.
தொடர்பு: நா.நாகராசா, வளாகவீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.
T.P. 021 300 6917, 077 6986726

## பூசகர் தேவை

ஹற்றன் முருகன் கோயிலுக்கு உதவி அந்தண அர்ச்சகர் உடன் தேவை. குடும்பமாகவோ அல்லது தனியாகவோ தங்குமிட வசதியும் தகுந்த சம்பளமும் கொடுக்கப்படும்.
தொடர்புகொள்ளவும். 051 2222645

## பெயர் மாற்றம்

18/3, மத்திய கிழக்கு வீதி, குருநகர், யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் வசிக்கும் கிறைகோரி கலிபோனியா பிறின்சஸ் ஆகிய நான் இன்று (30.08.2010) முதல் எனது பெயரை கிறைகோரிநிசா என்று மாற்றிக் கொள்கின்றேன். இன்று தொடக்கம் நான் எல்லா ஆவணங்களிலும் கிறைகோரி நிசா என்று கையொப்பம் இடுவேன் என்று இத்தால் அறிவித்துக்கொள்கின்றேன்.

# இசையரங்கும் திறப்புவிழாவும்

யாழ்ப்பாணம், ஒக. 30

இணுவையூர் ரசிகப்பிரியா சபா நடத்தும் மாதாந்த இசையரங்கும் இணுவில் மஞ்சத்தடி அருணகிரிநாதர் கலையரங்கத் திறப்பு விழாவும் இன்று திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு ரசிகப்பிரிய சபா தலைவர் இணுவையூர் வி.கே.குகானந்தன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக பாரம்பரியக் கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா கலந்து கொள்வார்.

இசையரங்கத்தில் செல்வி யோ. யோகாஞ்சனாவின் பாட்டுக் கச்சேரி இடம்பெறும். திருமதி வனஜா ஈஸ்வரசர்மா வயலினும், கி.அனந்தகோபன் மிருதங்கமும், க.நந்தகுமார் கெஞ்சிராவும் வாசிப்பர். (அ)


# சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு இல 2151 திகதி 28-08-2010

ஆங்கில எழுத்திரும் S

வெற்றி எண்கள் 26 42 51 56 — போனஸ் இல: 09

ஜக்பொட் பரிசு ரூ. 10,974,600/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 185373 | 20/- | 3,707,460/- |
| 2 இல | 13275 | 100/- | 1,327,500/- |
| 3 இல | 265 | 1,000/- | 265,000/- |
| 4 இல | 02 | 1,000,000/- | 2,000,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திரும் | 7542 | 40/- | 301,680/- |
| 2 இல + ஆங்கில எழுத்திரும் | 518 | 1,000/- | 518,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திரும் | 20 | 10,000/- | 200,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திரும் | - | 10,974,600/- | |
| 1 இல + போனஸ் இல | 8759 | 100/- | 875,900/- |
| 2 இல + போனஸ் இல | 422 | 500/- | 211,000/- |
| 3 இல + போனஸ் இல | 06 | 100,000/- | 600,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திரும் + போனஸ் இல | 354 | 200/- | 70,800/- |
| 2 இல + ஆங்கில எழுத்திரும் + போனஸ் இல | 18 | 1,500/- | 27,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திரும் + போனஸ் இல | - | 150,000/- | |
| மொத்தம் | | | 10,104,340/- |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பரிசுகளின் தொகை | 10 | 60,000/- | 600,000/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 216564 | | 10,704,340/- |

ரூ. 60,000/- வீதம் பணப்பரிசுகள் வெற்றிபெற்ற 10 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்.

| | |
|---|---|
| மொனராகலை | 302258523-4-40 |
| கம்பஹா | 302261439-3-21 |
| குருநாகல் | 302256919-6-18 |
| பொலன்னறுவை | 302261696-1-15 |
| மட்டக்களப்பு | 302278396-9-36 |
| புத்தளம் | 302257683-3-16 |
| யாழ்ப்பாணம் | 302278310-0-13 |
| காலி | 302264947-6-45 |
| களுத்துறை | 302262029-3-43 |
| வவுனியா | 302261518-7-27 |

இந்த புதன்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு
ரூ. 11,480,450/-

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர் சபை


# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 05 | 31 |
| ★ | ★ |
| 03 | 07 |
| ★ | ★ |
| 1926 | 2010 |

**திருமதி சின்னத்துரை சரஸ்வதியம்மா**

கடந்த 31.07.2010 அன்று சிவபதமடைந்த எங்கள் அன்புத் தெய்வத்தின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டோருக்கும் தொலைபேசிமூலம் அனுதாபம் தெரிவித்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் மலர்வளையம் சாத்தி அஞ்சலி செலுத்தியோருக்கும் சகல வழிகளிலும் உதவிபுரிந்த அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இன்று (30.08.2010) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

21/3, புகையிரத வீதி, கொக்குவில் கிழக்கு. — மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.


# நீங்களும் கணனிப்பட்டதாரியாக அரிய வாய்ப்பு!

Duration: 2 - 2 1/2 Years
Qualification: O/L or A/L or HND

Level I Diploma in Computer Science — After the Completion of 1st and 2nd Semester
Level II Advanced Diploma in Computer Science — After the Completion of 3rd and 4th Semester
Level III B.Sc. in Computer Science — After the Completion of 5th and 6th Semester

மேற்படி கற்கைநெறிகளுக்கான அனுமதிகள் வழங்கப்படுகின்றன


A/L பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கான




புதிய பிரிவு ஆரம்பம் 01-09-2010

NORTH LANKA IIT (Pvt.) Ltd.
93, Laxan Plaza, Navalar Road, Jaffna.
Phone :- 0213214305


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வாக்குரிமையையும் வாக்களிப்பின் முக்கியத்துவத்தையும் ஊக்கப்படுத்தும்முகமாக மனித உரிமைகள் இல்லத்தினால் நடத்தப்பட்ட மாவட்ட மட்டக் கிரிக்கெட் போட்டி யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் இடம் பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.
பண்டத்தரிப்பு ஐக்கிய விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து சுழிபுரம் கோல்டன் ஸ்ரார் விளையாட்டுக் கழகம் மோதுவதைப் படங்களில் காணலாம்.
(படங்கள்: தமிழினியன்)

# அதிரடியாக ஆடிச் சதமடித்தார் உத்தமகுமரன்; பற்றீசியனை இலகுவில் வென்றது கே.ஸி.ஸி.ஸி!

யாழ்ப்பாணம்,ஒக.30

உத்தமகுமரனின் அதிரடிச் சதம் கை கொடுக்க பற்றீசியன்ஸ் விளையாட்டுக் கழக அணியை 92 ஓட்டங்களால் வீழ்த்தியது கே.ஸி. ஸி.ஸி. விளையாட்டுக் கழகம்.

யாழ்.பல்கலைக் கழக விளையாட்டு அவை நடத்தும் அழைக்கப்பட்ட கழகங்களுக்கு இடையிலான 50 ஓவர்களைக் கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரில் யாழ்.பல்கலைக்கழக மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டம் ஒன்றில் கே.ஸி. ஸி.ஸி. விளையாட்டுக் கழகமும் பற்றீசி யன்ஸ் விளையாட்டுக் கழகமும் மோதிக் கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய கே.ஸி. ஸி.ஸி. விளையாட்டுக் கழக அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 260 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் உத்தமகுமரன் 105 ஓட்டங்களையும், சபானந்தன் 23 ஓட்டங்களையும், பிரதீபன் 56 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக் கொடுத்தனர்.

பந்து வீச்சில் பற்றீசியன்ஸ் விளையாட்டுக் கழக அணி வீரர்களான லவதீசன் 3 விக்கெட்டுக்களையும், முகுந்தன், சுரேன், முரளி ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

261 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியெனக் களம் இறங்கிய பற்றீசியன்ஸ் விளையாட்டுக்கழக அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 168 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.

இதில் விதுபாலா 37 ஓட்டங்களையும், முரளி 45 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக் கொடுத்தனர்.

பந்து வீச்சில் கே.ஸி.ஸி.ஸி. விளையாட்டுக் கழக அணி வீரர்களான றொபேசன், கிருபவன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

(எ-23)

## ஜனாதிபதி தங்கக் கிண்ணம்

# உடுவில் பிரதேச செயலகக் கரப்பந்தாட்டத்தில் கோட்டைக்காடு ஸ்ரீ முருகன் சம்பியன்!

வலி.வடக்கு,ஓக.30

பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் 40 ஆவது வருட நிறைவையொட்டி ஜனாதிபதி தங்கக் கிண்ணத்துக்கான உடுவில் பிரதேச செயலாளர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையே நடைபெற்ற ஆண்களுக்கான கரப்பந்தாட்டப்போட்டியில் மல்லாகம் கோட்டைக்காடு ஸ்ரீ முருகன் விளையாட்டுக்கழகம் சம்பியனாகியது.

உடுவில் மத்தி விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் உடுவில் மத்தி விளையாட்டுக்கழகமும் மல்லாகம் கோட்டைக்காடு ஸ்ரீ முருகன் விளையாட்டுக்கழகமும் மோதிக் கொண்டன.

ஐந்து சுற்றுக்கள் கொண்ட இந்தப் போட்டியில் முதல் இரண்டு சுற்றுக்களை உடுவில் மத்தி விளையாட்டுக்கழகம் 25:19, 25:21 புள்ளிகள் என்ற அடிப்படையில் தனதாக்கியது. எனினும் அதன்பின் வீறு கொண்டெழுந்து இறுதி மூன்று சுற்றுக்களையும் ஸ்ரீ முருகன் விளையாட்டுக்கழகம் 25:19, 25:14, 15:12 புள்ளிகள் என்ற அடிப்படையில் சுவீகரித்துக் கொண்டது.

ஆட்ட நிறைவில் ஸ்ரீ முருகன் விளையாட்டுக் கழகம் 03:02 சுற்றுக்கள் என்ற அடிப்படையில் உடுவில் மத்தி விளையாட்டுக் கழகத்தை வெற்றி கொண்டு மாவட்ட ரீதியிலான போட்டியில் விளையாடத்தகுதி பெற்றுள்ளது. (எ-86)

# கைதடி முத்துக்குமார சுவாமி ம.வியின் நூற்றாண்டு விழா கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி

## இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஒக.30

கைதடி முத்துகுமார சுவாமி மகாவித்தியாலயத்தின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு கைதடி நாவற்குழி பிரதேசத்துக்கு உட்பட்ட கழகங்களுக்கு இடையிலான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி இன்று திங்கட்கிழமை குமரன் விளையாட்டுக் கழக மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது.

இன்று பிற்பகல் 3 மணியளவில் இடம் பெறும் ஆரம்ப நாள் ஆட்டத்தில் கைதடி சரஸ்வதி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து நாவற்குழி மகாவிஷ்ணு விளையாட்டுக்கழக அணி களம் இறங்குகின்றது.

தொடர்ந்து இடம் பெறவுள்ள ஆட்டத்தில் கைதடி மின்ஒளி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கைதடி குமரன் விளையாட்டுக் கழகம் மோதுகின்றது.

இதேவேளை இச் சுற்றுப்போட்டியில் 12 கழகங்கள் பங்குபற்றுகின்றன எனப் போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (எ-23)

## குடாநாட்டு விளையாட்டு அரங்குகளில்

# ஜெயந்திரனின் பந்துவீச்சின் பலத்தால் சென்றலைட்ஸை வீழ்த்தியது பல்கலை. அணி!

யாழ்ப்பாணம்,ஓக.30

சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழகத்துடனான கிரிக்கெட் ஆட்டம் ஒன்றில் யாழ்.பல்கலைக்கழக அணி 4 விக்கெட்டுக்களால் வெற்றியீட்டியது.

யாழ்.பல்கலைக்கழக விளையாட்டு அவை நடத்தும் அழைக்கப்பட்ட கழகங்களுக்கு இடையிலான 50 ஓவர்களைக் கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரில் யாழ். பல்கலைக் கழக விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டம் ஒன்றில் சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து யாழ். பல்கலைக்கழக அணி களமிறங் கியது.

இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகம் 32.3 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 102 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் நிசாந்தன் 21 ஓட்டங்களையும் திவாகர் 14 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக் கொடுத்தனர்.

பந்து வீச்சில் யாழ். பல்கலைக் கழக அணி வீரர் ஜெயந்திரன் 4 விக்கெட்டுக்களையும் , கிரிசாந்தன் 3 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யாழ். பல்கலைக்கழக அணி 18.2 ஓவர்கள் நிறைவில் ஆறு விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து 106 ஓட்டங்களைப் பெற்று வெற்றி இலக்கை அடைந்தது.

இதில் ஜெயரூபன் 41 ஓட்டங்களையும் திவகரன் 22 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக் கொடுத்தனர். பந்து வீச்சில் சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழக அணி வீரர்களான மதுசன், 3 விக்கெட்டுக்களையும் றொகான் 2 விக்கெட்டுக்களையும் நிசாந்தன் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர். (எ-23)



ஜனாதிபதி தங்கக் கிண்ணத்துக்கான பொது நிர்வாக உள்நாட்டு அமைச்சின் ஏற்பாட்டில் உடுவில் பிரதேச செயலாளர் பிரிவில் கிராம அலுவலர் பிரிவுகளுக்கு இடையே நடைபெற்ற ஆண்களுக்கான கரப் பந்தாட்டப் போட்டியில் சம்பியனாக தெரிவு செய்யப்பட்ட மல்லாகம் கோட்டைக்காடு ஸ்ரீ முருகன் விளையாட்டுக் கழக அணியை முதலாவது படத்திலும்.

2 ஆம் இடத்தைப் பெற்ற உடுவில் மத்தி விளையாட்டுக் கழக அணி வீரர்களை இரண்டாவது படத் திலும் காணலாம்.

(படங்கள்: நேசன்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இலையானும் நுளம்பும் சுதந்திர நடமாட்டம்; மக்களோ கூடாரங்களுக்குள் முடக்கம்



# இன்னமும் கண்ணீரில்தான் வன்னி மக்களின் வாழ்வு

**பதிவு 4**

சாந்தபுரத்துக்கு செல்லும் பாதையின் முகப்பில் நீண்ட தடி கொண்ட தடை ஒன்று அமைக்கப்பட்டு அதனருகில் படையினரின் காவலரண் ஒன்றும் முளைத்திருந்தது. இதனால் அதனூடாகச் செல்ல முடியுமா? இல்லையா? என்ற சந்தேகம் எமக்கு எழுந்தது. எந்தெந்தப் பாதையால் மக்கள் பயணிக்க அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பது பற்றிய சரியான தெளிவு இன்னமும் அங்கு ஏற்படுத்தப்படவில்லை. இதனால் குறித்த பாதையையும் தாண்டி கனகாம்பிகைக் குளம் நோக்கி சிறிது தூரம் சென்றபின்னர் தான் எங்களுக்கு பாதையைத் தவற விட்டுவிட்டோம் என்ற உண்மை புரிந்தது. மீண்டும் திரும்பி வந்து, தயக்கத்தோடு தடை போடப்பட்டிருந்த பாதையருகே வந்தோம். உள்ளே செல்வதா விடுவதா என்று யோசித்துக் கொண்டிருக்கும்போதே அங்கிருந்த படைச் சிப்பாய் ஒருவர் உள்ளே செல்வதற்குரிய அனுமதியை சைகை மூலம் எமக்குக் காட்டினார்.

பாதையை முக்கால் வாசிக்கு தடை செய்யப்பட்ட படி கட்டப்பட்டிருந்த தடியின் ஒரு புறமாக இருந்த ஒற்றையடிப் பாதையால் பிரதான பாதைக்குள் நுழைந்தோம். சாந்தபுரம் கலைமகள் வித்தியாலயத்தை அடையும் வரை நீண்டிருந்த பாதை முழுவதையும் வெள்ளம் மூடியிருந்தது. ஆங்காங்கே திட்டுத் திட்டாக மண்மேடுகள் அந்த வெள்ளத்தினூடே தலைகாட்டினாலும் அதனூடாகப் பயணிப்பது ஆபத்தானதாகவே இருந்தது. முன்னர் யாழ்ப்பாணத்துக்கும் வெளியிடங்களுக்குமான தரைப்பாதை துண்டிக்கப்பட்டிருந்தபோது பூநகரி - கொம்படிப் பாதையூடாகவே பயணம் நிகழ்ந்தது. சேறும் சகதியும் நிறைந்த அந்தப் பாதையூடாக பயணிப்பது என்பது மிகவும் சிரமமான ஒரு காரியம் என்றாலும் வேறு வழியின்றி - அதுமட்டுமே ஒரே மார்க்கமாக இருந்தபடியால் - பயணப் பைகளும், இடுப்பளவு உடலும் சேற்றில் குளித்தாலும் அதனை லட்சியம் செய்யாது மக்கள் பயணித்தனர்.



சகதிக்குள்ளும் தொடரும் விளையாட்டு

சாந்தபுரத்துக்குச் செல்லும் பாதையும் ஏறக்குறைய கொம்படிப்பாதை போலவே இருந்தது. ஒரு சிறிய தீப்பெட்டி வாங்குவதானால் கூட ஏறக்குறைய 2 கிலோமீற்றர் நீளமான இந்த சகதிப் பாதையைத் தாண்டித்தான் சாந்தபுரத்து மக்கள் வரவேண்டும்.

ஒரு வழியாக சாந்தபுரம் கலைமகள் வித்தியாலயத்தை வந்தடைந்தோம். வவுனியா அருணாசலம் முகாமின் ஒரு பகுதியைப் பெயர்த்தெடுத்து வந்ததுபோல அந்தப் பாடசாலை வளாகம் காட்சியளித்தது. எங்கும் தறப்பாள் கொட்டில்கள். வெற்று நிலத்தில் சிறு சிறு தடிகளை முட்டுக்கொடுத்து தம்மால் இயன்றளவுக்கு ஒரு வசிப்பிடத்தை அந்த மக்கள் உருவாக்கியிருந்தார்கள். படுக்கையறை, சமையலறை, வரவேற்பறை, சாமியறை எல்லாமே அந்தச் சிறிய - திறந்த வெளியான - கூடாரம் மட்டும்தான். சேற்றின் ஈரம் காய்ந்திராத அந்த மாலைப் பொழுதில் ஈக்கள் மொய்த்துக் கொண்டிருக்க தம்மை மறந்த நிலையில் குழந்தைகள் உறங்கிக் கொண்டிருந்தன. கூடாரங்களின் பக்கத்திலேயே தேங்கி நின்ற அழுக்கு வெள்ளம், கழிவுகள் என்பவற்றின் மீதெல்லாம் மேய்ந்துவிட்டு குழந்தைகளின்மேல் சவகாசமாக உட்கார்ந்து ஓய்வெடுத்துக் கொண்டிருந்த இலையான்கள் எந்தவொரு சுகாதாரப் பரிசோதகர்களின் கண்களுக்கும் இன்னமும் தெரியாமலே இருக்கின்றது. சில வேளைகளில் இடைத்தங்கல் முகாம்களிலுள்ள மக்களுக்கு இந்த இலையான்கள், கழிவுகள், நுளம்புகள் என்பவற்றால் தொற்றுகள் ஏற்படாது என்று சுகாதாரப் பிரிவினர் ஏதேனும் புதிதாகக் கண்டு பிடித்திருக் கிறார்களோ தெரியவில்லை. ஒரு பாடசாலையில் சிறிய வளாகத்தை ஒரு கிராமமே - 281 குடும்பங்கள் - தமக்குரிய வசிப்பிடமாக மாற்றிக் கொண்டிருக்கின்றன. ஆங்காங்கே சிறு குழந்தைகளின் மலக்கழிவுகள் வெள்ளத்தில் நீந்திக் கொண்டிருந்தன. அதை இலட்சியம் செய்யாதவர்களாய் அந்த வெள்ளத்திலேயே காலை வைத்துக் கொண்டு மாபிள் அடிப்பதில் சிறுவர்கள் குறியாக இருந்தார்கள். குடியிருப்புகளுக் கூடாகவும் அவர்களது மாபிள் அடிப்பும், ஒளித்துப் பிடித்து விளையாட்டும் நகர்ந்து கொண்டிருந்தன. சிலர் இரவு நேர உணவுக்கான தயாரிப்புகளில் அந்தக் கூடாரங்களில் ஈடுபட்டிருக் கையில் அவற்றுக்கு மேலெல்லாம் பாய்ந்தடித்தபடி ஓடித் திரிந்து கொண்டிருந்தார்கள். தாய்மாருக்கு இந்த இடையூறு பழக்கப்பட்டுப் போயிருந்த படியால் அவர்கள் தமக்குள்ளேயே முணுமுணுத்துவிட்டு தமது காரியங்களைத் தொடர்ந்தனர். சில வேளைகளில் அன்றைய புட்டுக்குள்ளோ அல்லது இடியப்பத்துக்குள்ளோ சிறுவர்களின் காலடி மண் கூடிடக் கூடும்.

நாம் போனவுடனேயே இதற்காகத் தான் காத்திருந்தவர்கள்போல சாந்தபுரம் மக்கள் சூழ்ந்துகொள்ளத் தொடங்கினர். நாம் என்ன ஏதென்று கேட்காமலேயே தமது குறைகளை ஒவ்வொருவரும் கொட்டத் தொடங்கினர். உரையாடல்கள் இடம்பெற்றுக் கொண்டிருக்கும்போது அங்கிருந்த ஒரு இளைஞர் எமது கைகளைப்பற்றி பின்பக்கமாக அழைத்துச் சென்றார். அவர் எம்மைக் கூட்டிச் சென்ற இடத்தில் முழங்காலளவு உயரத்துக்கு பழைய உணவுகள், உணவின் எச்சங்கள், சிறுகுழந்தைகளின் இயற்கைக் கழிவுகள் எல்லாம் கொட்டப்பட்டுக் கிடந்தன.

''இதுகள சுத்தமா ஒரு இடத்தில போட்டு அகற்றுவதற்கு எந்தவொரு ஏற்பாடும் செய்து தரவில்லை. மழை எண்டபடியால நிலத்தவெட்டி இதுகளைப் புதைக்க முடியாமக் கிடக்கு. ஒரு கழிவு போடுகிற வாளியோ இல்லாட்டி ஒரு பெரிய பெட்டியோ இஞ்ச வைச்சால் இப்படியான மிஞ்சுற சாப்பாட்ட அதுகளுக்குள்ள போடலாம். இப்ப இந்த இடம் மட்டும்தான் ஆக்கள் குடியிருக்காத இடம். அதால இதுல இப்பிடியான கழிவுகளைப் போடுறம். ஆனா நுளம்பும் இலையானும் இந்தக் கழிவுகளில இருந்திட்டு ஆக்களிலயும் வந்திருக்கு. இதால கனபேருக்கு தொற்றுநோய்கள் வரக்கூடிய நிலைமைதான் உருவாகியிருக்கு. இண்டைக்கும் ஒரு 3 வயதுப் பிள்ளைக்கு வயிற்றோட்டம் வந்து ஆஸ்பத்திரிக்கு கொண்டு போட்டினம்'' என்று விளக்கமளித்தவாறு அந்தக் கழிவுக் குவியலை அவர் சுட்டிக் காட்டினார். குடியிருப்புகளுக்கு மிகச் சமீபமாக இருந்த அந்தக் கழிவுக் குவியலால் நிச்சயம் சுகாதாரச் சீர்கேடு ஏற்படலாம். ஆனால் இத்தகைய கழிவுப் பொருள்களை அகற்றுவதற்குரிய உபகரணங்களையோ நடவடிக்கைகளையோ சம்பந்தப்பட்ட எவரும் ஏன் எடுக்காமல் இருக்கிறார்கள் என்பதும் புரியாமலே இருந்தது. [illegible] ஏற்பாடுகள் ஒன்றுமில்லை என்பதற்காக மக்கள் மத்தியில் இவ்வாறான கழிவுக்குவியலை இடைத்தங்கல் முகாம் வாசிகள் ஏற்படுத்தியிருப்பதும் நியாயமா என்றே யோசிக்கத் தோன்றியது. ஏனெனில் குறித்த பாடசாலைக்கு அருகில் ஏராளமான வெறும் வளவுகள் கேட்பார் எவருமற்றுக் கிடக்கின்றன. குடியிருப்புகளுக்கு நடுவே போடும் இந்தக் கழிவுகளை தூரத்திலுள்ள இத்தகைய காணிகளிலாவது போடலாமல்லவா?

''ரண்டுநாளாப் பெய்த மழையால இஞ்சயிருக்கிற



சனங்கள் சரியாச் சீரழிஞ்சு போச்சுதுகள். முள்ளி வாய்க்காலில இருக்கேக்க ஒவ்வொரு வீட்டிலயும் பங்கர் வெட்டிக் கொண்டு இருந்த மாதிரி இப்ப இஞ்ச ஒவ்வொரு கொட்டிலுக்கு முன்னாலையும் வாய்க்கால் வெட்டிக் கொண்டிருக்கிறம். அப்பதான் வெள்ளம் உள்ளுக்க வராமல் வெளியால வழிந்தோடும். தறப்பாளிலேயும் சில வீடுகளில வெடிப்பு இருக்கிறதால ஒழுகவும் செய்யுது'' என்று அந்த இளைஞர் சொல்லிக் கொண்டிருக்கும் போதே சிறு குழந்தையொன்றின் அழுகைச் சத்தம் எங்கள் கவனத்தை ஈர்த்தது.

அப்போதுதான் நித்திரையை விட்டெழுந்த அந்தப் பாலகனின் தலை அவன் எழுந்த வேகத்தில் தறப்பாளில் இருந்த சிறு வெடிப்புக்குள் சிக்கி விட்டது. அதனை எடுக்க முடியாமல் போனதால் வீரிட்டு அழுதுகொண்டிருந்தான் அந்தச் சிறுவன். சிறுவனின் குரல் கேட்டு ஓடிவந்த தாய் அவசர அவசரமாக தறப்பாளை இன்னும் சற்று நீளமாகக் கிழித்துச் சிறுவனை வெளியே கொண்டு வந்தார்.

''இப்பிடித்தான் நெடுகலும். எங்கட பிள்ளைகளுக்கு ஏதாவது ஒண்டு நடந்து கொண்டேயிருக்கு. அதுகளையும் குறைசொல்ல முடியாது. இந்த வயசிலதானே அதுகள் ஓடித்திரிஞ்சு விளையாடுங்கள். இது ஏற்கனவே சின்ன இடம். அதுக்குள்ளயும் 250 வீடுகள். மிச்ச இடத்திலதான் பிள்ளைகள் விளையாட வேணும். நேற்றும் ஒரு சின்னப் பெடியன் ஓடேக்குள்ள விழுந்து வாயில தடி கிழிச்சுப் போட்டுது'' அங்கிருந்த ஒரு முதிய பெண் கூறிவிட்டு, தடி குற்றியதால் காயம் பட்ட சிறுவனை எமக்குக் காண்பித்தார். அவனது மேல் உதடு பிளந்திருந்தது.



தறப்பாளுக்குள் சிக்குண்ட சிறுவன்

மருந்தெதுவும் கட்டவில்லை. தையல் போட்டால்தான் அந்தக் காயம் விரைவில் மாறும்போல தோன்றியது. இதனை அந்தச் சிறுவனின் தாய்க்கும் எடுத்துச் சொன்னோம்.

''மருந்து கட்டுறதெண்டால் இஞ்சயிருந்து கிளிநொச்சி ஆஸ்பத்திரிக்குப் போகோணும். அது ஏலாத காரியம். உந்த வெள்ளத்தைத் தாண்டி என்னெண்டு போய் வாறது? இஞ்ச ஆரும் வந்து இப்பிடியான மருத்துவ சேவை செய்தால் நல்லது. ஆனாலும் மகனுக்கு தையல்போடத் தேவையில்லை. அது மாறிவிடும்'' என்று எமக்குச் சமாதானம் சொன்னார் அந்த அம்மா.

உண்மையில் சாந்தபுரம் கலைமகள் வித்தியாலயத்தில் தங்கியுள்ள மக்களுக்கு மருத்துவ வசதிகளோ சுகாதார சேவைகளோ உரிய முறையில் கிடைக்காமலே இருக்கிறது. ஆகக் குறைந்தது வாரத்தில் இரு முறையாவது வைத்திய நடமாடும் சேவை ஒன்று இவர்களுக்கு வழங்கப்படவேண்டியது அவசியம் என்றே தோன்றுகிறது. தனியே வைத்தியசாலைகளுக்கு வருகின்ற நோயாளிகளுக்கு மட்டுமே மருத்துவ வசதிகளை வழங்குகின்ற நிலையை விடுத்து மக்களின் அவசியத் தேவையை உணர்ந்து சாந்தபுரத்துக்கு நடமாடும் மருத்துவ சேவையை வழங்க உரியவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். இது நமது கோரிக்கை மட்டுமல்லாது அந்த மக்களின் கோரிக்கை யாகவும் இருக்கிறது. (பயணம் தொடரும்)

ஔண்யன் —— தமிழரசன்



நீந்திக் கடக்க வேண்டிய நெடும் பயணம்....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய எல்லையில் பரபரப்பு

## பாக். வசமுள்ள ஆக்கிரமிப்பு காஷ்மீரில் 11 ஆயிரம் சீன ராணுவத்தினர் குவிப்பு

புதுடில்லி, ஓக. 30

**பாகிஸ்தான் வசமுள்ள ஆக்கிரமிப்பு காஷ்மீர் பகுதியில், சீனா 11 ஆயிரம் இராணுவத்தினரைக் குவித்துள்ளது. இதனால் இந்திய எல்லையில் பரபரப்பான சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.**

காஷ்மீர் மாநிலத்தின் ஒரு பகுதியை பாகிஸ்தான் ஆக்கிரமித்து உள்ளது. அந்தப் பகுதி ஆக்கிரமிப்பு காஷ்மீர் பகுதி என அழைக்கப்படுகிறது.

ஏற்கனவே பிரச்சினைகளில் சிக்கித் தவிக்கும் பாகிஸ்தானுக்கு ஆக்கிரமிப்பு காஷ்மீர் பகுதியில் நடைபெறும் போராட்டங்கள் பெரும் தலைவலியாக உள்ளது. இதனால் ஆக்கிரமிப்பு காஷ்மீர் பகுதியை கைகழுவும் நோக்கத்தில் அதைப் படிப்படியாக சீனாவின் கட்டுப்பாட்டில் விட்டுவிட பாகிஸ்தான் தீர்மானித்துள்ளது எனத் தெரிகிறது. அதன் தொடக்கமாக அங்கு சீனா தனது துருப்புகளை நிறுத்த பாகிஸ்தான் அனுமதித்துள்ளது.

அதன்படி, ஆக்கிரமிப்பு காஷ்மீரில் உள்ள ஜில்ஜித்-பல்டிஸ்தான் பிராந்தியத்தில் சீன இராணுவத்தினர் 7 ஆயிரம் முதல் 11 ஆயிரம் பேர் வரை குவிக்கப்பட்டு இருக்கிறார்கள்.

ஜில்ஜித்-பல்டிஸ்தான், சீன எல்லையையொட்டி அமைந்துள்ள பகுதி ஆகும். பூகோள ரீதியாக இந்தப் பகுதி சீனாவுக்கு மிகவும் முக்கியமானது.

ஏற்கனவே இந்திய எல்லையையொட்டிய பகுதியில் மிகப்பெரிய அளவில் வீதி மற்றும் ரயில் தண்டவாளம் அமைக்கும் பணிகளை சீனா மேற்கொண்டுள்ளது. அதன் தொடர்ச்சியாக ஜில்ஜித் பல்டிஸ்தான் பகுதியிலும் நவீன வீதி மற்றும் ரயில் தண்டவாளம் அமைக்க சீனா விரும்புகிறது.

ஜில்ஜித் பல்டிதானில் வீதி மற்றும் தண்டவாளம் அமைத்து விட்டால் அந்த இடங்களுக்கு பீஜிங்கில் இருந்து சரக்குகளையும், கிழக்கு சீனாவில் இருந்து எண்ணை டேங்கர்களையும் 48 மணி நேரத்தில் கொண்டு சென்றுவிட முடியும்.

மேலும் ஜில்ஜித்-பல்டிஸ்தான் பகுதியில் பூமிக்கு அடியில் 22 இடங்களில் குகைப்பாதைகளை அமைக்கும் பணியிலும் சீனா ஈடுபட்டுள்ளது. அந்த இடத்துக்குச் செல்ல பாகிஸ்தானியர்களுக்கு கூட அனுமதி கிடையாது. ஈரானில் இருந்து குழாய் மூலம் கியாஸ் கொண்டு செல்ல அந்த குகைப்பாதைகள் அமைக்கப்படுவதாகக் கூறப்பட்டாலும், ஏவுகணைகளை சேமித்து வைக்க அவற்றை சீனா பயன்படுத்தக்கூடும் என்றும் கருதப்படுகிறது.

மேற்கண்ட தகவல்களை 'நியோர்க் டைம்ஸ்' பத்திரிகை வெளியிட்டுள்ளது.

ஆக்கிரமிப்பு காஷ்மீர் பகுதியில் சீனா தனது துருப்புகளைக் குவித்து வருவதால், இந்திய எல்லைப் பகுதியில் பரபரப்பான சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

## பஸ் படிக்கட்டில் பயணித்த 4 மாணவர்கள் பரிதாபச் சாவு

சேலம், ஓக. 30

சேலம் மாவட்டம் ஆத்தூர் அருகே பஸ் படிக்கட்டில் பயணம் செய்த கல்லூரி மாணவர்கள் 4 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

விழுப்புரம் மாவட்டத்தைச் சேர்ந்த ஏராளமான மாணவர்கள் ஆத்தூர் பகுதியில் உள்ள பாடசாலை, கல்லூரிகளில் படித்து வருகின்றனர். இவர்களில் சிலர் வார விடுமுறைக்காக சனிக்கிழமை மாலை ஆத்தூரில் இருந்து கள்ளக்குறிச்சி சென்ற தனியார் பஸ்ஸில் ஊருக்குப் புறப்பட்டனர்.

பஸ்ஸில் அதிகளவில் கூட்டம் இருந்ததால் மாணவர்கள் பஸ் படிக்கட்டில் பயணம் செய்தனர். கல்லூரி பஸ் நிறுத்தத்தில் இருந்து மாணவர்களை ஏற்றிச் சென்ற அந்தத் தனியார் பஸ் தேவியாக்குறிச்சி ரயில்வே கேற் அருகே சென்றபோது, ஆத்தூரில் இருந்து கள்ளக்குறிச்சி நோக்கிச் சென்று கொண்டிருந்த ஒரு லொறியை முந்திச் செல்ல முயன்றது.

அப்போது எதிர்பாராதவிதமாக பஸ் படிக்கட்டில் பயணம் செய்த மாணவர்கள் மீது லொறி உரசிச் சென்றது. இந்த விபத்தில் தேவியாக்குறிச்சி தனியார் கல்லூரியில் படித்து வந்த 4 மாணவர்கள் பரிதாபமாக உயிரிழந்தனர்.

## ஜெயலலிதாவுக்கு கொலைமிரட்டல்!

சென்னை, ஓக. 30

மதுரை பொதுக்கூட்டத்தை ஜெயலலிதா ரத்துச் செய்ய வேண்டும் - என்று ஜெயா ரி.விக்கு மிரட்டல் கடிதம் வந்துள்ளது.

இதுகுறித்து ஜெயா ரி.வி. துணைத் தலைவர் ரங்கராஜன், பொலிஸ் டி.ஜி.பி. லத்திகா சரணுக்கு அனுப்பியுள்ள முறைப்பாட்டில் கூறியிருப்பவை வருமாறு -

சென்னை ஈக்காடுதாங்கலில் உள்ள ஜெயா ரி.வி. அலுவலகத்திற்கு நேற்று (28 ஆம் திகதி) மிரட்டல் கடிதம் ஒன்று வந்தது. கடிதத்தில், மதுரை கூட்டத்தை ஜெயலலிதா ரத்து செய்ய வேண்டும்; இல்லையெனில் ஜெயலலிதாவும், அவ ரது கூட்டத்தினரும் மதுரையில் கொடூரமாக குண்டு வைத்து கொல்லப்படுவார்கள். சாவதற்கு மதுரைக்குப் போங்கள். இதை நேரடியாக ஒளிபரப்ப ஜெயா ரி.வி. மதுரைக்கு வரவும். 'அண்ணனை பகைக்காதே; மதுரைக்கு வராதே; ஜெயாவை ஒழித்துக் கட்டுவோம்' எனக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, ஜெயலலிதாவுக்கும், ஜெயா ரி.வி. மற்றும் அதன் ஊழியர்களுக்கும் உரிய பாதுகாப்பு அளிக்க வேண்டும்.

- இப்படி அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



## தமிழகத்தில் காங். ஆட்சிக்கு வருவது இலகு என்கிறார் பிரணாப் முகர்ஜி

சென்னை, ஓக. 30

தமிழகத்தில் காங்கிரஸ் ஆட்சி வருவது மிக இலகுவான விடயம். ஆட்சியில் தற்போது இல்லையென்றாலும், மக்கள் சேவையில் நாம் எப்போதும் ஈடுபட்டுக் கொண்டிருந்தால் தமிழகத்தில் காங்கிரஸ் ஆட்சிக்கு வரும் - என்று மத்திய நிதியமைச்சர் பிரணாப் முகர்ஜி பேசினார்.

கோவை மத்திய சிறைச்சாலை மைதானத்தில் காங்கிரஸ் கட்சியின் பொதுக்கூட்டம் கடந்த சனியன்று மாலை நடைபெற்றது.

இதில் பேசிய மத்திய நிதியமைச்சர் பிரணாப் முகர்ஜி மேலும் கூறியவை வருமாறு -



இந்தியாவில் வளர்ச்சி ஏற்பட்டுள்ளதா எனக் கேட்கிறார்கள். இந்தியாவில் வளர்ச்சி என்பது லட்சக் கணக்கான இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுத்திருக்கிறோம். லட்சக் கணக்கான மாணவர்களுக்கு கல்விக் கடனைக் கொடுத்திருக்கிறோம். இந்தியாவை அடுத்த கட்ட நிலைக்கு கொண்டு சென்றுள்ளோம். இதுதான் இந்தியாவின் வளர்ச்சி.

4 கோடி விவசாயிகளுக்கு 70 ஆயிரம் கோடி ரூபா கடன் ப.சிதம்பரத்தால் தள்ளுபடி செய்யப்பட்டு, விவசாயிகளின் நிலை உயர்த்தப்பட்டுள்ளது. மகாத்மா காந்தி உறுதிமொழி ஒன்றைக் கொடுத்திருந்தார். அது ஏழைகளுக்கு எப்போதும் உதவ வேண்டும் என்பதையே மக்களுக்கு உறுதிமொழியாக எடுத்துக்கொள்ளச் செய்தார். அதைத்தான் நம் காங்கிரஸும் செய்துக்கொண்டிருக்கிறது. தமிழகத்தில் 40 வருடங்களாக காங்கிரஸ் ஆட்சியில் இல்லாமல் போய்விட்டது. காங்கிரஸ் தமிழகத்தில் ஆட்சி செய்கின்ற நிலை வர வேண்டும். அதற்கான முயற்சிகளை காங்கிரஸ் கட்சியினர் பலம் கொண்டு முன்னெடுக்க வேண்டும்.

ஆட்சியில் தற்போது இல்லையென்றாலும், மக்கள் சேவையில் நாம் எப்போதும் ஈடுபட்டுக் கொண்டிருந்தால், தமிழகத் தில் காங்கிரஸ் ஆட்சி வருவது மிக மிகஎளிதானவிடயம்.

- இப்படி அவர் கூறினார்.

## தமிழகத்தில் காங்கிரஸுக்கு அதிகாரம் அளிக்கும் கட்சியோடுதான் கூட்டணி!

சென்னை, ஓக. 30

தமிழகத்தில் வரும் தேர்தலுக்குப் பின்னர் நிச்சயமாக ஆட்சி அதிகாரத்தில் காங்கிரஸுக்கு அதிகாரம் அளிக்கக் கூடிய கட்சியோடுதான் கூட்டணி அமைக்கப் போகிறோம். அதைத்தான் இங்குள்ள மக்களும் எதிர்பார்க்கிறார்கள். தமிழகத்தில் அடுத்த முறை அமையும் கூட்டணி நாம் அதிகாரம் செலுத்தக் கூடிய கூட்டணியாகவே இருக்க வேண்டும்.

- இவ்வாறு மத்திய உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம் தெரிவித்துள்ளார்.

கோவை சிறைச்சாலை மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற சி.சுப்பிரமணியம் நூற்றாண்டு விழாப் பொதுக்கூட்டத்தில் மேலும் அவர் பேசியவை வருமாறு -

தமிழகம் மற்றும் இந்திய வரலாற்றில் 1950 - 1970 வரையிலான காலகட்டத்தை சி.சுப்பிரமணியத்தைத் தவிர்த்துவிட்டு எழுத முடியாது. இவரைவிட நேருவுக்கு 21 வயது அதிகம். இவருடைய ஆலோசனைகளை நேரு கேட்டார் என்பதில் இருந்தே சி.எஸ்.சின் பெருமை தெரியும்.

ராஜாஜிக்கு பின்னர் தமிழக முதல்வர் பதவிக்கு வர காமராஜருக்கும், இவருக்கும் இடையே போட்டி ஏற்பட்டது. காமராஜர் முதல்வரானார். சி.எஸ். போட்டியில் தோற்றார். ஆனாலும், சி.எஸ்ஸை காமராஜர் தமது அமைச்சரவையில் சேர்த்து நிதி மற்றும் கல்வித் துறையை இவரிடம் ஒப்படைத்தார். கல்விக்கு கண் திறந்தவர் காமராஜர் என்பது அனைவருக்கும் தெரியும். அதற்கு கருவியாக இருந்து செயலாக்கம் கொடுத்தவர் சி.எஸ். தமிழகம் இன்று கல்வித் துறையில் முதன்மை பெற்ற மாநிலமாகத் திகழ்கிறது. இதற்கு அடித்தளம் அமைத்தவர் காமராஜர்.

காங்கிரஸ் கட்சியால் இந்தியாவை ஆட்சி செய்ய முடிகிறது. ஆனால் தமிழகத்தில் காங்கிரஸ் மீண்டும் ஆட்சிக்கு வரவில்லையே என்ற ஆதங்கம் காங்கிரஸ் தொண்டர்களுக்கு உள்ளது. இந்த ஆதங்கம் 1969 ஆம் ஆண்டில் இளைஞர் காங்கிரஸில் இணைந்த காலத்திலிருந்து எனக்கும் உள்ளது. ஈ.வி.கே.எஸ். இளங்கோவன், ஜி.கே.வாசன், மாநில காங்கிரஸ் கமிட்டித் தலைவர் தங்கபாலு உள்ளிட்ட அனைத்துத் தலைவர்களுக்கும் இந்த ஆதங்கம் உள்ளது.

மக்கள் கூட்டணி ஆட்சியையே விரும்புகின்றனர். தனிப்பட்ட ஒரு கட்சியை முழுமையாக நம்ப மக்கள் தயாராக இல்லை. இந்தியாவில் கடந்த 20 ஆண்டுகளாக கூட்டணி ஆட்சிதான் நிலவுகிறது. தமிழகத்திலும் கூட்டணிதான் வெற்றிபெறும். அது காங்கிரஸ் கூட்டணியாக இருக்கும். அடுத்த தேர்தலுக்கு பின்னர் அமையும் அரசு, காங்கிரஸ் கட்சிக்கு இடம் தரும் அரசாக இருக்கும்.

- இப்படி அவர் தெரிவித்தார்.

மத்திய அமைச்சர் ஜி.கே.வாசன், முன்னாள் அமைச்சர்கள் ஈ.வி.கே.எஸ்.இளங்கோவன், ஆர்.பிரபு ஆகியோரும் அவர்களது ஆதரவாளர்களும் பொதுக்கூட்டத்தைப் புறக்கணித்தனர். பிரபுவின் ஆதரவாளரும், கோவை மேயருமான ஆர். வெங்கடாசலம் விமான நிலையத்தில் நிதியமைச்சர் பிரணாப் முகர்ஜி வரவேற்பு நிகழ்ச்சியில் மட்டும் பங்கேற்றுவிட்டு சென்றுவிட்டார்.

**இந்தியச் செய்திகள்**

## சீமானை விடுதலை செய்ய வலியுறுத்தி கனடாவில் மாணவர் சமூகம் போராட்டம்

சென்னை, ஓக. 30

சீமானை விடுதலை செய்யக்கோரி கனேடிய தமிழ் சமூகம் மற்றும் கனேடிய மாணவர் சமூகம் இணைந்து நடத்திய அமைதி வழிப் போராட்டம் கடந்த வெள்ளிக்கிழமை செர்போர்ன் மற்றும் ப்ளோர் சந்திப்பில் உள்ள இந்திய துணைத் தூதராலயத்துக்கு முன்னால் நடைபெற்றது.

பிற்பகல் இரண்டு மணிக்கு ஆரம்பமாகிய இந்தப் போராட்டம் ஏழு மணிவரை தொடர்ந்தது. இந்தப் போராட்டத்தில் முக்கியமாக மூன்று கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

கைதுசெய்யப்பட்டுள்ள தமிழ் உணர்வாளர் சீமானை விடுதலை செய்யக்கோரியும், இலங்கைக் கடற்படையால் அநியாயமாகக் கொல்லப்படும் தமிழ்நாடு மீனவர்களின் கொலைகளைத் தடுத்து நிறுத்தக் கோரியும், இலங்கையில் நடைபெறும் போர்க் குற்றவியல் விசாரணைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கக்கோரியும் இந்தப் போராட்டத்தில் கலந்துகொண்ட மக்கள் பதாகைகளை ஏந்தியிருந்தனர்.

இவை தவிர இலங்கையில் தமிழ் மக்களுக்கு எதிராக நடத்தப்பட்ட இனப்படுகொலைக்கு ஆதரவாக இருந்த இந்திய அரசையும் தமிழ்நாடு அரசையும் கண்டிக்கும் பதாகைகளும் அங்கு வந்திருந்த மக்கள் ஏந்தியிருந்தனர்.

இதில் கலந்துகொண்ட சிலர் இலங்கையின் போர்க்குற்றங்கள் தொடர்பான செய்திகள் உள்ள துண்டுப்பிரசுரங்களை அந்த வழியாகச் சென்றுகொண்டிருந்த வேற்றின மக்களுக்கு விநியோகித்தார்கள்.

## ஈழத் தமிழர்களுக்காகத் தீக்குளித்த முத்துக்குமார் பற்றிய ஆவணப்படம்




இலங்கையில் நடைபெற்ற போரை தடுத்து நிறுத்தக் கோரி, தன்னுயிரை மாய்த்துக் கொண்ட முத்துக்குமார் பற்றிய ஆவணப் படம் 'ஜனவரி 29' என்கின்ற பெயரில் உருவாகியுள்ளது.

இந்த ஆவணப் படத்தின் வெளியீட்டு விழா நேற்று 29 ஆம் திகதி சென்னை அண்ணா வீதியிலுள்ள பிலிம் சேம் பர் திரையரங்கில் நடைபெற்றது. இந்த விழாவில் திரைப் பட இயக்குநர் அமீர் கலந்து கொண்டு படத்தை வெளியிட்டார். முத்துக்குமாரின் தந்தை குமரேசன் பெற்றுக் கொண்டார்.

இயக்குநர்கள் சுந்தரராஜன், ஆர்.கே.செல்வமணி, புகழேந்தி தங்கராசு, கவிஞர் அறிவுமதி, கவிஞர் தாமரை, எழுத்தாளர் பாலமுரளி வர்மன் ஆகியோர் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனேடிய நாடாளுமன்றத்தை குண்டு வைத்துத் தகர்க்கச் சதி

## 3 தீவிரவாதிகள் மீதான விசாரணை நீடிப்பு

டொரன்டோ, ஓக. 30

கனடா நாடாளுமன்றத்தை குண்டு வைத்து தகர்க்க தீவிரவாதிகள் திட்டமிட்டிருந்தமை விசாரணையில் தெரிய வந்துள்ளது.

கனடாவில் குண்டு வெடிப்புகளை நிகழ்த்த சதித் திட்டம் தீட்டினர் என ஹிவா அலி ஐதே, மிஸ்பாகுதீன் அகமது, குர்ரம் செய்யது ஷெர் ஆகிய மூன்று தீவிரவாதிகளை, கனடா பொலிஸார் கைது செய்தனர்.

இவர்களில் மிஸ்பாகுதீன் அகமது இந்தியாவில் பிறந்தவர். முதற்கட்ட விசாரணையில் அல்-குவைதா இயக்கத்துடன் இவர்கள் மூவருக்கும் நெருங்கிய தொடர்புள்ளமை தெரியவந்துள்ளது.

மேலும், ஹிவா அலி, ஆப்கானிஸ்தானிலும், பாகிஸ்தானிலும் பயங்கரவாதப் பயிற்சிப் பெற்றுள்ளார். அந்தக் கும்பலின் தலைவராகவும் செயல்பட்டுள்ளார்.


மூவரிடமும் பொலிஸார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர். இதில், பல திடுக்கிடும் தகவல்கள் வெளியாகியுள்ளன. இது தொடர்பாக கனடா பொலிஸ் துறை அதிகாரிகள் குறிப்பிடுகையில், ''கைது செய்யப்பட்ட மூன்று தீவிரவாதிகளும் பொலிஸ் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்'' என்றனர்.

'விசாரணையில் நாடாளுமன்றக் கட்டடம், மான்ட்ரியல் சுரங்கப்பாதை உள்ளிட்ட முக்கிய இடங்களில் குண்டு வைக்க இவர்கள் திட்டமிட்டிருந்தமை தெரியவந்துள்ளது'' என்றும் அவர்கள் குறிப்பிட்டனர்.

''ஆப்கானிஸ்தானில் செயல்படும் பயங்கரவாத குழுக்கள் மூலமாக டெட்டனேட்டர் போன்ற வெடிகுண்டு தயாரிக்கப் பயன்படும் பொருட்களை இவர்கள் வாங்கியுள்ளனர். இந்தச் சதித் திட்டத்தில் மேலும் எட்டு பேருக்குத் தொடர்புண்டு என்பதும் தெரியவந்துள்ளது. அவர்களை பிடிக்க, நாடு முழுவதும் தேடுதல் வேட்டை நடந்து வருகிறது'' என்றும் அதிகாரிகள் கூறினர்,

இதற்கிடையே, பயங்கரவாத நடவடிக்கையில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டின் பேரில் மேலும் ஒருவரை, கனடா பொலிஸார் கைதுசெய்தனர். பின்னர் போதிய ஆதாரங்கள் இல்லாததால் அவரை விடுவித்தனர்.

## உலக அரங்கில்



பிரிட்டிஷ் பிரதமர் டேவிட் கெமரூன் புதிதாகப் பிறந்துள்ள தமது மகளுக்கு ஆசை முத்தம் கொடுக்கிறார். அவரது மகளுக்கு புளோரன்ஸ் ரோஸ் என்டலியன் கெமரூன் எனப் பெயரிடப்பட்டுள்ளது.

## வெனிசூலா விமான விபத்தில் அதிகாரிகள் உட்பட 11 பேர் பலி!

கராகஸ், ஓக. 30

வெனிசூலா அரசுக்குச் சொந்தமான ஹெலிக்கொப்டர் ஒன்று கொலம்பிய எல்லைப்பகுதியில் விபத்துக்குள்ளானது.

வெனிசூலாவின் தென்மேற்குப் பகுதியிலுள்ள அப்யூர் மாகாணத்தில் போதைப் பொருள் விற்பனை செய்யும் கும்பலை பிடிப்பதற்காக அரசு அதிகாரிகள், பாதுகாப்புப் படையினர் உட்பட 10 பேர் கொண்ட குழுவினர் ரஷ்யாவின் தயாரிப்பான மி-17 ரக ஹெலிக்கொப்டரில் பயணம் செய்தனர். அப்போது கொலம்பியாவின் எல் லைப்பகுதியிலுள்ள பியூனா விஸ்டா நகரத்திலுள்ள மெட்டா ஆற்றுப்படுகை அருகே எதிர்பாராதவிதமாக விபத்தில் சிக் கியது. இதில் பயணம் செய்த அரசு அதிகாரிகள் 3 பேர், பாதுகாவலர்கள் ஏழு பேர் வரை பலியாயினர்.

இத்தகவலை ஜனாதிபதி ஹூகோசாவெஸ் தெரிவித்துள்ளார்.

# மோனலிசாவின் மயக்கும் புன்னகை: மர்மம் ஆய்வாளர்களால் கண்டுபிடிப்பு

லண்டன், ஓக. 30

லியானர்டோ டாவின்சியின் புகழ் பெற்ற ஓவியமான மோனலிசாவின் மயக்கும் புன்னகையின் காரணத்தை, ஒருவழியாக ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்து விட்டனர்.

இத்தாலியின் புகழ் பெற்ற ஓவியர் லியானர்டோ டாவின்சி. அவரது மோனலிசா உள்ளிட்ட பல்வேறு ஓவியங்கள் இன்றும் உலகப்புகழ் பெற்றவையாகத் திகழ்கின்றன.

அவற்றில் மோனலிசா ஓவியத்தில் அதன் புன்னகை, உலகை இன்றும் ஆச்சரியத்தில் மூழ்கடித்து வருகிறது. அதற்குக் காரணம், அந்த ஓவியத்தை நேருக்கு நேராகப் பார்க்கும்போது அது புன்னகைப்பதாகத் தெரியாது.

ஆனால், சற்றே ஒரு பக்கத்தில் இருந்து பார்த்தால் பார்ப்பவரை நோக்கி மோனலிசா புன்னகைப்பதாகத் தெரியும். இந்தத் தோற்றத்துக்குப் பல்வேறு காரணங்கள் கூறப்பட்டாலும், மோனலிசாவின் புன்னகையை டாவின்சி எப்படி தன் கைவண்ணத்தில் கொண்டு வந்திருப்பார் என்பதைக் கண்டறிய முடியவில்லை.

அதற்காகப் பல்வேறு ஆராய்ச்சிகளும் மேற்கொள்ளப்பட்டன. சமீபத்தில் அந்த ஓவியத்தின் மீது 'எக்ஸ்ரே' கதிர்கள் செலுத்தப்பட்டு அதன் தன்மை ஆராயப்பட்டது.

அதன் அடிப்படையில் சில உண்மைகள் தெரியவந்துள்ளன. அதன்படி, இத்தாலியில் டாவின்சி காலத்தில் மூன்று விதமான அடிப்படையில் ஓவியங்கள் வரையப்பட்டு வந்தன.

அவற்றில் 'ரினையசன்ஸ்' என்ற அடிப்படையில், பல்வேறு நுணுக்கமான வண்ணங்களைக் கலந்து ஒருவித தெளிவற்ற தோற்றத்தின் மூலம், தான் நினைத்ததை ஓவியக் கலைஞர் கொண்டு வருவார். அதற்கு இத்தாலி மொழியில் 'புமாட்டோ' என்று பெயர். இந்த புமாட்டோ முறையைப் பயன்படுத்தித்தான் டாவின்சி, மோனலிசாவின் புன்னகையை உருவாக்கியுள்ளார்.

மேலும், மோனலிசாவின் இதழ்களின் மீது பல்வேறு வண்ணங்களை 40 அடுக்குகளாகப் பதிவு செய்துள்ளார். அதுவும் மயக்கும் புன்னகைக்கு ஒரு காரணம்.

''இப்படி 40 அடுக்குகளாகப் பளபளக்கும் முறையில் வண்ணங்களைக் குழைத்துப் பூசும் பட்சத்தில், அந்த இடம் பல மாதங்களாகக் காய வைக்கப்பட்டிருக்கும். இதனால் இந்த ஓவியம் பல ஆண்டுகளாகத் தொடர்ந்த முயற்சியில் உருவாக்கப்பட்டிருக்கலாம்'' என்று ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர்.

மேலும், அந்தப் புன்னகை இருக்கும் இடத்தில் மட்டும் டாவின்சி, தூரிகையைப் பயன்படுத்தாமல் தன் கைவிரல்களைப் பயன்படுத்தியுள்ளதும் 'எக்ஸ்ரே' ஆராய்ச்சியில் தெரியவந்துள்ளது.

இப்போது இந்த முறையை, டாவின்சி தன் பிற ஓவியங்களிலும் பயன்படுத்தியிருக்கிறாரா என்பது குறித்தும் ஆராய்ச்சி நடந்து வருகிறது.

# பாகிஸ்தானில் பெரு வெள்ளம்: 10 இலட்சம் மக்கள் உயிரிழப்பு!

இஸ்லாமாபாத், ஓக. 30

பாகிஸ்தானில் சிந்து நதியில் கடந்த ஒரு மாதமாக ஏற்பட்டுள்ள வெள்ளப் பெருக்கால் பாரியளவில் சேதம் ஏற்பட் டுள்ளது.

இதுவரை வெள்ளத்துக்கு 1,600 பேர் பலியாயினர் என்றும் 20 இலட்சம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் ஐ.நா.சபை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கடந்த 3 நாட்களில் ஏற்பட்ட வெள்ளத்தில் மட்டும் 10 இலட்சம் பேர் வீடுகளை இழந்து தவிக்கிறார்கள்.

தெற்குப் பாகிஸ்தானில் சிந்து நதியில் பல இடங்களில் உடைப்பு ஏற்பட்டதில், தட்டா நகரத்திலுள்ள 3 இலட்சம் பேரில் ஒரு லட்சம் பேர் பாதுகாப்பான பகுதிகளுக்கு இடம்பெயர்ந்துள்ளனர். மேலும் பல நகரங்களுக்கு வெள்ள ஆபத்து ஏற்பட்டுள்ளது.

# மைக்கல் ஜக்ஸனின் இரு குழந்தைகள் முதன்முறையாக பாடசாலையில் அனுமதி

லொஸ் ஏஞ்சலஸ், ஓக. 30

மறைந்த பொப் இசைப் பாடகர் மைக்கல் ஜக்ஸனின் இரண்டு குழந்தைகள் முதன் முறையாக பாடசாலைக்குச் சென்று படிக்கத் ஆரம்பித்துள்ளனர்.

பொப் இசை உலகின் முடிசூடா மன்னனாகவிருந்த மைக்கல் ஜக்ஸனுக்கு பிரின்ஸ் மைக்கேல்(வயது - 13), பாரிஸ் ஜக்ஸன் (வயது - 12), பிளாங்கெட்(வயது 8) என மூன்று குழந்தைகள்.

இவர்களை வெளியுலகுக்குக் காட்டாமல் மைக்கல் ஜக்ஸன் மிகவும் இரகசியமாக வளர்த்து வந்தார். மூவரையும் பாடசாலைக்கு அனுப்பாமல் வீட்டிலேயே ஆசிரியரை நியமித்து பாடம் கற்றுக் கொடுத்தார்.

இந்நிலையில், கடந்த ஆண்டு ஜூன் மாதம் மைக்கல் ஜக்ஸன் திடீரென மரணமடைந்தார். அவருடைய குழந்தைகள் மூவரும் தற்போது ஜக்ஸனின் தாயார் கேத்தரின் பராமரிப்பில் உள்ளனர்.

கடந்த ஜூன் மாதம், தொலைக்காட்சி ஒன்றுக்குப் பேட்டி அளித்த கேத்தரின், ''ஜக்ஸனின் மூத்த குழந்தைகள் இருவரையும் பாடசாலைக்கு அனுப்ப திட்டமிட்டுள்ளேன். சமுதாய அனுபவங் களைப் பெறுவதற்கும், உலக நடப்புகளை அறிந்து கொள்வதற்கும் அவர்களை பாடசாலையில் சேர்க்க உள்ளேன்'' எனக் கூறியிருந்தார்.

இந்நிலையில் கலிபோர்னியாவிலுள்ள பிரபல தனியார் பாடசாலையொன்றில் , பிரின்ஸும், பாரிசும் சமீபத்தில் சேர்ந்தனர். கடந்த புதன்கிழமை அவர்கள் இருவரும் முதன்முறையாக பாடசாலைக்குச் சென்று தங்களது பாடசாலை படிப்பை ஆரம்பித்தனர்.

இந்த பாடசாலையில் நடிகர் மேத்யூ பெரி உட்பட பல பிரபலங்கள் படித்துள்ளனர். ஆனால், மைக்கல் ஜக்ஸனின் மூன்றாவது குழந்தையான பிளாங்கெட் தற்சமயம் வீட்டிலேயே ஆசிரியர் மூலம் கல்வி கற்பார் என கேத்தரின் தெரிவித்துள்ளார்.

# 34 ஆண்டுகளுக்குப் பின்னர் தாயை கண்டுபிடித்த புதல்வனும் புதல்வியும்!

லண்டன், ஓக. 30

கடந்த 34 ஆண்டுகளுக்கு முன் காணாமல் போன பிள்ளைகள் இருவர், இணையதளத்தின் உதவியால் தற்போது தங்கள் தாயாரைக் கண்டுபிடித்து, ஒன்று சேர்ந்துள்ளனர்.

அமெரிக்கா, நியூயோர்க்கைச் சேர்ந்த விக்கி ரோரிங் என்ற பெண், கடந்த 1976 இல் தனது மகன் ஸ்காட், மகள் கரென் ஆகிய இரண்டு பேரையும், தனது முன்னாள் கணவர் ஜிம்மி பிளாக் வீட்டிற்கு அனுப்பி வைத்தார்.

ஆனால், அடுத்த சில மணி நேரத்திலேயே தனது குழந்தைகள் இருவரும் கார் விபத்தில் இறந்துவிட்டனர் என ரோரிங்குக்கு தொலைபேசி அழைப்பு வந்தது. கார் மண்ணில் புதையுண்டதால், உடல்கள் கிடைக்கவில்லை என்றும் தகவல் தெரிவிக்கப்பட்டது.

இதனால், ரோரிங் அதிர்ச்சியடைந்தார். ஆனால், உண்மையில் நடந்தது வேறு. ரோரிங்கின் முன்னாள் கணவர் ஜிம்மி, பிள்ளைகள் இருவரையும் மறைத்து வைத்துக் கொண்டு, விபத்தில் இறந்துவிட்டனர் என பொய் சொல்லிவிட்டார்.

பின்னர் பிள்ளைகளிடம், அவர்களது தாயாரைப் பற்றி தவறான தகவல்களைக் கூறியுள்ளார். ரோரிங் இறந்திருக்கலாம் என்றும் அல்லது வெளிநாட்டில் எங்காவது வாழ்ந்து கொண்டிருக்கலாம் என்றும் கூறினார்.

ஸ்காட்டும், கரெனும் தனது தாய் உயிருடன் இருக்கிறார் என்றும், அவரைச் சந்திக்கவேண்டும் என்றும் எண்ணினர்.

இவர்கள் தங்களது நண்பர்களின் உதவியுடன் இணையதளங்களில் விளம்பரம் செய்தனர். தனியார் துப்பறியும் நிறுவனத்தையும் அணுகினர். அவர்களின் முயற்சிக்குப் பலன்கிடைத்தது. இணையதளம் மூலம் ஸ்காடும், கரெனும் தனது தாயார் ரோரிங்குடன் 34 ஆண்டுகளுக்குப் பின்னர் இணைந்துள்ள னர். ஸ்காட்டுக்கு தற்போது 41 வயது. கரெனுக்கு வயது 39.

தற்போது 63 வயதாகும் ரோரிங் தனது பிள்ளைகளுடன் ஒன்றுசேர்ந்ததுடன், கொள்ளுப் பேரன்களையும் கொஞ்சிக் கொண்டிருக்கிறார்.

இதுகுறித்து, ரோரிங் குறிப்பிடுகையில்,''என் பிள்ளைகள் விபத்தில் இறந்துவிட்டனர் என்பதை நான் நம்பவில்லை. அவர்கள் உயிருடன்தான் இருப்பர் என்று உள்மனது நம்பியது. அதுதான், இன்று வரை என்னை உயிருடன் வாழ வைத்துக் கொண்டிருந்தது'' என்றார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மாரிகாலம் தொடங்குவதற்கு முன்னரே வன்னி மக்களுக்கு வீடு கட்டிக்கொடுங்கள்!

## இலங்கையிடம் இந்தியா வலியுறுத்து

சென்னை, ஓக. 30

மாரிகாலம் தொடங்குவதற்கு முன்பாகவே ஈழத் தமிழர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்குமாறு இலங்கை அரசை இந்தியா வலியுறுத்தியுள்ளது - என்று மத்திய நாடாளுமன்ற விவகாரத்துறை இணை அமைச்சர் நாராயணசாமி தெரிவித்துள்ளார்.

இலங்கைத் தமிழர்களுக்கு மறுவாழ்வு அளிப்பதையே இந்திய அரசு முக்கிய கொள்கையாகக் கொண்டு செயற்படுகிறது என்றும் அவர் கூறியுள்ளார்.

புதுச்சேரியில் செய்தியாளர்களிடம் பேசியபோதே அமைச்சர் நாராயணசாமி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அப்போது அவர் மேலும் கூறியவை வருமாறு -

இலங்கையில் உள்ள தமிழர்களின் மறுவாழ்வுக்குத் தேவையான பணிகளை இந்திய அரசு அந்நாட்டுடன் சேர்ந்து எடுத்து வருகிறது. நிவாரணப் பணிகள் சிறப்பாக நடைபெறுகின்றனவா என்பதையும் மத்திய அரசு கவனித்து வருகிறது.

இலங்கையில் தமிழர்களின் மீள்குடியேற்றம் செய்யும் இடங்களில் இந்திய அரசு 500 கோடி ரூபா செலவில் சுமார் 50 ஆயிரம் வீடுகளைக் கட்டிக் கொடுக்கவுள்ளது. இலங்கைத் தமிழர்களுக்கு மறுவாழ்வு அளிப்பதையே இந்திய அரசு முக்கிய கொள்கையாக கொண்டு செயற்படுகிறது. மழைக்காலம் தொடங்குவதற்கு முன்பாகவே இலங்கைத் தமிழர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்குமாறு அந்நாட்டு அரசை இந்தியா வலியுறுத்தியுள்ளது.

- இப்படி அவர் தெரிவித்தார். (ஒ-சி)

## மேர்வினுக்கு எதிரான விசாரணை பூர்த்தி

கொழும்பு, ஓக. 30

நாடாளுமன்ற உறுப்பினர் மேர்வின் சில்வா, சமுர்த்தி அதிகாரி ஒருவரை மரத்தில் கட்டிவைத்த சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்துவதற்காக நியமிக்கப்பட்ட குழு சாட்சிகளிடம் இருந்து வாக்குமூலங்களைப் பதிவுசெய்து முடித்துள்ளது.

வாக்குமூலங்களை அடிப்படையாக வைத்து இந்த விசாரணைக் குழு இறுதி அறிக்கையைத் தயாரிக்கும் என்று விசாரணைக் குழுவின் பேச்சாளர் தெரிவித்தார். இறுதி அறிக்கை அடுத்த வாரம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் சமர்ப்பிக்கப்படும் என்று அந்தப் பேச்சாளர் மேலும் கூறினார். (ஒ-சி)

# நல்லூர் மணி மண்டபத்தில் நாளை நாவலர் திருவுருவச் சிலை பிரதிஷ்டை

யாழ்ப்பாணம், ஒக.30

நல்லூர் நாவலர் கலாசார மண்டபத்தினுள் வைக்கப்பட்டிருக்கும் நாவலர் பெருமானின் திருவுருவச் சிலை, நாளை செவ்வாய்க்கிழமை நல்லூர்க் கந்தன் ஆலயச் சூழலில் உள்ள நாவலர் மணி மண்டபத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு பிரதிஷ்டை செய்யப்படவுள்ளது.

இது தொடர்பாக யாழ்.மாநகர மேயர் திருமதி யோ.பற்குணராசா வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

நல்லூர் நாவலர் கலாசார மண்டபத்தினுள் வைக்கப்பட்டிருக்கும் நாவலர் பெருமானின் திருவுருவச் சிலை நாளை செவ்வாய்க்கிழமை காலை 7 மணியளவில் அங்கிருந்து ஊர்வலமாக நாவலர் வீதி, கோயில் வீதி மற்றும் பருத்தித்துறை வீதியூடாக நல்லூர் ஆலயச் சூழலிலுள்ள நாவலர் மணிமண்டபத்திற்கு எடுத்துவரப்பட்டு அங்கு பிரதிஷ்டை செய்யப்படவுள்ளது.

மங்கள வாத்தியங்கள் ஒலிக்க மேற்படி வீதியூடாக வீதி உலாவரும் நாவலர் பெருமானுக்கு அப் பகுதி வாழ் மக்கள் பூரண கும்பம் வைத்து மலர் மாலை அணிவித்து பக்தி பூர்வமான வரவேற்பை அளிக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

இதேவேளை, நல்லூர் ஆலயத்தின் தெற்குப் பகுதியிலுள்ள காணி ஆலய அறங்காவலரினால் நாவலர் சபைக்கு கையளிக்கப்பட்டுள்ளது. அக் காணியினுள் பெரியதொரு அழகிய மணி மண்டபம் விரைவாக அமைக்கப்பட்டு அம் மண்டபத்தினுள் நாவலர் பெருமானின் உருவச் சிலையை பொது மக்கள் பார்வையிட்டு வணங்கி மரியாதை செலுத்தக்கூடிய விதத்தில் பிரதிஷ்டை செய்யப்படும்.

மேலும் நல்லூர் உற்சவ காலத்தில் அடியார்கள் எதிர்நோக்கிவரும் சிரமங்களைப் போக்கி ஆலய சூழலை அழகுபடுத்தும் பொருட்டு நாவலர் மணிமண்டபத்தினை சுற்றி அமைக்கப்பட்டிருக்கும் எல்லைச் சுவர் இன்று திங்கள் இரவு அகற்றப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன் - என்றுள்ளது. (ஒ)

# குழந்தைகளைப் பிரசவித்தவுடன் கைவிட்டுச் செல்லும் தாய்மார்

## திருமலை, கிளிநொச்சியில் சம்பவங்கள்

கொழும்பு, ஓக. 30

தாய்மார்கள் தாம் பிரசவித்த குழந்தைகளைக் கைவிட்டுச் சென்ற இரு சம்பவங்கள் திருகோணமலையிலும், கிளிநொச்சியிலும் இடம்பெற்றுள்ளன.

திருகோணமலை அன்புவழிபுரம் பகுதியில், பிறந்து இரண்டு நாள்களேயான சிசுவின் சடலம் ஒன்றை பாழடைந்த கிணறு ஒன்றிலிருந்து உப்புவெளி பொலிஸார் சனிக்கிழமை மீட்டனர்.

குறித்த பிரதேச வாசிகளிடமிருந்து கிடைத்த அநாமதேய தொலைபேசி அழைப்பை அடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் சிசுவின் சடலத்தை மீட்டனர் என உப்புவெளி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

இச்சம்பவம் தொடர்பாக விசாரணை மேற்கொள்வதற்கு நியமிக்கப்பட்ட விசேட பொலிஸ் குழுவினர் திருகோணமலை மாவட்டத்தில் இம்மாதம் குழந்தை பிரசவித்த தாய்மார்களின் விவரங்களை வைத்தியசாலை அதிகாரிகளிடம் கேட்டுள்ளனர்.

அதுமட்டுமன்றி, வேறு இடத்திலிருந்து இச்சிசு கொண்டுவந்து இங்கு போடப்பட்டிருக்கலாம் எனச் சந்தேகிக்கின்ற பொலிஸார் பொதுமக்களின் உதவியைக் கோரியுள்ளனர்.

இதேவேளை, கிளிநொச்சி வைத்தியசாலையில் பிறந்த குழந்தையொன்று அநாதரவாகக் கைவிடப்பட்டுள்ளது. இக் குழந்தையைப் பெற்றெடுத்த பெண் தலைமறைவாகிவிட்டார் என வைத்தியசாலை அதிகாரிகள் தெரிவித்தனர்.

குறித்த பெண் போலியான பெயர் விவரங்களை வைத்தியசாலையில் கொடுத்துள்ளார் என்றும் அப்பெண்ணை தேடிக் கண்டுபிடிப்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது என்றும் அவர்கள் தெரிவித்தனர். (ஒ-சி)

# வடக்கின் வீதி அபிவிருத்திப் பணிகளுக்கு ஆசிய வங்கி ரூ. 17.8 பில்லியன் நிதி உதவி.

கொழும்பு, ஒக.30

வட பகுதி வீதிகளை இணைக்கும் திட்டத்துக்கென ஆசிய அபிவிருத்தி வங்கியானது 154.4 மில்லியன் அமெரிக்க டொலரை (ரூ.17.8 பில்லியன்) கொடுத்து இருக்கின்றது. இத்திட்டத்துக்கான முழு முதலீட்டுச் செலவு 173 மில்லியன் அமெரிக்க டொலராகும். இதில் 18.6 மில்லியன் அமெரிக்க டொலர் முதலீடு இலங்கை அரசாங்கத்தினுடையதாக இருக்கும்.

இத் திட்டத்தின் பிரதான நோக்கம் யாதெனில் வட மாகாணத்துக்குள்ளேயே வீதி இணைப்புக்களை மேம்படுத்துவதுடன் தென்பகுதியுடனான வடக்கின் இணைப்புக்களையும் மேம்படுத்துவதாகும்.

வட மாகாணத்தில் 108 கிலோ மீற்றர் தூரமும் வட மத்திய மாகாணத்தில் 62 கி.மீ தூரமும் உள்ளடக்கிய 170 கி.மீ. தூரம் அபிவிருத்தி செய்யப்படுவது இத் திட்டத்தின் நோக்கமாகும். சுமார் 140 கிலோ மீற்றர் மாகாண வீதிகளும், தெரிவு செய்யப்பட்ட பாலங்களை புனரமைத்தல் அல்லது மீளக் கட்டியெழுப்புவதும் இதில் அடங்கும்.

இது தொடர்பான கடன் ஒப்பந்தமொன்று நேற்றுமுன்தினம் திட்டமிடல் மற்றும் நிதி அமைச்சில் கையெழுத்திடப்பட்டது. அரசாங்கத்தின் சார்பில் திட்டமிடல் மற்றும் நிதி அமைச்சின் செயலாளர் டாக்டர் பி.பீ.ஜயசுந்தரவும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் சார்பில் அதன் வதிவிட பணிப்பாளர் டாக்டர் றிச்சாட் வோக்ஸூம் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர். (ஒ-ப)

**கிளிநொச்சியில் 48 ஆயிரம்...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த மீளாய்வுக் கூட்டம் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தலைமையில் கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் நேற்றுக் காலை 9.30 மணியளவில் ஆரம்பமானது. இதில் மின்சக்தி மற்றும் எரிபொருள் அமைச்சர் சம்பிக்க ரணவக்க, பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுகைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ. சந்திரசிறி, மீள்குடியேற்ற அமைச்சின் செயலாளர், ஜனாதிபதி துரித செயலணிக் குழுவின் செயலாளர், கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர், திணைக்களத் தலைவர்கள், பிரதேச செயலர்கள் ஆகியோர் பங்கேற்றனர்.

இதன்போது கிளிநொச்சி மாவட்டத்தில் மீள்குடியேற்றத்தின் பின்னரான நிலைமைகள் ஆராயப்பட்டு, எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் தீர்மானிக்கப்பட்டது. இந்த மீளாய்வுக் கூட்டத்தின் போது எடுக்கப்பட்ட முக்கிய முடிவுகள் வருமாறு:

* பெரும்போக நெற்செய்கையை 48 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் மேற்கொள்வதற்கு அனுமதி அளிப்பதோடு இந்தப் பெரும்போக நெற் செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கு விதைநெல், உரவகை என்பவற்றை மானிய அடிப்படையில் வழங்குதல்.
* செப்ரெம்பர் மாத இறுதிக்குள் கிளிநொச்சி மாவட்டத்தில் கண்ணிவெடி அகற்றும் பணிகளைப் பூர்த்திசெய்து, அந்த இடங்களில் எஞ்சியுள்ள மக்களையும் மீள்குடியேற்றுதல்.
* ஏ - 9 வீதியின் இரு மருங்கிலும் சேதமான நிலையில் காணப்படும் பொதுக் கட்டடங்களைத் துரிதகதியில் புனரமைத்தல்.
* மீள்குடியேற்றப்பட்ட மக்களுக்கான உதவிகள் யாவும் சரியான வகையில் சென்றடைவதை உறுதிப்படுத்துதல்.
* கிளிநொச்சி மாவட்டத்தில் மீள்குடியேறிய மக்களுக்காக இந்திய அரசாங்கத்தால் நிர்மாணிக்கப்படவுள்ள 12,500 வீடுகளை அமைப்பதற்குத் தேவையான ஒத்துழைப்புகளை வழங்குதல்.

- என்பனவே நேற்று நடைபெற்ற மீளாய்வுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முக்கியமான தீர்மானங்களாகும் என கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தெரிவித்தார்.

இதேவேளை இதுவரையும் 33 ஆயிரத்து 652 குடும்பங்களைச் சேர்ந்த ஒரு லட்சத்து 6 ஆயிரத்தி 222 பேர் கிளிநொச்சியில் மீள்குடியமர்ந்துள்ளனர் என்றும் இவர்களுக்கான வாழ்வாதார வசதிகளை தொடர்ந்தும் உரிய முறையில் வழங்கநடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ இக் கூட்டத்தில் தெரிவித்தார். (ஒ-எ-405)

## மரண அறிவித்தல்

### திருமதி சின்னத்துரை சிவகாமி



காரைநகர், பொன்னம்பலம் வீதியைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம், 74, சிவன் பண்ணை வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சின்னத்துரை சிவகாமி நேற்று (29.08.2010) ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதி சின்னத்துரையின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சிவபாதம் (இலங்கை வங்கி, யாழ்.2ஆம் கிளை, வாடிக்கையாளர் சேவை, முகாமையாளர்) மற்றும் கந்தசாமி, சற்குணராசா (முகாமை உதவியாளர், வலயக்கல்வி அலுவலகம், வலிகாமம்), மகேஸ்வரி (பாரெய்ன்), சிவராசா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் தேவகி, கேதீஸ் வரி, மோகனா, சாந்தினி, நாகேந்திரம், சித்திரா ஆகியோரின் மாமியாரும் தவச்செல்வி, தவறஜனி, தவவதனி, கீதாஞ்சலி, கார்த்திகா, ராம்சன், ரங்கன், திருமகள், காருண்யா, கஜந்தன், கஸ்தூரி, தயாழினி, தவகுமார், மனோகுமார், மதுரா, சரண்யா, தரண்யா ஆகியோரின் பேர்த்தியும் கிரீஷிகன், கோபிகன், பைரவி, ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.08.2010) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பி.ப. 4 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*74, சிவன்பண்ணை வீதி,*
*யாழ்ப்பாணம்.*

(ஓ/570457)

தகவல் :
சி.சற்குணராசா (மகன்).

## முதலாம் ஆண்டு நினைவுகளில்

மலர்வு 12 ★ 09 ★ 1945



உதிர்வு 30 ★ 08 ★ 2009

**தோமஸ் ஜேம்ஸ்**

**(ஓய்வுபெற்ற இலங்கை மின்சார சபை ஊழியர்)**

*யாதுமாய் நின்ற எங்கள் அப்பா - உங்கள் அன்பிற்கு*
*யாசகர்களாய் எமை மாற்றி*
*மீளாத்துயரில் எம்மை ஆழ்த்திவிட்டீர்கள்*
*பிள்ளைகளின் பாசத்தால் - பிரிவு தாங்காது*
*சொல்லொணாத் துயரை அனுபவித்து,*
*அன்பின் ஆழத்தை உணர்த்தி விட்டீர்கள்.*
*நாம் இனிப் பிரியோம் ........*
*இணைவோம் என்றோ ஒருநாள் - அதுவரை*
*உங்கள் பிரிவு கூட எமக்கு புரியாததுதான்.*

*இல. 11, முனாய் லேன்,*
*கண்டுக்குளி,*
*யாழ்ப்பாணம்.*

பிரிவால் துயருறும்
அன்பு மனைவி,
பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூஸாவிலுள்ள 12 பல்கலைக்கழக மாணவர்களை விரைவாக விடுவிக்க நடவடிக்கை எடுங்கள்

## அமைச்சர் திஸநாயக்கவிடம் நேற்று மனு கையளிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 20

பூஸா முகாமில் தடுத்துவைக்கப்பட்டுள்ள 12 பல்கலைக்கழக மாணவர்களை விரைவாக விடுவிப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று கோரி யாழ்.பல்கலைக்கழக மாணவர் பிரதிநிதிகள் நேற்று உயர்கல்வியமைச்சர் எஸ்.பி.திஸநாயக்காவிடம் மனு ஒன்றைக் கையளித்தனர்.

யாழ்.பல்கலைக்கழகத்துக்கு வந்த உயர் கல்வியமைச்சர் எஸ்.பி.திஸநாயக்காவை அங்கு மாணவர் பிரதிநிதிகள் சந்தித்து உரையாடினர்.

மனுவில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்கள் வருமாறு:

* பூஸா தடுப்பு முகாமில் உள்ள 12 பல்கலைக்கழக மாணவர்களும் விடுவிக்கப்பட்டு தமது கல்வியை மீளவும் தொடர நடவடிக்கை எடுக்க வேண்டும்.

* பல்கலைக்கழகத்தின் அனைத்து வருட மாணவர்களுக்கும் விடுதி வசதிகளை வழங்குவதுடன் விடுதிகளின் உட்கட்டமைப்பு வசதிகளையும் அதிகரிக்க வேண்டும்.

* விவசாய பீடத்தை மீளவும் கிளிநொச்சியில் ஆரம்பிக்க விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்- என்றுள்ளது.

இதேவேளை சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட பேராதனைப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பொறியியல் பீட மாணவியான பா.துவாரகாவை விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்குமாறு கோரி அவரது சகோதரி மகஜர் ஒன்றுடன் அங்கு வந்திருந்தார். எனினும் அவரின் மகஜரை வாங்கத் தமக்கு நேரமில்லை எனக் கூறிய அமைச்சர் அவரை நாளை (இன்று) வருமாறு கூறிவிட்டு அங்கிருந்து சென்றுவிட்டார் - என்றும் தெரிவிக்கப்பட்டது.

## ஐ.தே.க......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தீர்மானத்தை எம்மிடம் தெரிவித்திருக்க வேண்டும். ஆனால், அவ்வாறு செய்யவில்லை.

நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி முறைமை நீக்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் எமது கட்சி இருக்கின்றது. அதே நிலைப்பாட்டில்தான் முஸ்லிம் காங்கிரஸும் இருந்தது. ஆனால், இப்போது அந்த முறைமையை நீடிப்பதற்கு ஆதரவு வழங்க முஸ்லிம் காங்கிரஸ் முன்வந்துள்ளது.

இது தொடர்பாக அடுத்த வாரமளவில் எமது கட்சி முஸ்லிம் காங்கிரஸுடன் பேச்சு நடத்தும் - என்றார். (ஒ-சி)

## கொழும்புக்கு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆகியோரையும் சந்தித்துப் பேச்சு நடத்துவார்.

இவர் இலங்கை வருவதற்கு பத்து நாள்களுக்கு முன்னர் தமிழகம் சென்று முதல்வர் கலைஞர் கருணாநிதியைச் சந்தித்து இலங்கை விவகாரங்கள் குறித்துப் பேச்சு நடத்தி இருந்தார்.

இந்திய அரசு இலங்கையில் யுத்தத்தால் இடம்பெயர்ந்த மக்களின் நலன்புரிக்கென வழங்கும் நிதி அம்மக்களைச் சென்றடைகின்றதா என்பதைக் கண்டறியக் குழு ஒன்றை இலங்கைக்கு அனுப்பிவைக்க வேண்டும் என்று கலைஞர் கருணாநிதி இச் சந்திப்பின்போது வலியுறுத்தி இருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

வடபகுதி விஜயத்தின் போது மீள்குடியமர்த்தப்பட்ட மக்களின் வாழ்க்கை முறையையும் இந்திய உதவிகள் வன்னியில் எவ்வாறு பயன்படுத்தப்படுகின்றன என்பதையும் ஆராய்வார் எனவும் இந்தியத் தூதரக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்திய வெளியுறவுச் செயலாளர் நிருபமாராவ் இலங்கையின் இந்தியத் தூதுவராகக் கடமையாற்றி உள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் இருக்கும் நாள்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர்களையும் அவர் சந்தித்துப் பேசுவார் எனவும் அவ்வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (ஒ-சி)

## யாழ்.பல்கலைக்கழகத்தைச்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

**விவசாய, பொறியியல் பீடங்களை மேம்படுத்த இந்தியா உதவும்**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பொறியியல், விவசாய பீடங்களை அபிவிருத்தி செய்வதற்கு இந்தியா உதவமுன்வந்துள்ளது. விவசாய பீடத்தை கிளிநொச்சியில் மீளவும் இயக்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

விவசாய பீடத்தின் ஒரு பகுதியாக விலங்கு வேளாண்மைத் துறையையும் கொண்டு வருவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இதற்காக கிளிநொச்சியில் காணியொன்றை ஒதுக்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் மருத்துவ பீடத்துடன் இணைந்திருந்த "இணைந்த சுகாதாரக் கல்வித்துறை" இனிவரும் காலங்களில் தனியொரு பீடமாகச் செயற்படும். தவிர மருத்துவபீடத்தில் காணப்படும் கல்விசார் உத்தியோகத்தர்களின் வெற்றிடங்களை நிரப்புவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.

கலைத்துறையைச் சேர்ந்த பட்டதாரிகள் 3 மொழிகளிலும் தேர்ச்சி பெற்றவர்களாக வெளியேறுவதற்கு மொழிபெயர்ப்புத் துறையை மேம்படுத்த நடவடிக்கைகளை எடுப்பேன்.

**ஜனாதிபதி விரைவில் வருவார் யாழ்ப்பாணத்துக்கு**

இதற்காக பல்கலைக்கழகத்துக்குத் தேவையான அனைத்து வசதிகளையும் செய்து கொடுக்க ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தயாராகவுள்ளார். அதற்குத் தேவையான விவரங்களையும் தகவல்களையும் திரட்டுவதற்காக விரைவில் அவர் யாழ்ப்பாணம் வரவுள்ளார். அப்போது யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சமூகத்தவர்களை நேரில் சந்தித்து உரையாடுவார்.

வடபகுதி மக்கள் கடந்த 30 ஆண்டுகளில் அனுபவித்த துன்ப, துயரங்களை நான் நேரில் காணாவிட்டாலும், பிறர் கூறுவதைக் கேட்டு நன்றாகப் புரிந்துகொண்டுள்ளேன். யாழ்ப்பாண மக்கள் மீது எனக்கு அதிகமான அன்பும் பரிவும் உண்டு.

இலங்கையில் வசிக்கும் அனைத்து இனமாணவர்களினதும் உயர் கல்வி நிலையமாக மாறுவதோடு தென்னிலங்கை மாண வர்களும் வடக்கு மாணவர்களும் ஒன்றிணைந்து இந்தப் பல்கலைக் கழகத்தை முன்னேற்ற வேண்டும்.

வைத்தியர்கள், பொறியியலாளர்கள், சட்டவாளர்கள், சிந்தனையாளர்கள் எனப்பல துறைசார்ந்தோரை உருவாக்கும் நிலையமாக இந்தப் பல்கலைக்கழகம் திகழவேண்டும்.

**கடந்தகால நிகழ்வுகளை மறந்து ஒன்றிணைவோம்**

கடந்த 30 வருடங்களில் நிகழ்ந்த யுத்தத்துக்கு சில சிங்கள, தமிழ் தலைவர்களும் மதகுருமார்களும் காரணகர்த்தாக்கள். யார், யார் செய்தார்கள் என்பதையெல்லாம் நாம் மறந்து அனைவரும் ஒன்றிணைய வேண்டும். யாழ்ப்பாணத்து மக்கள் தங்களின் துயரங்கள், இழப்புகளுக்கு மத்தியிலும் கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்துவரு வது வியப்புக்குரியது - பாராட்டுக்குரியது. யுத்தம் காரணமாக தமது உடல் உறுப்புக் களை இழந்தவர்கள், பல்வேறு வகைகளில் பாதிக்கப்பட்ட மாணவர்கள் மனம் தளராது இன்று பல்கலைக் கழகத்தில் கல்வியைத் தொடர்வது மகிழ்ச்சியளிக்கிறது.

**துணைவேந்தருக்குப் பாராட்டு**

யாழ். பல்கலைக்கழகத்தில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மாணவர்கள் பலரும் கல்விகற்று வருகின்றனர். திருமணத்தினாலும், உறவுகளை இழந்ததாலும் தமது கல்வியைத் தொடர முடியாது கல்வியை இடைநிறுத் திய பல மாணவர்கள் இன்று மீண்டும் கல் விகற்க இணைந்துள்ளனர்.

இவ்வாறான மாணவர்களை மீளவும் இணைப்பதற்கானபல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் எடுத்த முடிவுகள் மகிழ்ச்சிக் கும் பாராட்டுக்கும் உரியவை - என்றார். (ஒ-6-14)

## முஸ்லிம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடத்தியுள்ளோம் என்று மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத் திரன் நேற்று 'உதயனு'க்குத் தெரிவித்தார். (ஒ-சி)

## ஐ.நா. செயலாள....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பான் கீ மூனால் நியமிக்கப்பட்ட நிபுணர்கள் குழு செப்ரெம்பர் முதல் வாரத்தில் கூடுகிறது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் குழு நியூயோர்க்கில் கூடவுள்ளது எனவும், அமர்வுகள் நடைபெறவுள்ள இறுதித் திகதி இன்னமும் தீர்மானிக்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஜூலை மாதம் 19ஆம் திகதி முதல் தடவையாக இந்தக் குழு இலங்கை விவகாரம் குறித்த அமர்வுகளை நடத்தியிருந்தது.

நான்கு மாதங்களுக்குள் இந்தக் குழுவின் அறிக்கை ஐக்கிய நாடுகளின் பொதுச் செயலர் பான் கீ மூனுக்கு சமர்ப்பிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## ஐ.நா.சபை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அங்கு செல்லும் ஜனாதிபதியுடன் முக்கிய வர்த்தகர்கள் பலரும் செல்கின்றனர். அவர்கள் அங்குள்ள வர்த்தகர்களுடன் பேச்சு நடத்தி இலங்கையில் வெளிநாட்டு முதலீட்டை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பர் என்று அரசு கூறுகின்றது. இந்த விஜயத்தின்போது ஜனாதிபதி மெக்சிக்கோவுக்கும், ஜேர்மனிக்கும் தனிப்பட்ட விஜயங்களை மேற்கொள்வார்.

ஐ.நாவின் பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் ஜனாதிபதி, இலங்கையில் புலிகள் இராணுவ நடவடிக்கைகளால் தோற்கடிக்கப்பட்ட விதம் பற்றி விளக்கமளிப்பார் என்று வெளிவிவகார அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

அதேபோல், செப்டெம்பர் 22ஆம் திகதி ஆரம்பமாகும் 'மிலேனிய அபிவிருத்தி இலக்குகள்' என்ற தலைப்பிலான மூன்று நாள் கூட்டத்திலும் ஜனாதிபதி கலந்துகொண்டு உரையாற்றுவார்.


**புதிய பிரிவுகள் ஆரம்பம்**

**AAT (Srilanka)**
Foundation level & Intermediate level & Final
க.பொ.த (சா.த) பரீட்சையில் 6 சித்திகளுடன் உங்கள் பதிவினை மேற்கொள்ளலாம்

**மருந்தாளர் (வெளிவாரி) பரீட்சை**
PHARMACIST (EXTERNAL) Examination course
(Ceylon Medical College Council, University of Colombo)
கல்வித்தகமைகள் :- GCE O/L ஆங்கிலபாடம் சித்தி GCE A/L இரசாயன பாடம் உட்பட மூன்று விஞ்ஞான பாடங்களில் சித்தி
விரிவுரைகள் :- சனி ஞாயிறு (காலை 8.30-பி.ப1.00 மணிவரை)
புதியபிரிவு ஆரம்பம் :- 28-08-2010
மீட்டல் வகுப்பு ஆரம்பம் :- 05-09-2010 (2010 ஆண்டு பரீட்சைக்கானது)

**CERTIFICATE COURSE IN ENGLISH**
Course commencing on
06-09-2010 8.30 am Week day batch
04-09-2010 8.00 am Week end batch

**External Degree** (Jaffna Univercity)
GAQ, BA 1 & BA Final
1st in com,Bcom (1&11), Final

**வங்கியியல் கற்கைநெறிகள்**
**.CBF,DBF**
அடிப்படைத்தகமைகள்
G.C.E( O/L) 06 PASSES with 05 Credits including Maths/Commerce & Accounts, and Language (Tamil/English)

**Chartered Accountancy**
Foundation level & Intermediate level
Minimum Requirement :- GCE A/L 3 Passes

Furthur Detail
Director
Jaffna College Undergraduate Dept.
464, Hospital Road,
Jaffna.



**புதிய பிரிவுகள் ஆரம்பம்**
**90% Scholorship**
SMS your name & course to 0772 395 895
Diploma Courses...
*MS Office *Accounting *Graphics 3D *Printing & Typing,Kids Programs *Web Designing *Video Editing *AutoCAD *VB.net,LINUX,ICT,
International Courses...
Computer Engineering-USA,CIMA-UK, IELTS / Toefl, Cisco-CCNA,CCNP,ICDL-CAD, BCS, Sun Java programmer, Red Hat Engineer,
Degree Course-BIT-University of Colombo
Free ICDL,BCS,Hardware,English,Internet & Email
உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உயர் வேலைவாய்ப்பு
Closing Date 01.09.2010
MCS 324,Palaly Road,Parameswara Junction
Web site : www.mcsitcampus.org



**ஆங்கில மொழியில் தரமான மூன்று நூல்கள்**
Three Guide Books to better Your Writing Skills
ஆக்கியோன்: த.நடனசபாபதி
01. Beginnings of Writing Composition for Grades Six to Nine
02. Writing Letters in English
03. 165 Model Essays
யாழ்.நகர் முன்னணி புத்தகசாலைகள் அனைத்திலும் கிடைக்கும்.



**SPECIAL ENGLISH**
★ A Comprehensive Course for all
★ Covers all Language skills
★ ஆரம்ப நிலையிலிருந்து தரமான உச்சரிப்புடன் பேச, வாசிக்க, எழுத பயிற்சிகளுடன் கூடியது
★ இலகுமுறையில் பூரண இலக்கண விளக்கம்
★ ஆங்கில இலக்கியத்தை தழுவிய பாட அலகுகள்
★ Intensive Practice with Printed Lessons
★ வார இறுதி வகுப்புகள் - மு.ப : 10.30- 12.30
ஆரம்பம் 04.09.2010 சனிக்கிழமை
ஆசிரியர்: த.நடனசபாபதி
விபரங்களுக்கு: The Director - New Science Hall, Kannathiddi



யாழ் நகரில் இருந்து 5Km தூரத்தில் நவாலி தெற்கு அரசடியில்
**— காணி விற்பனைக்கு —**
மேலதிக விபரத்திற்கு தொடர்புக்கு: 077 210 6194



**வேலையாள்கள் தேவை**
யாழ்.நகரில் முதல் தரம் (No-01) HOTELS & RESTAURANT க்கு உணவு பரிமாறுபவர் (பெண்), ஆண் காவலாளி தேவை.
ஆசீர்வாதம் லேன், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு : 0212221686 0212224385



**வேலைக்கு ஆள்கள் தேவை**
மானிப்பாயில் இயங்கும் கணனி நிறுவனம் ஒன்றிற்கு கணனி அறிவுடையோர் தேவை. மானிப்பாயில் இருப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். உங்களது சுயவிவரக் கோவையினை 05.09.2010 இற்கு முன்னர் அனுப்பி வைக்கவும்.
தொடர்புகளுக்கு: Micro System Development Centre
Jaffna Road, Manipay.
T.P.: 021 3218462, 0772487082



**சுகாதார முகாமைத்துவ உதவியாளர் பரீட்சைக்கான விசேட கருத்தரங்கு**
ஆரம்பம் 31.08.2010 செவ்வாய் காலை 9 மணி.
செவ்வாய், புதன், வியாழன் காலை 9மணி தொடக்கம் ஒரு மணிவரை யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புக்கள் பிரிவில் [யாழ். போதனா வைத்தியசாலை எதிரே நடைபெறும்]
இப்பரீட்சைக்கான தவசேகர் ஆசிரியரின் வழிகாட்டி நூல் ரூபா 200. பிரபல புத்தக நிலையங்களிலும் வகுப்பிலும் பெற்றுக்கொள்ளலாம்.


**பெற்றுக்கொள்ளவும்**

இலங்கை கிரிக்கெட் சபையால் வழங்கப்பட்ட Under 13 கிரிக்கெட் அணிகளுக்கான கிரிக்கெட் பந்துகளை இதுவரை பெறாதவர்கள் யாழ்ப்பாணக்கல்லூரி பட்டதாரிப் பிரிவில் பெற்றுக்கொள்ளுமாறு யாழ்.மாவட்ட கிரிக்கெட் சங்கத்தலைவர் தெரிவித்துள்ளார்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் [illegible] கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 30.08.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org